GOVERNMENT ORIENTAL MANUSCRIPT LIBRARY

INDEXING FOR TAMIL MANUSCRIPT

Sl. No.	Particulars	Details
1	Language	TAMIL
2	Material	Paper Mss.
3	Bundle Number	TR 1298
4	Work Number	R 7159
5	Page No from to..	1 to 128
6	Name of the Work in English	Kurunthogai Pozhipuraiyudan
7	Name of the Work in Tamil	குறுந்தொகை பொழிப்புரையுடன்
8	Subject	Literature

٦٤١٣

உ

குறுந்தொகை

(பவானந்தம் பிள்ளை பொழிப்புரை)

R No 5752.

தொடக்கம் தேதி 9.2.58.

முடிவு தேதி. 17.2.58.

Copied by. M.R. Sivaprakasam Pillay

Restored in 1957-58 from the manuscript described Under R. No. 5752.

௨

கடவுள் துணை.

சிவமயம்

குறுந் தொகை.

காப்பு

௧.

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
னெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
வேம வைக லெய்தின்றா லுலகே.

எ-து. கடவுள் வாழ்த்து; பாரதம் பாடிய பெருந்தேவனார்.

இதன் பொழிப்புரை.

தாமரையை யொத்த விருப்பமிக்க சேவடியையும், பவளம் போன்ற மேனியை யும், விளங்கிய சிவந்த வொளியினையுடைய குன்றிமணியை யொத்த உடையினையும், கிரவுஞ்ச மலையின் மார்பு பிளக்கு மாறு வீசிய அழகிய அடரையுடைய நெடிய வேற்படை யையு முடைய சேவற் கொடியோனை முருகவேள் காத்தலானே இவ்வுலகு காவலொடு வைகலை யெய்தின்று.

ஆதலானிதனுக் கொரிடையூறு மில்லை யென் றவாறு.

2. ## நூல்

I செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

எ-து. தோழி கையுறை மறுத்தது.
திப்புத் தோளார்.

உரை:- போர்க்களத்தினிறக்குமாறு கொன்று அவுணரை யழித்த இரத்த கோலாகிய அம்பினையும் செம்மையாகிய கோட்டினையுடைய பிணிமுக மென்னும் யானையினையும் உழலுந் தொடியினையுமுடைய முருகவேளின் குன்றமானது குருதி போன்ற செந்நிறத்தை யுடைய பூங்கொத்துக்களை யுடைய காந்தளைத் தன்னிடத்தே கொண்டுள்ளது காண். (எ-று).

சேட்படுத்த வழிக் கையுறையொடு சென்ற தலைமகன் காந்தட்பூக் கண்ணி கொடுப்பக் கொள்ளாளாய்த் தோழி எம திறைவன் குன்றத்து மிக்கிருத்தலின் யாம் இவற்றாற் குறைவில மெனக் கொண்டு கூறினாள். இது செய்யுள் முடிந்தவழியும்
3 இவற்றில் யாங் குறையுடையே மல்லேமெனத் தலைவற்குக் கூறலிற் கூற்றெச்சமாயிற்று. இனித் தலைமகளை இடத்துய்த்து நீங்கிற் தோழி தலைமகட்குக் கூறியதாகக் கொண்டு இடத்

துய்த்து நீக்கிய குறிப்பினளாகி அது தான்
கூறுமாகலின் என்க.

பாலை-

4. உ. கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே.

எ-து. இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த வழித் தலைமகன். இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடுபட்டு நின்ற தலைமகள் நாணினை நீக்குதற் பொருட்டு மெய் தொட்டுப் பயிற்றல் முதலாயின அவன் மாட்டு நிகழ்த்திப் பாகுபொற்றற் கூடிய அன்பு தோன்ற நலம் பாராட்டியது.

இறையனார்.

பொ-ரை:— தேனிருக்கு மிடத்தை யாராய்ந்துண்டு வாழும் வாழ்க்கையினையுடைய அழகிய சிறகுகளையுடைய வண்டே! யான் உசாவுதற்கு ஆசைவார்த்தை கூறாமல் நீ கண்டதனையே கூறுவாய்; பொருந்தியிக்கின்ற நிமிர்த்தும் விளங்கிய நட்பினை மயில் போன்ற சாயலினையும் செறிந்த பற்க
5. ளையுடைய அரிவையின் கூந்தலினும் காட்டுல் நீ அறியும் மலர்களில் நறிய மலரு முள்ளனவோ! உளவேற் கூறிக்காண்; (எ-று)

தும்பி - முன்னிலைப் பொருள்கள் - தொண்டு மொ
ழிமோ வென்றது சொல்லப் பணித்தல்.
கூறித்து....முலைவோ, வென்றது நாணமுமொ
த்தல். என்னிலத்து வண்டாதலின் எனவிக்க
கக்கூறுது மெய்க்குறறைத் தன்னிடம் வைத்து
வாகக் கூறி இடம் அளித்தலைப் புலப்படுத்த
லொண்டுக் காமஞ் செப்பாது என்றது- பயிலி
யது கட்டென்றது தங்கிய புணர்த்தல்.
[தொ. பொ- 196] ல் "சொல்லா மரபி னவற்
றொடு கெழீஇச், செய்யா மரபிற் றொழிற்
படுத்தடக்கியும்" என்ற விதிப்படி வண்டிப்
புள்ளை நோக்கி உவமைபற்றிக் கூறியது.
மெய்ப்பாடு - உவகை. பயன் - நயப்புணர்த்தல்.

6. 3. நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

எ-து, தலைமகன் சிறைப்புறமாக அவன்
வரைந்து கொள்ளுதல் வேண்டித் தோழி
இயற்பழித்த வழித் தலைமகள் இயற்பட மொழிந்தது.

தேவகுலத்தார்.

உரை:- சாரலின் கட் கரிய இலையையுடை
ய குறிஞ்சியின் மலரைக் கொண்டு பெரிய
தேனைச் சொரியாநிற்கும் நாடனொடு யான்
கொண்ட நட்பானது, நிலத்தினுங் காட்டில்
அகலமுடைத்து; வானினுங் காட்டில் உயர்வுடை
த்து;

கடனின்றாம் காட்டில் திரிகின்ற ஆதுமுடை
த்துக் காண்; (என்பதாறு).

இது நாண்டுழை — தமது கோடு இரு துதிப்
பூக் கொண்டு மகிழ்ந் திதனிலைக்கு நட
னைத்தது சோனை முதலிய நிறைய வாய நாட்டு
வழி முறை முறையால் மகிழ்ந் தெனத்தவாறு.
இனி இவ்வினைப் பொருளாக இதனில்
கோடு இருந்தப் பூக் கொண்டு மகிழ்ந்து
7. நிலைத்தாற் போல வழி முறை முறையால்
மகிழ்ந்து பல ஆகிய நாட்டு. மற்றவர்க் கண்
உற்ற ஆணை நிலைத்தன தலம் போலவும்
கிடைத்தியதால் போலவும் கடலின் தூம்
போலவும் நெடிகலே மகிழ்ந் தென்னுமால்.

மெய்ப் பாடு தன் கட்டேடன் றிய நாமத்
தை பற்றிய வியப்பு. பய, —

8.- 4. கோமேவு நெஞ்சே கோமேவு நெஞ்சே
யிமை நீயப் பன்னா தண்ணளி நாங்கி
யமைத்து சாமந்தி நால் தகிர்
நிமைவில நாகு சேய் டென் நெஞ்சே.

எ-து, பிரிவிடையாற்று நெஞ்சைக்
கிளைத்த தொழுக்கிக் கிழத்தி யுரைத்தது.

காமஞ் சேக் கெடுத்தல்.

பத-ரை:- என் நெஞ்சம் நோவாநின்
றது; என் நெஞ்சம் நோவாநின்றது; என்
மன் பொருந்து தங்கு அமைந்த பெருந்தகை
யா பொருந்தி நாதெல (பிரிதல்) க் கருதி

அமைமையைத் தீய்த்தவைத்து கொண்ணி
னைத் தாங்கி என் னெஞ்சம் நோகா
நின்றது (எ-று) அடைதல் - பொருந்துதல்;

9 - 5. அதுகொல் தோழி காம நோயே
வதிகுருகு உறங்கும் இன்னிழற் புன்னை
உடைதிரைத் திவலை அரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லிதழ் உண்கண் பாடொல் லாவே.

எ - து, சிறைப்புறம். நரிவெரூஉத் தலையார்.

பொருள்:- தோழி! இனிய நிழலைத்
காலை மடக்கிய பறவை உறங்குதற் கிடமாகிய
இனிய நிழலையுடைய புன்னையும் கரை
யின் மோதிப்பட்டு உடையுந் திரைகளது
(ஸ) [illegible] திவலை அரும்பிய நீரையுமுடைய மென்றிளைப்
புலம்பன் பிரிந்தானென்று பலவாய
நெய்தலிதழ் போன்ற மையுண்டகண்
கள் பாடுகொள்ளாதன; காம நோயென்பது
அதுதானோ? கூறுக காண்; (எ-று)

வதிதல் - தங்குதல். குருகு - நாரை;
தலைவனைப் பிரிதலால் கண் படை கொள்ளாத
தலைவி பண்டு பிரிந்திலனாதலால் அது
கொல் காம நோயென்றாள் கேட்டு கொண்டு
10. 'குருகுறங்கும் புன்னையும் தீநீர்த்திவ
லையரும்பு தீநீருமுடைய னெனவே
காம நோய் தாங்கப்பெறாள் என்பதும் உணர்த்தி
னாம்: அவனையுடைய னென்றவாறு;

11. 6. நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்
தினி தடங்கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.

எ-து, வரைவிடை வைத்துப் பிரிந்த வழி ஆற்றாளாகிய தலைமகள் தோழியை நெருங்கிச் சொல்லியது. — பதுமனார்.

பொ-ரை:- இரவு யாமமும் பாதியாயின்றாம் அளவாயிற்று; மக்களும் தம் பேச்சை யொழித்து இனிதா யுறக்கத்திற் பொருந்தி யடங்கிவிட்டனர்; இடமகன்ற உலகம் மறுபாடின்றித் துஞ்சாநின்றதும்; யானொருத்தியுமே தனியத் துஞ்சுகிலேன் காண். (எ-று)

“[illegible]” [தொ-பொ-111] என்றபகுதியுள் அடங்குமாறு தெளித்துத் தோழி தலைவியை நோக்கிய பொழுது சென்ற இரவு என்றும் மாக்கள் இன்றும் துயின்றில ரென்றும் உலகமடங்கவில்லை யென்றும் கூறக் கேட்ட தலைவி யாமமும் கினள் என்றும் மாக்களுந் துயி
12. லன்றும் உலகமும் அடங்கியும் வாந் தில என்றுத் தோழியை யடுத்து வருந்திக் கூறிய வாறு காண்க.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றுவித்தல்.

13. 7. வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்

யான்தோ வலியள் தாமே யாரியர்
தவி நெடு மனையிற் கால்பொரக் கலங்கி
வாளை வெண்ணெற் றெறிந்த
கேய் பயி வடுவ முன்னி யோரே.

எ-து, இடைச் சுரத்துக் கண்டார் சொல்லியது.

பெரும்பதுமனார்.

பொருளுரை- ஆசிரியர் தோண்மேற் கோலிடம் பட்ட வெளிப்பிக்கும் பறை போலக் காற்று மோது தலானே மேலக்கப்பட்டு வாகையின் வெளிய னெற்றுக்கள் வெளியாகிற்கும் நெய் தின் மிக்க சுரத்திலேக் கடுந் தொழுமில் நில் வில்லி யுடையாருடைய காலடித்தா மிகக்கழல்; தொடியை யுடையாருடைய மெல்லிய அடிமேலுந் தவழ்ந் சிலம்புகளையாம்; ஆதலின் இக்கால் வினையை யுடையார் தாம் யாவர் கொல்லோ? நம்மால் அளிக்கத் தக்கார் காண்மின்; (எ-று)

தவம் என்பது அல்லோரிடத் தெற்றுகை மெய்ப்பாடு — பயன் —.

14. இனி இப்பாட்டு இடைச் சுரத்துக் கூறும் பிறர்லோர் இவர்க்கெலக் கண்டு தேர் இழைப் புற்றுகு அவர் பெண்டிர் கூறிய துமாம். அன்றிச் செவிலிக்குக் கண்டோர் கூறிய தென்றுமாம். இதில் [வில் லோனுந் தொடியோளும் போகின்றனப் படும்; முன் னியோர் என்பது அப்பொருளைத் தியான

(5.15)

இறந்த கால மெனப்படும்; (தொ. சொல். 245)

இலங்கு மெல்லடி மேலன வென்றதில் இன்னும் அதுவே செய்யுங்கால் செய்ய ப்படும் இலங்கு கழி தோன்றும் செய்யப்பட்டவை ளென்றும் தனித்து. பொருத்தத்தைத் தொ றதைக் காலிற் கொண்டு தலைக்கழியதுபற் றென்றும் அலங்கனாய் கனவி னொடுவே றோடொத்தி மெத்திலயாம் வியப்பொடு பார்ப்பன நகலின் நினைக்கக் கண்டார் கேட்டு நிகழ்ந்த தெனவும் கொள்க.

15. 8. கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மில்
கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் றாய்க்கே.

ம-து, இழைத்தி தன்னைப் புறனுரைத் தாளெனக் கேட்ட காதற் பரத்தை அ (ல)விக்குப் பாங்காயினார் கேட்பக் கூறியது.

ஆலங்குடி வங்கனார்.

பொ-ரை:- வயலருகிலுள்ள மாமரத்தி னின்று உதிரும் இனிய பழத்தினை அவ்வய லிலுள்ள வாளைமீன் கௌவித்தின்றுப் பகைத் தானின் ஊரன் எம்பால் நலனுரைத்துப் போந்தவிடத்துத் தன் 'யான் பொருந்தோ க்கினன்' என்று பெருமொழி கூறித்

தன் இல்லத்தின்கட் டான்சென்ற பொழுதெல்லாம்
தன் கையுங் காலையுந் தூக்கத் தூக்கும் கண்
ணாடியிற் பாவை போலத் தன் கணவற்குத் தாயாகிய
தன் மனைவிக்குப் பொருந்தாவாய வற்றைய
லோவினா வண்ணஞ் செய்யாநிற்கும்; அவன்
16. ஏவினவண்ணாற் காதலன் செய்தலால் அவள்
தருக்கி என்னை யிகழ்ந்தாள் போலும். (பாது)
உள்ளுறை:- மாமரத்தினின்று வீழ்ந்த
வாளை புதிதாகத் தாங்கனியைப் பெற்று
உண்டு மகிழ்ந்து வருந்தாது பலவகை இன்ப
மும் பெறுமூரனென்றவாறு. இஃது கிளவி
த்துறைகளி என்று (தொல். பொரு. 302) ஆதலிற்
படி கின்பக் கிளவி தோன்றச் சொல்லப்பட்டது.
17. 9. யாயா கியளே மாஅ யோளே.
மடைமாண் செப்பிற் றமியள் வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்முன் னாணிக் கரப்பா டும்மே.
என்பது, தலைமகற்குத் தோழி வாயில்
நேர்ந்தது. கயமனார்.
பொருள்:- நின் இல்லறத்துக்குரிய மனை
வியாயினாள் பேதைப்படுகின்ற செப்பிலிட்
டாத பூவைப் போலத் தமியளாய் நின் பிரிவா

ஞாண்டாகிய செக்கத் திறல் உடைய இமைப்பூர்
றவன்; பசிய இலை மிக்குயர்ந்த நிலைண்ட
தின் முதியுடைய நெய்தன் மலர் மின்னின்
மிக்க பெரிய கழிநீர் பெருகுந் தோறும் நீரிலே
முழுகின்று மாதர் கருவுடைய கண் கிடைப்
போலத் தண்ணிதின அமுங்காநிற்கும் தண்
ணிய துறையையுடைய நின்னாற் செய்
யப்பட்ட கொடுமையை யாங்காளிலத்தி
வைட்கும்ற்று அக்கொடுமையை யெல்லாம்
மறைக்கும் செயலிற் மேற்கொள்ளா நின்றோன்
அத்தகையான் இப்பொழுது மகளின்று அம்
மகளுக்கு இதயார் தன்னையென்று நினைக்கு
மகிழியா யொழுகுந் தன்னையாய் நல்லன்
காணன்; (எ-று) நின் கொடுமை யைக் காட்டு
மாதலா னின்பாற் புலக்குண்ணலென்றவாறு.

செப்பின் வைகிய பெய்யாப் புலின்தழி
யாள் என மறுக. கழிநீர் பெருகுந்தோறும்
நெய்தன் மலர் மூழ்கி யெழுதல் போல
நின் கிள்ளை வருந்தோறுந் தலைவி காமநோ
யால் திண்புரளுகின்றமென்றதாம். இவ்வா
றுறையாற்றுடன்பட்ட வாறுங் காண்க.

19. 10. பாயா இயலே விழுமுழு லாட்டே
பயறு போல் இணர பைந்தாது படீஇய
இலைவர் வாங்கிய கழைஞ்சு மென் சினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தனளாகலி னாணிய வருமே.

எ - து இதுவுமது. தோழர் கேளியார்.

பொ - ரை:- இல்லற நிகழ்த்துங் காதலன்பா
ரு நன்மைக் கெல்லாம் காரண முடைய
முதன்மை யுடையானே)- பயறுவனகிய அரு
ளுக் கனிந்த நூல் கொத்திலையுடைய பசிய
கொம்பும் உதிர்ந்து பட்டுப்படு மாக மன்னர்
வ கோத் திருத்த கழக்கின்ற நூக்க வினவிய
மெல்லிய கிளையை யுடைய காஞ்சி மரங்கள்
மிக்க துறையையுடைய நின்னூர் செய்யப்பட்ட
கொடுமைகளை யாங்கள் அறியாதபடி மறைக்
கின்றன ளாதலினவற்றை யாங்கள் இன்னா
தென்று ஆகாயப் புகின் அதற்கு வெட்க
முடையளாய் ஒதுங்ககிற்றிலம் அத்தன்
மையள் இப்பொழுது வீடு மகளிக்கு தாயாள்

20. தன்மை யளாயின (ஞாய் அன்று) நினைக்கு
யெள்ளுடு
வெண்டாற தன்மை யளல்லள்; இவள்;
நின் கொடுமையைக் காக்கு மாதலின் வன்நம்
புலக்குந ளல்ல ளென்ற வாறு. தாதுபடிய
மரது காஞ்சி மரத்தின் கிளையை உழவர்
வளையாநிற்ப வென்றது. தீ திலியின் துனி
தீர் கூட்டம் பெறும் பொருட்டு என்னை
வருத்தா நின்றனை யென்றவாறு.

21. 11. சோடெ நிலங்கிவிர கைகிழ நாளும்
பாடில கதழுமுங் கண்ணொடு புலம்பி
யீங்கிவ ளுழந்தது மயங்கெல மாங்கே
யெழிலினி வாடியே னெஞ்சே முடிதல்

குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே.

என்பது தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லியவாறாய்த் தோழி கேட்பச் சொல்லியது.

மாமூலனார்.

பொருள்:— என் நெஞ்சமே! நீ வாழ்வாயாக. முன்பே புல்லாகிய குஞ்சா விலையை மாலையிடை வைத்துக் கட்டி யணியும் வடுகர் போர் முனையிலுள்ள பல வேற் படையையுடைய கட்டி யென்பவனது நல்ல நாட்டின் மேலதாகிய மொழி மாறுபட்ட பிற தேயத்தினர் தன்னோ நம் காதலர் சென்றாராயினும் அவரை வழிபாடு செய்யக் கருதியிருக்கின்றேன். யானைக் கொம்பை யறுத்துச் செய்யப்பட்ட
22 இலங்கிய வளைகள் கழன்று விழும்படி யாம் மெலிவுற்று உருகி நாமலறிந்து கொண்டு இருந்து தன்னுடனே கலவியுற்ற இப்படி இரங்கி தூங்கியிருப்பதுறங் காட்டல் அரி ப்பத்துச் சென்று கைகூடியது அதனைத்து முயங்கிற் போல மாதலால் அவர் சென்றுறையு நாட்டிற் சென்றா லுய்வேன் நெஞ்சே யென்னுடன் செல்லுவாயாக. (கா. று).

குல்லை - கஞ்சா; கஞ்சாச் செடி கஞ்சாவை இலை யென்பதனாலறிக.

23. எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல் லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்கும்
கவலைத் தென்ப வவர் தேர் சென்ற வாறே
யதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கழறுமிவ் வழுங்க லூரே.

எ-து, ஆற்றாமை கண்டு தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. — ஓதலாந்தையார்.

என் காதலருடைய தேர் சென்ற நெறியானது யாவர்க்கும் சென்று அடைதற்கு அரிய பல சுனைகளையுடைய பருத்த கற்களையுடைய அத்தகைய மேற் பாறையின் கண்ணே ஏறிச் சென்று வளைந்த வில்லையுடைய மறவர்கள் அம்புகளைச் செலுத்தி ஆற்றிற் செல்வோரைக் கொல்லுகின்ற கவர்த்த வழியையுடைய தென்று கூறுகின்றனர். அங்ஙனத்த செல்லு நெறியைக் கருதி வருத்தங் கொள்ளாமல் இப் பேரிரைச்சலுடைய ஊரானது எனக்கு அயலாயிருந்து என்னிமித்தம் கூறுகின்றதே;

24. குறுந். ஜோடி விட்டுப் பேசியது,

13. மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெய லுழந்த இரும்பிணர்த் துறுகற்
பைத லொருதலைச் சேக்கு நாடன்
நோய்தந் தனனே தோழி
பசலை யார்ந்தநங் குவளையங் கண்ணே.

எ-து, தெளிவிற் கூட்டங் கூட்டு

ஆற்றுவகையால் ஆற்றுவித்துப் பிரிய
வேறுபட்ட கிழத்தி தோழிக்குரைத்தது.

கபிலர் பாடியது.

தோழீ? தன் மேற் படிந்த புழுதியாகிய மாசு போம்படி கழுவப்பட்ட யானை போல பெரிய மழை பெய்தலாலே அலம்பிக் கழுவப் பட்ட கரிய கருச் சுனையையுடைய பெரிய கல்லின் ஒரு புறத்திலே நோயுடை யதாய்த் தூங்கி யிருக்கும் மலைநாடன் எனக்குத் தீராத காம நோயினைக் கொடுத்துப் போயினன்; அதனை யல்லாமல் குவளை போன்ற கண்கள் பசலை பெற்று வேறுபட்டன காண்.

25. 14. அமிழ்து பொதி செந்நா வஞ்ச வார்ந்
திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப்
பெறுகதில் லம்ம யானே பெற்றாங்
கறிகதில் லம்மவிவ் வூரே மறுகில்
நல்லோள் கணவ னிவனெனப்
பல்லோர் கூறயா நாணுகஞ் சிறிதே.

கூ-து, "மடன்மாக் கூறுமிடனுமாருண்டே" என்பதனால் தெருவிறை முறுத்துக்
க்கித் தலைமகன் மடலேறுவ லென்பதுபடச் சொல்லியது. தொல் கபிலர்.

உரை:- இனிய நீர் நிறைந்து கட்டப் பட்ட சிவந்த நாவையும் அஞ்சி அருகி யுள்ளிருக்கும்படி அதனுக்குக் காவல் போல முளைத்த திண்டு வாராநின்ற கூரியபற்களையும்



இவ்வாறாகிய மொழியினையுடைய மாதரா
ளெழுதிய படத்தை யானே என் விழைவின்
படி பெறுவதாக; பெற்றபடியே அறிகமா
னோறு பனைமடற் கிழியினை யெற்றியிற்
கட்டுதலாலே இவ்வூர் முழுவதும் இப்பொ
ழுதே யறிவதாக; அக்கிழியின் மேல்யா
னேறியிருப்பத் தெருவிலிளைஞர் இழுத்து
மறுகிற் றெருவிற் கொண்டு செல்லுதலாலே
26. அல்லவ் விடத்து நல்லோள் கணவனிவ னென்னையும்
படத்தையு நோக்கி இந்நல்லாளுக்குக் கண
வனிவனே யென்று கூறக்கடவதாக;
அதற்காக யாம் இனி சிறிதேனும் வெட்கப்படு
வேமோ? (எ-று)

நாணுகம் படுத்தல் வேண்டாமையாகக் கூறி
யெதிர் மறை யாகப் பொருள். (1) தில். விழைவு;
(2) தில். காலம். யானே, ஏ. பிரிநிலை; சிறிதே-
ஏ. தேற்றம். கூற- அசை விகுதியாய்க்
கொள்; அன்றிப் பலரிங் கூறுதற்கு யாம்
இனி சிறிதேனும் நாணுவமோ வெனக் கூறினுமாம்.

27. 15. பறைபடப் பணில மார்ப்ப விறைகொளீஇ
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
செயிலை வெள்வேல் விடலை யொடு
தொடிவிளர் முன்கை மடந்தை நட்பே

எனது, உடன்போயின பின்னைக்

தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றவ-
கிறுபச் செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்
தொடு நின்றது. ஔவையார்.

உரை:- தோழி! அழகிய வீரக் கழலையும்
இலையமைந்த வெண்மை மிக்க வேற்ப
டையையுமுடைய காதலுடனே வளைதொ
க்கமுன் கையையுடைய மடந்தையி
னட்பானது,- பறைகள் ஒலிப்ப சங்குகள்
முழங்க அரசரிடை யுண்டு பழையதாய்ச் சிறந்த
ஆலமரங்கள் மிக்க பொதியில் வெளியின்
கண்ணே தோன்றி நின்ற நாலூர் வீரர்
செய்த நல்ல சொல்லைப் போல உண்மை
யுடையதாயிரா நின்றது; அங்ஙனமாய்க்
கொண்ட நட்பு உண்மையாயிருத்தலானே
அவன் பின் றொடர்ந்து போயினள் போ
லும், (எ-று) அங்ஙனம் என்பது தொக்கு நின்ற குறிப்பெச்சம்:

28 16. உள்ளார் கொல்லோ தோழி கள்வர்
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்கால் பல்லி தன் றுணைப் பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே.

எ-து, பொருள்வயிற் பிரிந்த விடத்துத்
தலைமகள் ஆற்றாமை கண்டு தோழி கூறியது.

பாலை பாடிய பெருங்கடுங்கோ.

உரை:- தோழி! காட்டுவழிக் கண்ணி
ருந்து உயிரைத் துண்டு வாழும் மறவர்

இரும்பின் செய்யப்பட்ட அலகு போலக்
கூர்மையுடைத்தாய் அமைந்து கொள்ளும் பொருட்டு
அதனைத் தம் நாக்கினுனியிலே புரட்டித்
தீட்டிக் கொண்டு இன்று தோசையைப் போலே
கொண்டு காவியுடைய பல்லினையுடைய
வழித்துத் தூசை வெளிப்படுத்தல் காதற் பல்லினை
அலையுடையானும்: அகலிய அடிப்பகுதியை
யுடைய கள்ளிகள் நிரம்பிய காட்டினைக் கண்
டோனே பொருள் தேடுமாறு சென்ற நமது
காதலர் பிரிந்து விடுத்து நீ இருந்து பசலை
யெய்துதற்கு முன்னமேயே திரும்புவாரோ?
திரும்புவர் இன்னே மீண்டு வந்திருப்பர்.
அ. ஓ. இருந்தமை, (எ - று).
கொடுங் காட்டினூடே பல்லிதன் நிறத்தினை
29. விரும்பி யுண்ணப்படுதை நோக்கியும் மீளாதார்
நம்மை எவ்வளவும் காக்க வல்லரோ என்பதாம்.
30. 17. மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங் காழ் கொளினே.
எ-து, தோழியிற் கூட்டம் வேண்டிப்
பின்னின்ற தலைமகன் தோழி இறைமறுத்(து)
கூறியது. - பேரெயின் முறுவலார்.
உரை:- தலைமகன் இறையுறுத்துக்
கேட்ட தோழி இவன் இன்னதோர் இறை
யுடையான் போலும் என்று அறிய

காலத்து அவளனையைச் செயல் திவலன்
தின்னவேண்டாது வெறுத்தால் இனி மட
லேறியும் வரை பாய்ந்தும் உயிர் விடுவே
னென்பதைத் தோழி தெரிந்து கொண்டு தன்
இறைவனை மடல் மறுப்பக் கூறுகின்றாள்.]
ஆண்பாலார் யாவரும் தம் காமமிகுதியாகக்
கொள்ளப் பெற்றால் அக்காமம் புலனைந்
தினையும் கவர்ந்து மயக்கி மனத்தை அல்ல
லடையச் செய்வதால் பனைமட்டை கட்டிய
குதிரையை ஏறி நடத்தும் குதிரையைக்
கொண்டு அதன் மீதேறிச் செலுத்துவர்;
தாம் சூடத்தக்க பூவென்று கருதிக் கொய்து.
31. முகையுடைய எருக்கம்பூ மாலையையுஞ்
சூடிக்கொள்வர். தெருவுலா வந்தும் புறஞ்செ
ல்லாதார் தெருக்கள் தோறும் பலராலும் சிரித்து
வாரவும் படுவர்; இவ்வாற்றால் தம் இழித்த கா
தலியைப் பெறாதார் மடல்மீதேறி விழுந்துயிர்
விடுதலையுஞ் செய்வர். (எ-று)
மா வென்றது குதிரை மடலேறுமன்று தோறும்
பூவென்றது எருக்கின் பூ புன்மை கொண்ட
பேயென்றது பிறரால் புல்லியர் காம
நோய் நன்கறிந்து நகைக்கக் கொள்வதாயினல்
என்று விளங்குதற் செப்பலை நோக்கியாக்க.
32. 18. வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரல்

சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

எ-து, இரவுக் குறி வந்து நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு வரைவு கடாயது. — கபிலர் —

உரை:- மூங்கிலின் முள்ளாற் கட்டிய வேலி சூழ்ந்த வள்ளிடத்து வேரிற் காய்க்கின்ற பலாமரங்கள் மிக்க மலைச்சாரலுள்ள நாட்டை யுடையோனே! நின் சாரலின்கண்ணே யுள்ள அப்பலா மரங்களிலே சிறிய கொம்பிலே யமைந்த அக்கிளை தாங்காதபடி காய்த்துப் பெருத்த பலாப் பழந் தொங்கினாற்போல இவளுயிர் மிகச் சிறியதாயிருப்ப அவ்வுயிர் தாங்காதபடி இவள் கொண்ட காமமோ பெரியதாயிராநின்றது. அதனை யார்தாம் அறியுந் தன்மையுடையார்? நீ செவ்விய பண்புடையையாதலால் அதனைத் தக்கவாறு அறிந்து வரைதற் பாலை ஆவாய் (எ-று)

செவ்வியை யாகி என்றது தலைச் சென்று
33 வரைந்து மணந்து கொள்வாயாக என்றவாறு.
வேரல் - மூங்கில்; கோள் - காய்; தவ - மிக.

உள்ளீடுடை பலாமரத்தின் வேரிற் காய்த்த பழத்தைப் பிறர் எளிதிற் கொள்ளாதபடி மூங்கில் முள் வேலி கட்டிக் காவல்படுத்திய சாரல் என்றது. இவளது அமைந்த நலனைப் பிறர் கருதாதபடி யான் காத்து வருகின்றே

ததலின் என்னின் முறையாதே கோள் ளென்
தொழிற்கமையினில் பெயர்த் துறையாகு
றதம். (தொ. பொ. -) என்றதனால் இருந்தத்
திணைக்கேற்ற பொருளிலுள்ளன கூறிய
தறிக. மெய்ப்பாடு பெருமிதம். பயன் - வரைவு கடாதல்.

உயிர் திரிந்து காலம் பெரிதென்றதனால் அத்
துணைய காலம் நீ நெடுங்கால் அருகிலிருந்
யாற்றாளவள் தொன்றான்று ஆதலின் வரை
ந்து பிரியாது தந்து ஆற்றுவிப்பாயாக
கொள்கின்றதாம்.

34. 19. எவ்வியிழந்த வறுமையர் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவல் நாறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே.

எ-து, உணர்ப்பு வயின் வாராவூடற்
கட்டலைமகன் சொல்லியது. - பரணர்.

உரை:- எவ்வி யென்பானிறந்ததனால்
தொடைப் போர் யாழுமின்றி வறுமையுடைய
பாணர் தங்கள் பூவிடுவது வறிய தலையைப்
போலப் புல்லென்று வருந்துகின்ற நெஞ்சமே
இல்லகத் திருக்கின்ற மரத்திற் படர்ந்த முல்லை
யின் அரும்பு மாலையின் மலர்ந்த பூவை யுடைத்தா
னால் நறுமணம் வீசும் பலவாய் கரிய கூந்தலை
யுடையவள் நமக்கு எத்தன்மையாகிய
முறைப்பாடுடையாள்? யாரைத்தன்மையவள்?
அவள் நிமித்தம் வருந்தாதே கொள்; நீ

நீடு வாழ்வாயாக; (வ-று)

இனி வருங் கவினைத் தொகை யென்பது நச்சினார்க்கினியர் கருத்து. மதி- வெண்மை யுடைய.. வெண்ணிலவு - வெள்ளை. மருத்துக் கொண்டிருந்தது. "எற்றில மருங்கின்" (தொ. பொ. 19)

35. என்று தன் தோழிக்குச் சொல்லி. தொடைய யுடைய தோடு கடைவள்ளல். இரு கரு 4.

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனொரு பக்கவழி அவன்பலபடியாகத் தெரிந்தியுந் தோற்றமிக்கானாக அதனைக் கண்ட தலைவன் தானும் உடன்பட வெறுப்பது இருந்து னையின் கருத்து. மெய்ப்பாடு.

36. 20. அருளு மன்பு நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயி
னுரவோ ருரவோ ராக
மடவ மாக மடந்தை நாமே.

எ-து, செலவுணர்த்திய தோழிக்குக் கிழத்தியுரைத்தது. கோப்பெருஞ்சோழன்.

உரை:- (மடந்தாய்!) நம்பால் வைத்திருக்கின்ற அருளையும் அன்பையும் நீத்து அவர்க் கிருத்தமைத்த நம்மை யிங்ஙனம் விட்டு நம்பின்னாற்கடையாற் பொருளீட்ட எண்ணி பொருளையே பெரிதாக்கொண்டு நம்மை பிரிந்து செல்லுகின்ற காதலர்தாம் அறிவுடையோராயின்; அங்ஙனம் அறிவு உடையோர் அறிவுடையோராகவே இருக்க

கடவர்; அவர் மடமையே மகக்கடவேம் (என்று)
பிரியும் காதலி இருந்து படுதல் இன்மையது
வின் இயலிறுல் காட்டிய பொருளே பெரிதெ
னக் கருதும் அறிவினர் செய வெனக் கொ
ண்டு உரவோரெனை இழித்துக் கூறின.

37. மெய்ப்பாடு - இளிவரல் பற்றிய அழுகை;
பயன் - ஆற்றுவித்தல்.

38. அ- வண்டு படத் ததைந்த கொடியிணர் இடையிடு
பொன் செய் புனைஇழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானம் காரெனக் கூறினும்
யானோ தேறேன் அவர் பொய் வழங்கலரே.

எ-து; பருவம் வந்தவிடத்தும் ஆற்றுவித்த தோழி அவர் வரக் குறித்த பருவ காலமின்கண் இனி ஆற்றுவிக்குமாறு எவ்வாறென்று தன்னுள்ளே கவன்றிட்டு அவளது இளிப்பாற்றிய தலைமகள் தானும் அவர் வரும் காலத்தைக் காட்டுவதாயினும் யானிது கார்காலமென்று தேறேனென்றதுக; அவர் பொய் கூறாதவனெனத் தலைமகள் தான் ஆற்றுவளென்பது படச் சொல்லியது.

ஓதலாந்தையார்.

உரை:— தோழி! வண்டுகள் வந்து விழுமாறு நெருங்கிய தொடியாகிய புதுக்கொத்துக்களை இடையிடையே இட்டு,- மகளிருடைய பொன்னாற் செய்யப்பட்ட அணிகலன்களையுடைய

செய்த கலன் தொக்கக் கட்டிப் பின்னிய
39. கூந்தல் போலத் தோன்றும் இன்று புதியபூவை
யுடைய கொன்றைக்காடு தன் மலரைத் தோ
ற்றுவித்து இக்காலங் கார்காலமே யெனக்
கூறிக் காட்டுவதாயினும் யானும் கார்கால
த்து வருவே னென்று கூறிய அவர் பொய்
கூறுநரல்லர்; ஒருகால் வம்ப மாரியைக் கா
ரெனமதித்து இக் கொன்றை மலருமலரு
ந்தலால் இது கார்கால மெனத் தெளியேன்
யானே; (எ-று)

பொன்பு காய்த்து ஊற்றிய கொந்துக்களினி
டையே மலர்தலின் பின்னிய கூந்தல் மேல்
மேலணியணிந்தாற் போன்றதென்றார்;
மேலணி- இக்காலத்துச் சடை நாகம்
சடைவில்லை போல்வது.

40. 22. நீர்வார் கண்ணை நீயிவ ணொழிய
யாரோ பிரிகிற் பவரே சாரற்
சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து
வேனி லஞ்சினை கமழுந்
தேமூ ரொண்ணுத னின்னொடுஞ் செலவே

எ-து, செலவுக் குறிப்பறிந்து ஆற்றாளா
கிய கிழத்தியைத் தோழி யாற்றுவித்தது.

சேரமா னெந்தை.

உரை:- நீர் வடிகின்ற கண்ணையுடை
யாய் நீ இங்கே தனித்திருக்கும்படியாகக்
கைவிட்டுப் பிரிந்து செல்பவர் யாவர் தாமோ?

சாலியுடைய இலையைக் கழுகாக அமைந்த
வலமாகக் அறிந்து புறங்கொத்து கிளியுடைய
இலைகள் வேனிற் காலத்துக் கமழா நிற்கும்
தேயங்களையும் உறங்களையுந் தலைவர் கருதியிருந்த
தெல்லாம் நின்னோடு செல்லுதற் பொருட்
டன்றோ? ஆதலின் வருந்தாதே கொள்;(எ-று)

நீர் வார் கண்ணை யென விளித்தமையால்
செலவுக் குறிப்பறிந்து ஆற்றுவித்தமை

41. கூறிய தாம். மாமலர் கமழுந் தேயமும்
உறுமென்றது கொடும்பரியிற் செல்லக்
கருதாத நல்ல தேயத்தையும் உறையுந்
தலைவியொடு செல்லக் கருதிய தாம்.

42. 23. அகவன் மகளே யகவன் மகளே
மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்த
லகவன் மகளே பாடுக பாட்டே
யின்னும் பாடுக பாட்டே யவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே.

என்பது, கட்டுக் காணிய நின்றவிடத்துத்
தோழி அறத்தொடு நின்றது. ஔவையார்

உரை:- பாடியமைக்கின்ற கட்டுவிச்சீ!
பாடியமைக்கின்ற கட்டுவிச்சீ! அக்குமணியை
க் கோத்து நாலவிட்டாற் போன்ற நல்ல நெ
டிய கூந்தலையுடைய பாடியமைக்கின்ற கட்
டுவிச்சீ! நீ இப்படியே பாடல்களைப் பாடுவாயாக;
இவள் கருதியோடு இதற்குக் காரணமான
அத்தலைவருடைய நல்ல நெடிய குன்றின்

வாலங்காடர்ச் சேர்த்துப் பாடிய பாட்டை இன்னும் பாடுவாயாக. இப்பாட்டைக் கேட்டவளனே இவள் நோய் எவ்வாறு தணியினும் தணியும்.

மனவு - சங்கு மணி; வெண்ணிறமுடைமையின் நரைத்த கூந்தலுக்கு வமித்

43. தார்: அகவல் - அழைத்தல். இங்கு இவள் முருகவேளணங்கினதாக அவ்வேளுக்குப் பாவுக்கடன் கொடுக்க வேண்டி அழையா நின்ற கட்டுவிச்சியை நீ இவள் அணங்கின தோன்றலாவானெனவுரையான் அவன் மலை வளத்தைப் பாடின் எவ்வாறு இவள் நோய் தணியுமாதலால் அம்மலையை இன்னும் பாடுக என அறத்தொடு நின்றமையறிக. கட்டுக் காணுதல்: முறத்தில் நெல்லிட்டு முருகனுக்குப் பாவுக்கடன் கொடுத்துக் குறி பார்த்தல்.

44. 24. கருங்கால் வேம்பி னொண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகுளிறு மிதித்த வொருபழம் போலக்
குழையக் கொடியோர்
நாவே காதலர்க் கலவென் றவ்வே.

எ - து, பருவங்கண்டு ஆற்றாளாகிய கிழத்தி யுரைத்தது. — பரணர்.

இதற்கு உரை எழுதப்படவில்லை.

45. 25. யாருமில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தாளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகு முண்டு தான் மணந்த ஞான்றே.

வரைவு நீட்டித்தவழித்
தலைமகள் தோழிக்குச் சொல்லியது. — கபிலர்.

உரை:- வந்து இத் தொழுதிக்கண் என்னை யுடையோனாகிய நங் காதலன் இருந்த பொழுதையின் வாராது பொய்த்து விடுப்பின் யான் யாது செய்யமாட்டுவேன்? அவன் என்னைக் களவிற் புணர்ந்து பின்னைப் பிரியேன் பிரியிற் றரியேனென்றலின் இன்னதோர் காலத்தில் வரைந்தெய்துவே னென்று என்னொடு கூறுஞ் சூள் கூறியகன்று போன நாளில் நீர் போடுகின்ற ஆரல் மீனைப் பார்க்கும்; தினைத்தாள் போன்ற சிறிய பசிய காலையுடைய ஒருகுருகும் கண்டிருக்க அயலிலிருந்ததுண்டு வேறியாருமில்லைத் தானே; (எ-று)

46. இருகூறு ஒன்றும் இனையெனக் குறி நோக்கியிருத்தலின் இவன் கூறியதிலும் னந் தெரியத் தெரிந்தேனில்லையோ அஃதும் அறிந்த பாற் றன் றொன்றாதலால்: காலக்குறி குறிப்புப் பெய நெச்சத் தொடரெனப. கூறியது பொய்த்தலிற் றாயனைன்றிங்.

---

47. 26. அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்
றகாஅன் போலத் தான்றீது மொழியினுந்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே
தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னையே.

எ.து, கற்றெய்துஞ் செவிலித் தாயர் தலைமகளது வேறுபாடு கண்டு அஃது எற்றி னையின் றென்று கட்டுவிச்சி யினைய வினவிக் கட்டுக்காண்கின்ற காலத்துத் தலைமகள் வேறு பாட்டிற்குக் காரணம் பிறிதோர் தெய்வ மென்று கூறக் கேட்டுத் தோழி அறத்தொடு நின்றது. —கொல்லனழிசியார்.

உரை:- அரும்புகளெல்லாம் ஒழிந்தோ மலர்ந்த கரிய அடியை யுடைய வேங்கை மரத்தின் மேலோங்கிய பெரிய கிளையிலிருந்த தோகை மயில் மலர் கொய்யு மகளிரை யொப்பத் தோன்றுகின்ற மலைநாடன் தான்
48. துறந்தான் போலவும், மறந்தான் போலவும் தகுதிப்பாலல்லாதனவி கிளவி வெறுத்து மாறு கருதித் தான் தீது மொழியினும் அவன் கிளவி மணந்து நின்றக் கைவிடலனைச் சூழ்ந்த பொதும்பிற் புலகத்துத் தேமாங்கனி யை யருந்தி நின்ற முட்போன்ற எயிற்றி

னையும் துவர்த்த வாயினையுமுடைய மேனி
லேறியிராயமெனின்ற வலிய கொங்கொட்டி
நயினின் றந்தையாகிய கடுவனும் அக்கொ
டியோனை அறியாநின்றும்; அது தன் தன்
னை கண்டுதழைப் பயந்துக் கூறுதின் தன்
னையைத் தன்று காணேன்; (எ-று)

49. 27. கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் றீம்பா னிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇய வேண்டுந்
திதலை யல்குலென் மாமைக் கவினே.

எ-து, பிரிவிடை யாற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.

- கொல்லனழிசி -

உரை:- தித்திப்படர்ந்த அல்குலையுடைய தோழீ! உகட்டும் பசுவின் கன்றும் உண்ணாமல் கறக்கும் கலத்தினும் கறக்கப்படாது நல்ல பசுவினது இனியபால் வீணிலே தரையிற் சாய்ந்தாற் போல எனது மாமைநிறத்தையுடைய அழகிய நலன் அனைத்தும் எனக்கு முதவாமல் எனது காதலனுக்கும் பயன் படாமல் பசலையானுண்ணப்பட்டு அழியக்கடவதாக; (எ-று)

என். ஐ - என் தலைவன். பசலை - பசப்பு; பசப்பாவது - பிரிவாற்றாமையான் வரும் நிறவேறுபாடு. இது தலைமகளைக் காமம் வருத்தவழி நிகழ்வது.

"உண்டாற்கினிய வல்லாப் பொருளோ
50. உண்டனர் போலக் கேட்குது மாறே"

(தொ. பொ-) என்பதில் உண்பது போல உவமிக்கப்பட்டது. மாமை - மாந்தளிரின் தன்மை; இன்று திதலையாகிய தேமலுக்கு அடையாகி அல்குலினை ஒப்பித்த மாமைக்கவினையுடைமை. "திதலை யல்குல் அவ்வரி வாட" என்றும் நற்றிணைக் கண்ணும். . .

பாடும் இது சிந்தையொடு இணைவந்த பலவும்...

51. ஆக. ஒட்டு வேண் கொறுக்கு வேண் கொ
ளோர் மேசன் யாணு மோர் பெற்றி மெலிட்
டாஅ கொல்லனக் கடவு கோன் கொ
ளமா ளைச்சாளி யலப்ப வெ
ளுயவு கோ யரியாத்து துஞ்சா மேக்கே.

எ. து.- வரைவிடையாற்றாமைக் கவன்ற தோழிக்குக் கிழத்தியுரைத்தது

தெளிவையார்.

உரை:- தோழீ! காதலன் பிரிதலால் யான் துயருறுவதைக் கண்டு நீ ஆற்றாது வருந்துகின்றனை; யான் யாது செய்வதோ? அழுது இன்று கீழ் தென்றற் காற்று வீசுதலாலே வருந்துகின்ற எனது கடல் சோலையரியா திவ்வூர் துஞ்சாநிற்கும் இவ்வண் துஞ்சாமோலில் யான் முட்டுக்கொள்வேனோ? மோதிக் கொள்வேனோ? ஒரு காரணத்தை மேற்கொண்டு ஆ எனவும் ஒல் லெனவும்

கூடலிற் கூடச்சென்று வேண்டுமோ? இவற்றில் யாது
செய்வதென்று யானுந் தேர்கிலேன்;(எ-று)
உயவு - வருத்தம், சென்று பொருந்துகின்ற
நோயெனக.

52. 29. நல்லுரை யிகந்து புல்லுரைத் தாஅய்ப்
பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல
வுள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
யரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதா லம்மநின் பூசலுயர் கோட்டு
மகவுடை மந்தி போல
வகனறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

எ-து, இரவுக்குறி மறுக்கப்பட்ட
தலைமகன் இசை வெம்மை மறுத்தானென்று
வரைந்து கொள்ளாமையாது மின்றும் கூடு
தற்கு அவாவுற்ற நெஞ்சொடு நோக்கிக் கூறி
யது
-ஔவையார்.

உரை:- நெஞ்சமே! யான் கூறிய நல்ல
வார்த்தையை இகழ்ந்து அயலார் தூற்றிக் கேட்ட
சொல்லையே மேற்கொண்டு பாய்ந்து மழை
பெய்யும் நீரை ஏற்ற சுடாத பசுமண் கலம்
போல உள்ளத்தாலே தாங்க மாட்டாத காம
வெள்ளத்தில் நீந்திச் சென்று கரைகாண்
டற்கரிதாய் துன்புற்றனை; உயர்ந்த கிளை
களிற் சென்றியாங்குந் தாவியுந் தன் மகவை
53. வயிற்றிலே அணைத்துச் செல்லுகின்ற
குரங்கு போல நின்னைக் கையகத்தே தழீஇப்

பற்றிக் கொண்டு நெகிழ்ந்த தியாதெனக்
கேட்போனைப் பெற்றிருந்தால் நின் பேரின்ப
ச்சுகம் மிகப் பெரிதாய் விடாநிற்கும்; இது
மிக்க வியப்புக் காண்; (எ-று)

நல்லுரை- இரவுக்குறி மறுக்கப்பட்ட
பின்பு வரைந்து எய்துக வென்று யான்
கூறிய நல்லுரையை புல்லுரை —.

54. 30. கேட்டிசின் வாழியோ தோழி யல்கற்
பொய்வலாளன் மெய்யுற மரீஇ
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற அளியேன் யானே.

எ-து, அவர் நின்னை வரைந்து
கொடல் காரணத்தாற் பிரியவும் நீ ஆற்றி
யிராது ஆற்றாதாகின்றது என்னென வினவிய
தோழிக்கு யான் ஆற்றியுளேனாகவும்
கனவு வந்து என்னை இங்ஙனம் நலிந்தது
எனக் கூறுகின்றது.

— கச்சிப்பேட்டு நன்னாகையார் -

உரை:— தோழி! வாழ்வாயாக; யான்
கூறுகின்ற இதனைக் கேட்பாயாக; நேற்றிரவு
பொய் கூறுதலில் வல்லவன் உடம்பொடு
சேர்ப்பொருந்தி பின்புறம்படி வாய்த்தக்க
பொய்யாகிய கனவு வந்து மயக்குதலாலே
விழித்தெழுந்து அவனால் அளிக்கத்தக்க

யான் படுத்திருந்த படுக்கையைக் கையாலே
தடவிப் பார்த்தேன்; அங்ஙனம் பார்த்ததும்
இளமையின் வண்டு விழுந்த மலர் போல வாட்ட
55. முற்றுத் தனிமையாகத் தனியே தானிருந்து [illegible]னேன்;
என்னே இவ்வனம் அறிந்தபாலே எவ்வளவும்
ஆற்றுவேன்; ( ) என்னே யென்பது முதல்
சொல்லெச்சம்.

56. 31. மள்ளர் குழீஇய விழவி னானு
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோ ராடுகள மகளே யென்கைக்
கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலு மோராடுகள மகனே.

எ - து, சொற்றமலர் வரை வெழுந்தோ
ழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது. — ஆதிமந்தி —

உரை:— யானும் துணங்கைக் கூத்
தியலும் களத்தில் புகுந்து துணங்கை யாடு
மகளே; என் கையிலுள்ள சங்கைய
றுத் தாக்கிய விளங்கிய வளையை நெகிழப்
பண்ணின பெருமை மிக்க குரிசிலாகிய என்
காதலனும் மள்ளர் கூடி விழாவயரும் களத்து
விழாக் கொண்டாடு மகனே; அன்ன
பாட்டினைப்பட்ட தகுதிப் பாடுடைய என்
காதலனை மள்ளர் கூடியிருக்கின்ற விழாக்க
ளத்தினும் மகளிர் கூடிய துணங்கைக்
கைக் கூத்தினும் மற்றெவ்விடத்துங்
காணேனில்லை; (எ-று)

34

57. 32. காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியின் பொய்யே காமம்
மாவென மடலொடு மறுகிற் றோன்றித்
தோற்றநர் தூற்றலும் பழியே
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே.

எ-து, பின்னின்றான் கூறுகின்றது.

— அள்ளூர் நன்முல்லையார் —

தலைவன் பாங்கியிடைத் தலைவந்து மதியுடம்படுத்தலும் அதுகண்ட தோழி இவனொரு குறையுடையான் போலும் அக்குறைதான் யாதென ஆராய்கின்ற காலத்து அதனையும் பொறானாய் அவள் கேட்டுக் குறை முடிக்குமாறு கூறுகின்றது.

உரை:- தலைவனும் தலைவியும் பொழுது இன்னதெனை அறியாராய்த் துய்ப்பதுவே காமமெனப்படும். அல்லனமென்றி இது காலையென்றும் இது பகலென்றும் இது செயலறச் செய்யு மாலையென்று இஃது ஊரார் துஞ்சுகின்ற நடுயாமமென்றும் இது விடியற் காலமென்றும் இத்திணைய பொழுதுகள் இடையிடையே தெரிந்து
58. கொள்வதென்றால் அங்ஙனம் தெரியுமாறு தம்முள்ளத்தைப் புறத்தே செலுத்தித் துய்க்கும் காமமானது உண்மையான காமமென்று; அது பொய்யே யென்பதாகும்; அத்தகைய காமந் துய்க்காதவாறு ஈடுவதை யொருவர்

விட்டுப் பிரிவதென்றல் பிரிந்துவிடுத்து வனை
பாய்ந்து உயிரைச் செகுத்துக் கொள்ளாது
ஆடவர் இது இழிவையாமெனப் பின்னுடன்பே
வேறு அதனை தெருவிலே வந்தானென் தலைவி
யைக் கைவிட்டனே னெனத் தூற்றுதலும்
பழியே யாகும்; அவ்வகை கொணர்ந்து தாமுங்
கொளென்று உலகோரை வாழ்த்துதலும் பழி
யேயாகும்; (எ-று)

59. 33. அன்னை யிவனே நின் மாணைக்கன்
றன்னோர் மன்றத் தென்னென் கொல்லோ
விளர்த்தா னிரும்பா மேனியொடு
கிடேந்தி நாடும் பெருஞ் செம்மலனே.

எ-து, வாயிலாகப் புக்க பாணன் கேட்பத் தோழியை நோக்கித் தலைமகள் வாயில் நேர்வாள் கூறியது - படுத்துமோகின்றான் -

உரை:- தோழீ! இவனை இனிய மாணைக்கன் காண். உன்னையுதிரிந்து நிரம்பக் கிடைக்கப் பெறாமையால் இடைத்த சிறிதளவே யுண்டு வாடிய மேனியொடு இன்றும் யானேனும் புதிதாக உணவு கொடுப்பா ளொருவரின் அவர் பால் விரைந்து செல்லு கின்ற பெருஞ் செம்மல் முடையானை; இங்ங னம் நிரம்பா மேனியனாகிய காலத்தும் இங்கு இவ்வாறு செல்கின்ற பேசுமிவன் நிரம்ப வுண்டு தின்றோரனைக்கூட பேசும் பொழுது எத்தன்மையாகப் பேசுவன் கொல்லோ; (எ-று)

பாணன் சொல் வன்மைக்குத் தோற்று
வாயினேர்கின்றாளாதலின் இல்லணம் கூறி
60. னள். இரவலனாதலும் எளிய தொழிற் சிறப்புஞ்
செய்தலானும் மாணாக்க னென்றாள். பாணர்
இரந்துண்ணு மியல்பினர்; இரவலர் மேனி-
வயிறு நிரம்ப வுண்ணப்படாத மேனி; விருந்து-
புதுமை, செம்மாத்தல் - தன் தாழ்மையைப் புல
ப்படுத்தாது இறுமாப்புடையன் போல இயங்குதல்.
61. 34. ஒறுப்ப வோவலர் மறுப்பத் தேறலர்
தமிய ருறங்குங் கௌவை யின்றா
யினியது கேட்டின் புறுகவிவ் வூரே
முனாஅதி யானையங் குருகின் கானலம்
பெருந்தோட்ட மள்ளர் ஆர்ப்பிசை வெரூஉங்
குட்டுவன் மாந்தை யன்ன வெங்
குழைவிளங் காய்நுதற் கிழவனு மவனே.

எ-து, வரைவு மலிந்தமை ஊர்மேல்
வைத்துத் தோழி கிழத்திக்குச் சொல்லியது.

— கொல்லிக் கண்ணன். —

உரை:- ஏடி தோன்றல் வரைவொடு
வருகின்றான் காண், கழிக்கரைச் சோலையி
லுள்ள வண்டாழ்ங் குருகின் பெரிய கூட்டத்தி
னை வெல்லாய் மருதநிலத்து மள்ளர் பகடுகளை
அதட்டும் ஆரவாரத்தைக் கேட்டு
அஞ்சுகின்ற சேரலன் குட்டுவனது மாந்தை
போன்ற சிறப்புடைய எமது பக்கத்தே குழை
விளங்கப் பெற்ற அழகிய நுதலையுடைய நினக்கு

உரிமையுடைய மகிழ்நனும் அவனேயாமெ:
அவனும் இல்லிருக்குமென்னேமே தமானே
62. கடியப்படும் பரத்தையாய்த் துயவெழுத்தல் ஆ
காதனை ஆற்றுவிக்கத் தொழிகளால் மறுத்து
ரைப்புயர் தெளியானாய்த் தனித்திருப்பார் உறக்
கல் காரணமாக எழுந்த கௌவை கேளாதா
யனைகள் தெய்திய இனிய மாற்றம் கேட்டு
இல்லறும் இன்புறுவதாகு (எ-று)

யாமையார் இருக்கு - வண்டாழ்ந் இருக்கு; ஒடு
வகை நாரையுமாம். தொடு. தொகுதி - துதல்.
மென்னியில் படர்க்கை வந்த இடவழுவமைதி:

மென்னாரப் பிரைசக் இருக்கு இருக்கின் தெரி
திகள் வெடுவுமென்றது களைவொடு விழவில்
கேட்டு உவகைகடரங்கு மெனுபதாம்.

63. 35. நாணில மன்ற வெங் கணோர் நாணோர்
இளைப்பரும் பாம்பின் தோல் முதிர்ப் பஞ்ச
சிதைந்த கடும்பின் சுடும்பு வெண்ணி யாழு
துண்ணுறை யழுந்தலி ததலிய
தண்வரல் வாடையுநாம் பிரிந்திருக்கெனச் சுழில

எ-து, பிரிவிடை மெலிந்த கிழத்தியோ
டுக்கிச் சொல்லியது — கழார்க்கீரனெயிற்றியார்.

உரை — கயிறு போல நீண்ட சிறையுடைய
அரிய பாம்பின் தோல் முதிர்ந்தாற் போன்றதிர
ண்ட கடும்பின் குடம்பிய பூவின் வெண்மை
யானது மலரும்படி துண்ணிய மழையின்
தெறித்த இறு துளிகள் பெய்தொழிந்த தண்ணிய

வருதலுடைய காணை யியாங்கள் கூறாக்
காலத்தும் நம்மைப் பிரிந்து கைவிட்டவனைத்
திருத்து வல்கள் அதுதான் ஆயினும் அவை
நின்னாலாக நாணிலவாயினவே யாம்; (எ-று)

நாண் - கொடுவில்லின் நாண் என்பது
ஞை யாத்து கன இலட்சி உரை - மதுரை -

64. தலைவி -

சிறப்பு வகை பாடு இருக்கிடு வாராதோக
தெவனோ தெல் வந்த வியப்புவலம்:
வானையும் உ.ம் இறந்தது தழீஇய வச்ச
அம்மை. சென்னைப் பசுவைத்தும் பிரிந்தவை
கவிதைக்கிடுகின்றது.

65. 36. துறுக லயலது மானை மாக்கொடி
துஞ்சு களிறிவரும் குன்ற நாட
னெஞ்சு களனாக நீயலென் யானென
நற்றோன் மணந்த ஞான்றை மற்றவன்
றாவா வஞ்சின முரைத்தது
நோயோ தோழி நின்வயி னானே.

எ-து வரைவிடை வைத்துப் பிரிய
ஆற்றாளெனக் கவன்று வேறுபட்ட தோழியைத்
தலைமகள் ஆற்றுவித்தது. - பரணர் -

உரை:- (தோழி!) துறுகல்லின் பக்கத்திற் படரும்
கரிய மானைக் கொடி தான் துறுகல்லிற் படர்தல்
போலவே அயலிலுறங்கின்ற களிற்றின்
மீதேறிப் படராநிற்கும் மலை நாடன் எனது
தோள் மணந்துப் புணர்ந்த நாளின் தன் நெஞ்சே

மற்று 'இவளையான் பிரிய லிலேன்' என்றுசொ
ன்றுகக் கொண்டு நின்னிடத்துக் கெடாத
கருத்துள் உறைத்துத் தானே அவன் இருத்த
பவைத்து வாரானையின் நினக்கு இந்நோய்
உண்டாயது; (எ-று)

66. மாலை - ஞெமன் கொடி போன்றது. உடும்
கொடியெனப் படுதலின் ஞெமன் கொடியன்று.
தோழி வேறுபட்டமையின் தோழியோ வென்றல்.

67. 37. நசை பெரிதுடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பிளக்கும்
அன்பின் தோழி யவர் சென்ற வாறே.

எ-து, தோழி கடிது வருவரென்றாற்றுவி
த்தது. - பாலைபாடிய பெருங்கடுங்கோ-

உரை:- தோழீ! நின் காதலர் நின்பால்
பெரிது அன்புடையராதலின் நீ வருந்தா வாறு
விரைவின் வந்து தலையளி செய்யினுஞ் செய்வர்;
அவர் பிரிந்து சென்ற நெறியும்:- பெரிய கையை
யுடைய களிற்றியானை தன் பிடியானையின்
பசியைப் போக்கும் பொருட்டு மெல்லிய கிளை
யையுடைய (ய) மாமரத்தின் நாரைப் பிளந்து ஊட்
டும் பண்புடையன வாதலின் அச்செயலே
அவர்க்கு அறிவுறுத்தி நின் பாற் கூட்டுவிக்
கும் தானே;

மற்று அவ்வனமாதலின் அவர் மறந்தாரும்
அறிவுறுத்துந் தன்மையின வென்றது இறைச்சிப் பொருள்.

68\. 38. கானமஞ்ஞை யறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்
குன்றநாடன் கேண்மை யென்றும்
நன்றுமன் வாழி தோழி யுண்கண்
ணீரொ டொராங்குத் தணப்ப
உள்ளாது ஆற்றல் வல்லு வோர்க்கே.

எ-து, வரைவு நீட்டித்த வழித் தலைமகள் தனது ஆற்றாமை தோன்றத் தோழிக்குக் கூறியது. - கபிலர் -

உரை:- தோழி! மையுண்ட கண்ணீர் வழிதலைக் கொண்டொழுகியாக ஞெகிழ்ந்திய அழுகைக்கிறிதும் கருதாது பிரிந்து போக வல்லவர் திறத்துக் கூறியதல தென்னை? காட்டு நாள் மயிலிட்ட முட்டையை இளவெயிலில் விளையாடுகின்ற குரங்குக் குட்டி யுருட்டுக் குறு பாறையிற் றுட்டிட்டு மயங்கின்ற மலைநாடன் நம்பால் வைத்திருக்கின்ற நட்பானது எக்காலத்தும் மிக நல்லதாயிரா நின்றது. வாழ்வாக; (எ-று)

69\. வல்லுவோர்க்கே என்னுமிடத்துக் கூறியாவதென வருவித்து முடிக்கப்பட்டது.

உள்ளுறை:- மஞ்ஞை தோழியாகவும் முட்டை தலைவியாகவும் முசுவின் குட்டி தலைவனாகவும் கொண்டு மஞ்ஞையாற் காவலோடிருந்த முட்டையின் மென்மையறியாது முசு இளமுசு உருட்டுதல் போல நின்ற

காலை வேலம்பப் படுமெனு மென்மையையோர்க்
காது இவன் என்னைப் பிரிந்து பலபடியுந்
துன்புறுத்தா நின்றானென்பதாம்.

வாய்த்தாய் பல்லவை யில்லாவையின் முட்
டை யிறையுதிர்ந்து மாந்தருமிடும் பொழிற் பல்லவை
நீடன் பணை போல விளிந்தே, கொடுந்தாள்
நாரை கொண்டிரைக் கூட்டத்தின் நெல்லியிலதொழுந்
திருந்தாகுல நெற்றுப்பற்றின் கிளையுந் திருவிளை
ரக்கே. இதுபோற் றுறைக் கோவை 226.

70. 39. வெந்திறற் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்றுவிளை யுழிஞ்சில் வற்றுவார் க்கும்
மலையுடை யருஞ்சுர மென்ப நம்
முலையிடை முனிநர் சென்ற வாறே.

எ-து, பிரிவிடை யாற்றல் வேண்டு
மென்ற தோழிக்கு யானவனை யாற்றுவே
னெனவுந் தனது ஆற்றாமை மிகுதி தோன்றத்
தலைமகள் கூறுகின்றாள், நம் முலையிடைத்துயி
லின் முனிந்து போயினார் சென்ற வழியிப்படிப்
பட்ட கொடுமையுடைத்தாதலால் யான்
எங்ஙனம் ஆற்றியிருப்பேன்? யானாற்
றுகின்றிலேனென நீ யாற்றுவாயென்று நின்
னைத் தோழிக்குத் தலைமகள் கூறியது.

ஔவையார்.

உரை:- கொடிய வன்மையும் விசையு
முடைய காற்று, சோலையில் வந்து புகுந்த
தால் காய்கள் முற்றிய நெற்றின் வற்றற்க

ஞானவியாகிற்கும் மெய்யுடைய தெய்வ தந்தருளிய
சாவென்று கூறுகின்றான் (எ-று) நம்முடைய
மேனியின் நீக்கல் கிடந்த துயிலு வதை வெறு
த்துப் போயினர் சென்று நெறியானது

71. 40. யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.

அது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த
பின்னர்ப் பிரிவு ஐயங் கொண்டு அஞ்சிய தலைமகள்
குறிப்பு வேறுபாடு கண்டு தலைமகன் கூறுகின்
றது. - செம்புலப் பெயனீரார் -

உரை:- எனது யாயும் நினது ஞாயும்
தாயும் எந்தன்மையான உறவுடையார்?
எனது தந்தையும் நினது தந்தையும் எந்த
முறையில் உறவாகியுள்ளார்? இதற்கு முன்
யானும் நீயும் எவ்விடத்தில் அறிந்தவரையோ
மெற்றிந்திரா நின்றோம்? அங்ஙனமாகச்
செம்புலத்தில் பெய்த மழை நீரும் அந்நிலத்தோன்
றும் கலந்து ஒன்றுதல் போல அன்புடைய இரு
வர் நெஞ்சமும் வேறுபாடின்றி ஒன்றோ
டொன்று கலந்து விட்டனவே; இஃதென்ன
வியப்பு? இங்ஙனம் கலந்திருத்தலாலே பிரிந்து
போவதை எண்ணமாட்டேம்; (எ-று)
இஃதென்பது மேற் குறிப்பெச்சம்.

72. 41 காதல ருழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொ ளூரிற் புகல்வேன் மன்ற
அத்த நண்ணிய அங்குடிச் சீறூர்
மக்கள் போகிய அணிலாடு முன்றிற்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் றோழியவ ரகன்ற ஞான்றே.

எ-து, பிரிவிடை வேறுபாடு கண்டு
கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.

— அணிலாடு முன்றிலார்.

உரை:- தோழி! காதலர் என்னோடுப் பிரியாது அருகிருப்பாராயின் பெரிதும் மகிழ்ந்து விழாக் கோலமுடைய நம்மூரிடத்திருக்குந் திண்ணமாக விருப்பமுடையேனாயிருப்பேன்; அவர் என்னை விட்டகன்ற நாளில் பாலைநிலத்திற் பொருந்திய அழகிய குடியையுடைய சிறிய வூரில் மக்கள் போய் விட்டமையால் அணிற்கள் வாழ்ந்து விளையாடாநின்ற வீட்டு முற்றமொத்துந் தனிமையுடைய. அவ்வீடு போலப் பொலிவழிந்து வருந்துதலின் அதுபோலத் துயரமான் ஆகுலிப் பட்டு நிற்கின்றேன்; (எ-று)

சாறு. திருவிழா. புலப்பு - வருத்தம் கொக்கி வலித்தல் விகாரம் பெற்றது. போகிய என்பது போகிட்டு. அலப்பல் - அலமருதல்.

73. 42. காம மொழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென அருவி
விடரகத் தியம்பும் நாட வெம்

தொடர்புந் தேயுமோ நின்வயி னானே.

எ-து, இரவுக்குறி வேண்டிய தலைவற்குத் தோழி நேர்ந்த வாய்ப்பாட்டான் மறுத்தது.

— கபிலர் —

உரை:- நடுயாமத்தில் மின்னல் முதலிய தொகுதியையுடையதாகிய மழை பெய்ததனாலே யிடியைமுன் தொடுகின்ற அருவியின் மலைப்பிளப்புக்களிற் சென்று புகுந்தொலியாநிற்கும் நாடனே! நின்னிடத்தில் எங்களுக்குண்டாகிய காமம் ஒழிவதாக ஒழிந்து மறைவதாயிருந்தாலும் யாம் கொண்ட தொடர்பு எந்தக்காலத்திலேனும் கெடுமோ? ஒருபொழுதுங் கெடாது காண்; (.)

யாமத்து மழை பெய்தலானருவி யொலிக்குமென்றது அச்சமாகிய கொடிய இரவுக்காலத்தில் நீ வரப்பாலையல்ல யெனக் குறிப்பான் மறுத்ததாயிற்று. காமம் ஒழிவதாயினுமென்றது இரவில் வருதலானிடைப்படு மேதத்துக் கஞ்சி நின்பால் வைக்குங் காமம் ஒழியினும் ஒழிக வென்றதாயிற்று. எந்தொடர்பு தேயாதென்றது நீ களவிற் புணர்ந்தா யென்றும் நினையன்றிப் பிறிது கொள்ளேமாதலின் தொடர்பு தேயாதென்பதும் கூடவிரும்பின் வரைந்து கொள்ளென வரைவு கூறியதாயிற்று,

———.

75. 43. செல்வா ரல்ல ரென்றியா னிகழ்ந்தனனே
ஒல்லா ரல்ல ரென்றவ ரிகழ்ந்தனரே
ஆயிடை யிருபே ராண்மை செய்த பூச-
னல்லராக் கதுவி யாங்கென்
னல்ல னெஞ்சம் மலமலக் குறுமே.

எ-து, பிரிவிடை மெலிந்த கிழத்தி யுரைத்
தது. — ஔவையார் —

உரை:- காதலர் வினைவயிற் பிரியக் கருதி
னாரென்பது கேட்ட யான் யாங்ஙனம் கருதி
க் கூறினே னென்றால் என்னைத் தனியே விட்
டுப் பிரிந்து செல்பவரல்லரென்றியானிகழ்ந்
திருந்துவிட்டேன்; யான் அங்ஙனமிருக்கத் தலை
வர் பிரியினும் காதல் இறந்து படுபவ ளல்லள்
ஆகப் பிரியினும் பிரியலாகுமென்று அவர் என்னை
யிகழ்ந்து விட்டுப் போயினார்; ஆங்கு இகழ்ந்த
இரண்டு பேராண்மையாற் செய்த கலகம் நல்
லராவைப் பற்றி விழுங்கினாற் போல மான்கன்றை
வருந்தச் செய்து கொண்ட இகழ்ச்சியாகிய
எனது துன்புற்ற நெஞ்சம் கலக்கமடையா நின்றது.
பிரியாரென்ன இகழ்ந்தேன் முன்னம் யான் பின்
னவர் பிரியின், இறியா ளென்ன இகழ்ந்தார். மன்னர்
தாம் தக்கன் வேள்வி மிக்க, வெரியா செழுஞ்சிற்
இமைப்பிலம் பலத் தோனார்க்கு, மரியா விருநின்
போலன்ன வென்ன மதித்தனனே.

திருக்கோவை 340 நோக்குக.
செல்லா ரல்லரென் றியானிகழ்ந்தேன்

சுரஞ் செல்ல லென்க, நெல்லா லவலென்
றவரிக்கு நாம் மொழிவை யிரண்டுரல்,
சொல்லா தயிர்ப் படைக் கோ னெடு மாறன்
இலங்கை தென்று, வில்லவன் பகை போல
லெனதுள்ளாத் தின்னா மெலிவிக்கு மே.

என்பது களவியல் (23.) சூத்திரவுரை யுதாரணம்.

77. 44. காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே.

எ-து, இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது. — வெள்ளிவீதியார்.

உரை:- என் கால்கள் நடந்து நடந்து தேய்ந்து இனி நடக்க வொண்ணாதபடி தளர்ந்தன; என் கண்கள் வருவாரை நோக்கி ஒளியிழந்தன; என் மகளையும் அவளை யழைத்துச் சென்ற காதலனையும் காணப் பெற்றிலேன்; அவ்விருவரையுமன்றி இவ்வுலகத்திலுள்ள மற்றையோர் அகன்ற பெரிய ஆகாயத்தில் தோன்றும் மீன்களைக் காட்டிலும் மிகப்பலர் காணப்படுகிறார்கள்.

கேட்போர் — [illegible].

78. 45. காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்ல லூரன் எல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவன் தாயே.

தெறுவ தும்மனைத் தீங்கிளைப் பிறக் குப்பே.

எ-து, தலைமகற்குப் பாணன் வாயிலாக வாயில் வேண்டிய வழித் தோழி வாயில் நேர்ந்தது.

— அதலாப்டுபு பங்கன் —

உரை:- விடியற் காலை மலர்ந்து விளைந்து செல்லுஞ் செலவினையுடைய தேனைமயக்கித்துக் கொண்டு வெள்ளிய கலனணிந்த பாத்தையனைத் தழுவும் பொருட்டுச் சென்ற வாய்ப்பத்தையுடைய நின் தோழன் இரவிடை வந்துவிட்டானெனச் சொல்லும் செய்க்கு நாயகனைப் பெற்று மகிழ்கிறது, அவனை இனமுடைப் பழைய மனதைத் தழுவி வெள்கலந்து இல்லத்து வந்து புகுகின்ற இப்பாடல் பிறப்புப் பானாற்கு அறுப்பதே தகும் (எ-று)

"உயர் மொழிக் கிளவி தொழிவாயிலாட்டுக்கு" (தொ-பொ- 240) என்ற தலைவன் கிளவியை உயர்த்துக் கிளவிக்குத் தாழ்த்துக் கூறியது இது.

79. 46. அலமரு பூவின் கமம் பலன்ற
கடப்பிய இறகர் மஞ்ஞை ஒற்றி
ஒன்றி துணைக் கொண்ட மாறி மன்ற
தெருவின் ஞாண் பாத்து இடைப்பன வாத
மில்லினறும் பலனித்தும் மின்னலமயாவெழிறுமே
புன்கண் மாலையும் புலம்பு
மின்றுவதோ தேறியவர் சென்ற நாட்டே

எ-து, பிரிவிடைப் பாற்றுவளைக் கண்டு கொடுத்துக் தோழிக்கு இழந்ததி அற்றுவ வெண்பத்தைச்

சொல்லியது. — மாமலாடன் —

உரை:. தோழி! அல்லிப் பூக் கவிந்திரு ந்தாற் போன்ற கூம்பிய சிறகுகளையுடைய வீட்டிறப்பிலிருக்குஞ் சிட்டுக்குருவி முற்றத்தி லே காய வைத்த நெல்லாதிய வற்றைக் கொறித்துத் தின்று தெருவிலுள்ள எருவின் நுண் ணிய மகரந்தப் பொடியைக் குடைந்தாடி மீண்டும் வீட்டிறப்பிற் சென்று தூங்கும் மருங்கையிற் றன் பிள்ளைகளோடு தங்கியிருக்கும் பிரிந்தார்க்குத் துன்பம் செய்யும் மாலைப் பொழு தும் தனிமையால் வருந்துதலும் நமது கா தலர் சென்ற நாட்டி லில்லை போலும். இதனால் நாம்படு வேதனையை அனுபவப்பட்டு உணரவில்லை யென்பாள்.

80. 47. கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே.

எ-து, இரவில் ஒழுகுங்காலை மதி னிலைப் புறமொழியாகத் தலைவற் குரைப்பாளா கத் தோழியுரைத்தது. — நெடுவெண்ணிலவினார்.

உரை: நெடிய வெண்ணிலாவே! கரிய கிளைகளையுடைய வேங்கையின் மலருதிர் கின்ற துறுகல் கரிய புலிக்குட்டியைப் போலத் தோன்றுகின்ற காட்டு நெறியிலே நங்காத லர் களவுப் புணர்ச்சியின் பொருட்டு வேண்டி இராப் பொழுதையில் வருகின்றனர். அவர்

வருவிகாலத்தில் நீ தோன்றினமையாதலின்
நீ அவர்க்குரிமையில்ல தன்மையையல்லதாம்; (உரை)

81. 48. தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்துங் கையா றோம்பென
ஓரை யாயங் கூறக் கேட்டும்
இன்ன பண்பின் நினைபெரி தழுங்கி
நன்னுதற் பசலை நீங்க வன்ன
நசையாகு பண்பின் ஒருசொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே.

எ-து:- பகற் குறிக்கட் டோழியும் பெருந்
(ல)
துறைம் காணமல் பொழுது பெரிதாகலின்
வெறுப்பட்ட இழத்தியது வேறுபாடு கண்டு தோழி
சொல்லியது. — ஆற்றாத் தலைமகட்.

உரை:- தாதினாற் செய்யப்பட்ட
தண்ணென்ற குளிர்ச்சியையுடைய நின்
பாவை காட்டகத்தில் வாடி வருந்தி நுமை
நீலாய் அது வருந்தும்படி நீ கொண்ட செயல
றலைப் போக்குவாயாக வென்று ஓரை
யாட்டத்தில் வந்த தோழியர் கூட்டம் கூறக்
கேட்டிருந்தும் இப்படிப்பட்ட பண்பினை
வருத்திப் பெரிதும் அன்புறுகின்றும் அமைந்து
நிலையின்றி நல்ல நெற்றியின் கண்ணுண்டா
கிய பசலை நீங்க இம்படியாக அப்படிப்பட்ட
82. விருப்பத்தையுடையதாகிய ஒரு சொல்லைத்
தம் காதலர்பால் யாரேனுஞ் சொல்லவல்லரா
தோ சொல்லுவாராயின் அவர் இன்னுமவர்க்கு

[illegible]

திரியலி னெய்யப் புகுந்த காலிலே நுதலின் க
ணைமுகிந்த பசலை தானே நீங்கும்; (எ-று)

சொல்லுவனாராய னெனப்பது தெரு ஒழிப்பெச்சம்.
தாது - மகரந்தம். பொன்னொன்று செய்த பாவை யெனி
னுமாம்; வந்து சென்றது மகளிர் கூறும் வினா
மாட்டு வழக்கு.

துறை:- மகளிர் மறப்பாவை தோனைப்
பாவை யை வைத்து விளையாடும் விளையாட்டு.

83. 49. அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப
இமை மாண் முறுவல் பாயிறு
நீயாகிய நெறி கண்ணிமை
யாரேயோ நின் னெஞ்சு தோள் பலனே.

எ-து. தலைமகன் பரத்தையுடைமை நிமித்த
வழி ஆற்றாளாகிய தலைமகள் அவன் கண்ட
வழி அவ்வாற்றாமை நீங்குமென்று நீங்கியவழி
அப்பரத்தையிடத் தானாகிய தலைமகற் கிசைச் சொல்
லியது. — அம் மூவனார் —

உரை:- அணிலின் பல்லை யொத்த
கொங்கு முதிர்ந்த தாமரையையுடைய நீல
மணியினிறத்தை யொத்த கரிய நீர்ப்பரந்த கடற்
கரைத் தலைவனே! இப்பொழுதின்னும் இனி முறுவ
ல்பிற்காணமாயினும் நீயே யெனக் கினிதாகுக.
நின்னுள்ள மெய்த்து நீடக்கிற காதலியானேயாகுக; (எ-று)

— முதியர் - கரியல் தோல். கனவுக்கு - சாலிய
தலைவியைப் பிரிந்து பரத்தை பால் சென்றுவாழ் தலைவன்

இம்மையின் வேற்று மடந்தையின் றொடர்புடை
யனாயினும் மறுமையிற் பிரிதலமென வேண்டு(ண)ற்
றுணியும் அன்பு தோன்றுவதற்கு மையறிக.

84. 50. ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்
செவ்வீ மருதின் செம்மலொடு தாஅய்த்
துறையணிந் தன்றவ ரூரே யிறையிறைப்
பிலங்கிவளை நெகிழச் சாஅய்ப்
புலம்பணிந் தன்றவர் மணந்த தோளே.

எ-து:- கிழவன் இப்பாங்கியின் வாயில் கேட்டுக் கிழத்தி சொல்லியது. — குன்றியனார் —

உரை:- என்னைப் பிரிந்து பரத்தையர் சேரி யிடத்தராகிய அக்காதலருடைய ஊரானது வெண்கடுகு போன்ற சிறிய ஞாழற் பூவும் மருதமரத்தின் சிவந்த பழம்பூவும் பூத்துப் பரந்து கடலின் துறை மிக்க அழகுடைத் தாயிரா நின்றது; இங்கு என்னுடைய மகிழ்ந்து கிடந்ததுபடி கைவிட்டுப் பிரிகையாலே அவர் முன்பு மணந்தொழுகப் பெற்ற என் தோள் களைவளை கடந்து விலகிய விலகுதலோடு இழிவுற்று இளைத்துத் துன்பத்தையணியப் பெற்றதாயிரா நின்றது.

85. 51 கூன்முண் முண்டகக் கூர்ம்பனி மாமலர்
நூலறு முத்திற் காலொடு பாறித்
துறைதொறும் பரக்குந் தூமணற் சேர்ப்பனை
யானுங் காதலென் யாயு நனிவெய்ய
ளெந்தையுங் கொடீஇயர் வேண்டும்
அம்பலூரு மவனொடு மொழிமே.

எ-து, வளையை நெகிழ்த்துவிட்டுத் தூற்
றொலிய நீர் மடைக் கொண்டு தோழி வாயில் மறுத்துக்
கூறியது. — இன்றிய ளென் —.

உரை:- கூறிய ... கள் கிளைத்திய கழி
கொல்லியின் விளைந்த அரிய மலர்கள் மாலையாகக்
கோத்த தாலத்தினைச் சூடித் துகள் தொங்கும் தாழ்
போலக் காற்றில் அசைந்து துறைகளில் எல்லாம்
பரப்பிக் கிடக்கும் ஆய மணம் பரப்பிவருகின்ற
சுற்றிவிளையாடும் விழைவுத் துறையை யுடையவன்.
என்னை அன்னையும் மிக விருப்ப முடையவளாக
நின்றனாதலால் ... போல் முடைய தந்தை
என்பது நின்னை அச் செய்பவனுக்கு மகிழ்வை
யாவரும் கொடுக்க விரும்புவர்; ஆதலினால் மன்றல்
86. நிகழ்ந்த பொழுதே ... ஊரார் முன் பெருத்த பழிச்
சொல்லும் அச்செயலின் பயத்த மணம் ...
வால் ... தான்; (எ-று)

நீ செய்யன்றி யாரும் ... பொருளின்பத்தின்
உள்ளம் ... நேர்ந்த ...
87. 52. ஆர்கலி மிகுந்த ... இலம்பின்
கூனைத் தினையாய் ... கண்டீட
... இலைவிரல் கூந்தல்
விரிக்குமலரே வெண்பல் மடந்தை
பாந்தனை யல்லயோ ... யானே.

எ-து, வளையை ... கேட்ட தோழி
இத் தோழி ... அறத்தொடு நின்
றமை காரணத்தால் ... என்பது

படக் கூறியது. - பனம்பாரனார் -

உரை:- நரந்த நறிய கூந்தலையும் நிரந்து விளங்கும் வெள்ளிய பல்லினையுமுடைய மடந்தாய்! கடமானையைத் தாக்கிய வலிமையுடைய அருவிநீர் விளங்கும் மலைப்பக்கத்தில் அன்னை வெறியெடுத்தும் அதனை நோக்கிய நீ தான் மிகவருந்தினையாகி நடுங்கியது கண்டு யான் அறத்தொடு நிற்கத் தொடங்கி இறுதி இறுதியாக வெளியிட்டுப் பரவச் செய்தேனல்லேனோ? அவ்வளவும் பார்த்த தலைவனே இப்பொழுது காதலன் வரைவொடு புகுந்தமை கேட்டு மகிழ்கின்றேன்;

ஐஐ. ௫௩. எம்மணங்கினவே மகிழ்ந முன்றில்
நனைமுதிர் புன்னைப் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறியயர் களந்தொறுஞ்
செந்நெல் வான்பொரி சிதறி யன்ன
வெக்கர் நண்ணிய வெம்மூர் வியன்றுறை
நேரிறை முன்கை பற்றிச்
சூரர மகளிரோ டுற்ற சூளே.

சாது, வரைவு நீட்டித்த வழித் தோழி தலைமகற்கு உரைத்தது. - கோப்பெருஞ்சோழன் -

உரை:- மகிழ்ந! நமதில்லின் முன்னே அரும்பு முதிர்ந்த புன்னையின் பூக்கள் பரந்த வெள்ளிய மணலின் பழமத்தினை அலங்கரித்த வெறியாட்டும் செய்களந்தொறும் செந்நெல்லின் வெள்ளிய பொரியைப் பரப்பி

னைத்தே. இடர்கள் பொருந்திய எம் பிறவிகளைத்
துடைக்க வல்ல சேந்தனாகிய முருகனுடைய
அடியை முன் கையைத் தொட்டு 'நின்னிற் பிரி
யேன் உன்னை வாழேன்' என்று ஆணை
யிட்டதைச் சுட்டிக் காட்டிச் சொல்லி மறுத்து
நின்றதன் வண்மையைத் தெரிவிக்கின்றனள். (·).

மணலில் வைக்க தொகைக் கூட்டுக.

89. யானே யீண்டை யேனே யென்னல
னேஏனல் காவலர் கவணொலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலி னிவக்கும்
கானக நாடனொ டாண்டொழிந் தன்றே.

என்பது, களவு நீட்டித்த வழி ஆற்றா
ளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

- மீனெறி தூண்டிலார் -

உரை:- தோழி! யானே யென்றால்
இவ்விடத்தே தானே யிராநின்றேன்;
எனது நலனே யென்றால் - தினைப்புனங் காப்
போர் விடுகின்ற கவணொலி கேட்டு வெருவிக்
கானத்துத் தின்ன யானையான் வளைத்துத் தின்று
கைவிட்ட வளர்ந்த பசிய மூங்கிற் கிளையைக்
கொளவிய மீனைப் பிடித்தெழுந்த தூண்டிற்
போல உயர எழுந்தோங்கும் கானக நாட
னொடு சென்று அவனிடத்திலேயே தங்கி
யொழிந்துவிட்டது; நீயாதறிவேனென்று
யானெவ்வண்ணம் ஆற்றுவேன்; (எ-று)

90. 55. மாக்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப்
பொங்கு பிசிர்த் துவலையொடு மங்குல் மயக்கிக்
கையற வந்த தைவர லூதையொடு
இன்னா வுறையுட் டாகிச்
சின்னாட் டம்மவிச் சிறுநல் லூரே.

எ-து, கிழவனை வரைவொடு புகுதா வியல்,
கிழவன் சிறந்து படுமனைத் தோழி தலைமகன்
சிறைப்புறத்தானைச் சொல்லியது.

— நெய்தற் கார்க் கியர்.

உரை:- தலைவன் வரையாமையால் கிழவளுக்கு இந்தச் சிறிய நல்ல ஊரானது கரிய உப்பங்கழியிடத்துள்ள நீலமணி போன்ற நெய்தல் மலரெல்லாம் குவியத் தெளிந்த தூய அலைகள் பொங்கிய பிசிராகியது விழுபடலும், கையறவந்த மேலே மேகமும் உறைதற் காற்றுடனும் மேகம் கூடி இன்னாமையைச் செய்கின்ற உறையுளையுடைத்தாகும். அது சிறிதும் சில நாள் சிறுமையுடையது. அதனை விலைக்கிறந்து படும் போலும்.

மணி- நீலமணி. உறையுட்டு- உறையுளை யுடையது. சின்னாட்டு- சிலவாகிய நாட்களை யுடையது. இவ்விரண்டும் குறிப்பு வினைமுற்று.

91. 56. வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடைக் கைய ளெம்மொடு உணீஇய
வருக தில் லம்ம தானே

யரிய லோர வரிய லென்ன னைந்தமர்ந் தோரே.

எ-து, தலைமகன் கொண்டு தலைப்பிரிதல்
யறாத்துத் தானே போகின்ற வழியிடைச் சுரத்
தின் பொல்லாங்கு கண்டு கூறியது.

—இறைக்குடி யார்த்தை—

உரை:- கயமனார்ந்த கொடையுடைய
வாய் என்றும் வைத்துப் போற்றுகின்ற காதல்
லோட்டை மேற் சென்ற தொண்டாய் தொன்றுகின்ற
மிகுத்த தசை இலைகளால் பொய்க்கப்பட்ட
னவாய் அழகிய இடந்தோறும் தேடுகலந்த
திரிந்த தண்ணீரை யம் போமாடு சேர
உண்ணும் பொருட்டு வருவோரைகளோர இஃதை
ன்னகியப்பு? அவ்வழை வாரைதயதுண் நில்
அவ்வழைம் பழுதாக்கத் தக்காம வரின் று!
அவன் இனக்கத் தக்காம் தில. தொல்-பார்
தினைக் கையா லெடுத்து படுதால் தொழிப்புத்
தோன்ற வினையுடைக் கைய லெழுன்றன.

92 57. நுவிடைப் பழுறும் யாண்டு கழிந்தன்
கிடுறை மென்றிந் புணர்ச்சி போல
மிரிவரி தாகிய தண்டாக் காமமொ
டுடனுயர் போகிய தில்ல கடனறிந்
திருவே மாகிய வுலகத்
தொருவே மாகிய புன்மைநா மியற்கே.

எ-து, காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய
தலைவன் தோழிக்குச் சொல்லியது.

—இறைக்குடியார்த்தையார்—

உரை:- உருபுனியல் பறிந்து மெய்பிறப்பிற்
யாங்களிருவேமாய்க் கூடித் தோன்றிய இவ்
வுலகத்திலே அங்ஙனம் இப்பிறப்பிற் கூடி
யிராதபடி எம்மைத் தனிமைப்படவைத்துக்
காத்தலால் யாம் ஒருவேமாகி யிருக்கின்ற
புன்மையை நீக்கப்பட்டுக் கெடுக்கு உயிர் பிழைத்
திருப்ப திறங்காட்டல், - [நீரினியலும் அன்றில்
தென்று பிரிந்தால் மற்றொன்று உயிர் தானே
துறக்குமாறு போலநம் காதலர் எவ்வெவ்வி
தால் அருகிக் கூடப்பிரியுங் கருத்தில் தன்
93. அவரோடேயே எம் உயிர் போவதாக;
தலைவி கூற்று மெய்பிறப்பில் இருவேமாய்க்
கூடப் போந்தனம்; இவ்வுலகிலே இப்புணர்ச்சி
க்கு முன்னர் யாம் வேறு வேறுயுற்று துன்புத்து
இன்று நாமேகிலேதேது செய்திய பிரிவரிதாகிய
காமத்துடனே இருவருக்கும் உயிர் போவதாக
இஃது நெஞ்சுக்கு விருப்பமென்றாள். என்பது மெய்
யுறு தன்னிற் புணர்ந்தும் பிரிவச்சமும்
கூறிற்று. —. தில் - விழைவின்கண் வந்தது.

[illegible]

94 58. இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே.
என்பது, கழற்றெதிர்மறை. — வெள்ளிவீதியார் —

உரை:- ஆதித்தன் வெயில் விளக்கொளி
க்கச் செய்கின்ற வெய்ய மிக்க கற்பாறையி
லிட்டு எடுக்க வியலாதபடி கைமுடமாகிய
கூறவியலாதபடி வாயும் ஊமையாகிய
ஒருவன் கண்ணால் மட்டும் நோக்கிக் காக்
கின்ற வெண்ணெய்த் திரளை உருகி அப்
பாறையிற் பரந்து பட்டது போல எனக்கின்
றாகிய இந்தக் காம நோய் தான் என்னுடம்
பெல்லாம் பரந்துவிட்டது; இனியான் பொறு
த்துக் கொள்ளுதலும் அரிதாயிராநின்றது;
அதினை இடித்துரைத்துக் கூறு நட்பாளர்
ராகிய நுங்கள் வார்த்தையின் பயனை
பாக்கும்படி நிறுத்தல் செய்தால் நன்மிகநல்லது;
அப்படிச் செய்வதில் எனக்கு மிக விருப்பமின்று.

பரந்தன்று - பரந்தது. நோன்றல் - பொறுத்தல்
அறை - கற்பாறை.

95-59. பதலைப் பாணிப் பரதவர் கோமா.
மதிலைக் கின்றத் திகல்வாய்க் குன்றனைக்
குதிரை மொட்டு பொதிந்த கொலைநாறு கின்
னாறுநுதல் மறப்பரோ மற்றே முயலவுந்
தாமம்பல விலங்கிய வடுமம் பெறூடு
னிரும்பா வாகலி னீடலோ வின்றே.

எ.து, பிரிவிடை யழிந்த கிழத்தியைத்
தோழி வற்புறுத்தியது. - மோசிகீரன் -

உரை:- மதுகண்மாக்கினை யென்னும்
பறையும் அதற்கேற்ற தாள வோசையும்

கிளிக்காது முழங்கு தேரினையுடைய பரதவர் தலை
வனாகிய அதிலென் பவனது குன்றத்தின்
கண்ணுள்ள அகன்ற வாயினையுடைய சுனையா
ன சுனையிற் பூத்த குவளையொடு தொடுத்த கட்டிய
மலர்ப் பத்தனையின் மணம் வீசுகின்ற கூந்த
லாகிய இதனை மறந்து பிரிந்து செல்வாரல்லர்;
அங்ஙனம் மறந்து பொருள் தேட முயன்றாலும்
பலவாய அறங்கள் குறுக்கிட்டுத் தடுக்கின்றன;
சென்று தேடுவதனும் அவ்வரிய பொருளின்
மிகவும் தகுதி வல்லவாதலின் அவர் நின்னைப்
பிரிந்து செல்லாதவரென்று முடிபு. அதனை நீ
96 வருந்தாதொழிக.

பதி. ஓதிகண் மாக்கிள்ளை - பாணி - தாமரைவோனை
அதில - பரதவர் கோமான் பெயர். அதிலக்
குன்ற சுதுணையின் வல்லோனை நோக்கி
இருட்டியுத்தது.

97. 60. குறுந்தாட் கூதளி யாடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருக்கை முடவன்
உட்கைச் சிறுகுடை கோலிக் கீழிருந்து
சுட்டுபு நக்கி யாங்குக் காதலர்
நல்கார் நயவா ராயினும்
பல்கால் காண்டலும் உள்ளத்துக் கினிதே.

என்பது, பிரிவிடை யாற்றாளாய தலைமகள்
தோழிக் குரைத்தது. — பரணர்.

உரை:- காதலர் நமக்கு நன்மையளியாது
நம்மை விரும்பாராயினும், — அறிய தண்புதுமையுடைய

கூதாளி படர்ந்து காற்றிலசைகின்ற நெடிய
மலையுச்சியிலே தொடுத்த பெரிய தேனடை
யைக் கண்ட இருக்கையிடத்திருந்து எழுந்
தியலாத முடவனிடந்தானொருவன் அகங்
கையால் தொகுத்த சிறிய குடையை அதனடியிற்
கோலிக் கொண்டு கீழிருந்து அத் தேனைக்
கையால் சுட்டிச் சுட்டி வாயிலூட்டுவதாகக் கருதி
விரலைக் கையை வாயில் வைத்துச் சுவைத்து
நக்கினாற் போல அவரைக் கண்டவுடன்
மென்பு நெகிழ்ந்த புணர்ச்சியைக் கருதி மகிழ்
காதலர் அவரைப் பலகாலும் காண்டலும்
எம் நெஞ்சத்துக் கினியதாயிருக்கின்றது.

28. 61. தச்சன் செய்த சிறுமா வைய
ஊர்ந்தின் புறாஅ ராயினுங் கையின்
ஈர்த்தின் புறூஉ மிளையோர் போல
உற்றின் புறேஎ மாயினு நற்றேர்ப்
பொய்கை யூரன் கேண்மை
செய்தின் புற்றனஞ் செறிந்தன வளையே.

எ-து, தோழி தலைமகளை வாயின்
மறுத்தது. — தும்பிசேர்கீரன்.

உரை:- நல்ல தேரையுடைய பொய்
கை மிக்க ஊரனே! தச்சனாற் செய்யப்பட்
ட அழகிய சிறுகாற் சிறு தேரிற் ஏறிச்சென்று
இன்பமெய்தாராயினுங் கையாலிழுத்து மகி
ழும் இளையோர் போல நின்னைக் கலந்து நல
னடையப் பெறோமாயினும் நின்னைக் கண்ட

மாத்திரத்திற் புணர்ந்த நட்பு நயங்கொண்டு
யாம் இன்புறுவேம் அதனால் எம்முடைய
ஐயின்கணுள்ள வன்கணால் சுழலாமற் செறிந்
தன கண்டாய்; ஆதலின் இனி இல்லிதை யாமா
றிது கொல்; (எ-று)

இஃது குறையுற்றுத் தொழுது கொண்டு கூறியது.
நாணமென்றும் செய்கையுடையவனாதலின்
இதன் "ஏனைத் தொன்றுந் தொழுதேன்(தொ-
பொ. 39) என்பது தலைமைக்கு என்பர்
பேராசிரியர். (தொ. பொ. 509)

99. 62. கோடல் எதிர் முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையொ டிடைபட விரைஇ
ஐது தொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோள் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கு மினிதே.

அ. து, தலைமகன் இடந்தலைப்பாட்டின்
கட் கூடியது நெஞ்சிற்குச் சொல்லியது.

– சிறைக்குடி யாந்தையார்.

உரை :- மணங்கமழும் இதழ்களையுடைய
குவளை மலரோடே வெண்காந்தளின் மொட்டை
யும் பசிய முல்லை மலரையும் நெருங்கமாக
இடையிடையே பொருந்தத் தகுந்து அழகிதா
கத் தொடுத்து மாட்சிமைப்பட்ட பூமாலை போல
நறுமணங்கமழுகின்ற வளாவிய அந்நல்
லாளுடைய உடம்பு மாந்தளிரினுஞ் சாயுந்
தொழிலையுடைய தாயினும்; அதனைத்

[illegible]

கொள்வதற்குரிய மேன்மையை உடையதாயிருக்கின்றது; ஆதலின் நெஞ்சே! நின் அவாக்கிடமானது ஒழிய விடு மகிழ்வாயாக:

100\. 63. ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக வெண்ணுதி யவ்வினைக்
கம்மா வரிவையும் வருமோ
வெம்மை யுய்த்தியோ வுரைத்திசி னெஞ்சே.

து, பொருள் கடைக் கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது. - உகாய்க்குடிகிழார்.

உரை:- நெஞ்சே! வறியோர்க்குக் கொடுத்தலும் தம் நுகர்ந்து அனுபவித்துப் போகந் துய்த்தலுமாகிய இவ்விரண்டையும் பொருளில்லாதார்க்கு இல்லையென்று அப் பொருளீட்டும் செய்வினையை அளவு கடப்பச் செய்யக் கருதாநின்றனை; அப் பொருளின் செயல்வகைக்கு ஏன்று அழகிய மாமை நிறத்தையுடைய அரிவையும் வருவாள் கொல்லோ? வந்தால் நிரம்ப நலமேயாம். அவள் வாராதபடி செய்துவிட்டு எம்மைமட்டும் நீ அழைத்துச் செலுத்தக் கருதுகின்றனையோ? நீ எண்ணியது யாது? அதனையுரைத்துக் கூறாய்; (எ-று)

"வறியோர்க்கிடையோர்" என்பது திருக்கோவையார் (333) மேய்ப்பாட்டுப் பிரிதற்கட் பொருள் வந்துற்றுப் பதிப்பித்தவால். பயன்:- இல்லத் தருங்கல்.

101. 64. பல்லா னெடு நெறிக் கன்று வாய் ஒழிந்தெனப்
புன்றலை மன்றம் நோக்கி மாலை
மடக்கட் குழவி யலவந் தன்ன
நோயே மாகுத லறிந்துஞ்
சேயர் தோழி சேய் நாட்டோரே.

எ-து, பிரிவிடையாற்றாமை கண்டு
கூறுவனைச் சொல்லிய தோழிக்குக் கிழத்தி
யுரைத்தது. — கருவூர்க் கதப்பிள்ளை —

உரை:- தோழீ! நெடிய நெறிக்கண்
மேயச் சென்ற பலவாய ஆனிரைக்கண் நிற்
கின் கன்று பிரிந்து தொழுவத்திருந்து வருந்து
தலாலே மாலைப் பொழுது புகுந்தமை கிடந்
தையுடைய அத் தொழுவத்தைக் கண்டு இள
மையுடைய கன்று தனியிடத்தில் வாடிற்
போன்று இப் பொழுது அயலிடத்தன ராகிய
காதலர், யான் நோயுடையே னாதலை யறிந்திருந்
தும் இன்னும் சேய்மைக் கண்ணே
யிருக்கின்றார்; வந்தாரில்லை; ஆதலால் யான்?
இந்நோயை எவ்வண்ண மாற்றுவேன்?

102. 65 வன்பரற் றெள்ளறல் பருகிய விரலைத்
தன்புறு துணையொடு மறுவந் துகளத்
தானெவந் தன்றே தளவுடு தண்கார்
வாராதுறையுநர் வரனசைஇ
வருந்தி நோநொந் துறையலிருக்குந் தோளையே

எ-து, பருவங்கண்டழிந்த தலைமகள்
தோழிக்கு உரைத்தது. — கோவூர் கிழார் —

உரை:- தோழி! காதலர்தாம் இருந்தகால
த்தும் வாராது சென்ற நாட்டிலே தங்கி
யிருக்கின்றனர் அவர் வருதலைக் கருதி நாம்
வருந்தி நொந்து உறையும்படியிருக்கக் கா
யாய் நின்று நம மேல் நின்றும் இன்புறுத்
தக்கருதி வெவ்விலத்துக் கானயாற்றிலே
தெளிந்தோடுகின்றதைப் பருகிய இரலைமான்கள்
தங்களின்புறு பெண்மானுடனே அழைந்து திரிந்து
துள்ளி விளையாடும்படி மழையைப் பெய்வி
ன்று சொல்லிய கார் வந்திறுத்தது காண்டாய்;
இருந்த கார்ப்பருவம் வந்திறுத்தது.
அதனால் கலை உழையோடு விளையாடுதல் போல
அவரோடு யாம் கலந்து மகிழ அவர் வந்தா
ரில்லையென்றியங்கியதாயிற்று.

66 மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே.

எ-து, பருவங்கண்டழிந்த கிழத்தி
த்தோழி பருவமன்றென வற்புறீஇயது.

— கோவத்தன்.

உரை:- பெரிதும் நிலைபெற்ற கொன்றை
மரங்கள் பொல்லாதன; கற்கள் விளங்கிய அத்த
ன்கட் சென்ற காதலர் தாம் திண்ணமாக
வருவேம் என்று கூறிய கார்ப்பருவம் வருமு

நிற்கு மென்னை முதுவேனிற் பருவத்திற் புதி
தாக வந்து மழை பெய்து சென்ற மேகத்தை
நோக்கி இது கார்ப்பருவமே யாமென்று
கருதி அரும்பி மலர்கள் நெருங்கக் கக்கியக
கோடறு முல்லை கொடிபோல நீண்ட பூங்கொ
த்துக்கள் மலர்ந்து உதிரத் தொடங்கின;
ஆதலின் அவை இன்னமாக அறியாமை
யுடையன; (எ-று)

104. 67. உன்னார் கொல்லோ தோழி கிள்ளை
விளைவாய்க் கொண்ட வேப்ப வொண் பழம்
புதுநா ணுழைப்பா னுதிமாண் வள்ளுகிர்ப்
பொலங்கல வொருகா செய்க்கு
நிலங்கரி கள்ளியங் காடிறந் தோரே.

எ-து, பிரிவிடை யாற்றாது மெலிந்த தலைமகள் தோ
ழிக்கு உரைத்தது. — அள்ளூர் நன்முல்லை-

உரை:- தோழீ! கிளிகள் தம் வளைந்த
வாயில் கௌவிக் கொண்ட ஒள்ளிய வேப்
பம்பழம் புதிய நாரைக் கோக்கின்ற தொழிலோன்
தன் கூர்மை மாட்சிப்பட்ட பெரிய நகத்தாற்
பற்றிக் கொண்ட பொற்கலத்திய
மணியை யொப்பாகாநின்ற இந் நிலமட்டத்துக்
க் கள்ளிகளெல்லாம் கரிந்த அரத்தினிடைச் சென்ற
காதலர் தாம் குறித்த கார்ப்பருவம் வரத்தொ
டங்கியதைக் கருதாரோ? கருதாராகில்
கண்ணாவின் வருவார். (எ-று)

வேப்பு பழுப்பது அதைத் திங்கள் [illegible]

தலைவன் இருந்தது காப்புமிகை யென்பது பெறப்
பட்டது. தலைவி முதல் காப்புமிகை யாதலின்.

105 68. பூழ்க்கா லன்ன செங்கா லுழுந்தின்
ஊழ்ப்படு முதுகா யுழையினங் கவரு
மரும்பனி யச்சிரந் தீர்க்கு
மருந்து பிறிதில்லை யவர் மணந்த மார்பே.

எ-து, பிரிவிடைக் கிழத்தி [illegible] கூறியது.

— அள்ளூர் நன்முல்லை —

உரை:- கௌதாரிப் பறவையின் கால்
போன்று சிவந்த அடித்தண்டினை யுடைய உழுந்
தின் உதிரும் பக்குவம் பெற்ற முதிர்ந்த காயை
மானினங்கள் சென்று கவர்ந்து தின்னுகின்ற
பனி தெறற்கரிய முன்பனிக் காலத்திலே யான்
அடைகின்ற காமநோயைத் தீர்த்தற்குரிய மருந்
து அவர் என்னை யணைந்த மார்பே யல்லாமல்
பிறிது யாதுமில்லை; அம்மார்பை விட்டும் அதனை
யைப் பெறுவதையால் என்நோய் நீங்குவதுமில்லை (எ-று)

'அல்லாமல்' என்னுஞ் சொல்லைப் பெய்து
முடித்தலால் இசையெச்சமாயிற்று. அம்மார்
பை முதற் குறிப்பெச்சம்.

106. 69. கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ்க் கிளைமுதற் சேர்த்தி
யோங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்குஞ்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே.

இ-து, தோழி தலைவிக்குக் கூறியது.

- குருங்குட் காவிரனை.

உரை:- கரிய கண்ணினையுடைய நாரையின்
ஆண் குருகு பார்த்த வடிக் காரணைத்தால்
இறக்குத்(து)றையிலே வங்கமையுமிருந்து உயிர்வாழ்
விருப்பமது அதன் மனைவியாகிய விருப்பமிக்க
பெண் குருகு, தன் பெடையை விட்டுப் பிரிதலைத்
தாங்கியதை வலிய இடையை நீ தன் சுற்றத்தில்
இருந்து விட்டுப் பறந்து சென்று மறுபு செய்து, பின்பு
தான் உயர்ந்த மேல்நிலையுடைய பக்கமும்
தெரிகிலத்தில் விழுந்து உயிரைப் போக்குகின்ற
அரவியுடையமலை நாடனே! நாகுரல் காலம்
வாழ்வாயாகு. நீ இரவில் வருதலால் யாம் வருந்து
கின்றேம். ஆதலால் நீ நடுயாமத்தில் இ
ரவையும் வாராது ஒழிவாய் கொ. ஆண் குருகு
- நாரை. காலம் - வந்த பெண் பதன்மேல் உ. மறுதி-
பெண் குருகு - சுருக்கம் - பக்கமல்.

107. நமக்குப்பெரு - நமக்குமிழும்; பயன் - இவைக்கு
மறுத்து வரையுடைதல்.

108. 70. நெடுங்கீழ் வேலி நயானைத்தரு இறாயக
னைறந்த மலி வாணையக் கிளவோ
யினைய வென்றவட் புனையா வறியேன்
இல் மெல்லிய வே கிளவி
யின மெல்லியள் யான் முயங்கும் காலே.

ஈ-து. புணர்ந்து நீங்கிய தலைமகனை
தன் நெஞ்சிற்குச் சொல்லியது - ஓதலம் பேரியார்.

உரை:- மாரி [illegible]

சிறிய கூந்தலையும் [illegible] கூந்தலையு(ம்)

டைய இளையளாகிய நங்காதலி, [illegible]

[illegible]

[illegible] காலத்து [illegible]

[illegible]

[illegible]; அவள் [illegible]

[illegible]

[illegible]

[illegible];

[illegible];

யான் [illegible] புணர்ந்த [illegible]

[illegible] மெல்லிய [illegible]

[illegible]

[illegible]? ஐ. கு (எ-று)

109. 71. [illegible]

[illegible]

[illegible]

[illegible].

இ-து, [illegible]

[illegible]

கியது. = [illegible] பாட்டு.

உரை:- [illegible]

[illegible]

[illegible]

[illegible] காதல்,

யானை தொண்ட கடமை கொடியக்கு மெய்க்கொ
ண்ணின் மெய்க்கொ யாருமே. தேர்த்து வைத்த
வைரட்டு கோடிய லோகமெவணிற் பைரட்டு கவி
மலேயாரும்; ஆதலின், ஏறிஞ்சு கூட மேவிணி
றுஸ் காட்டுவல் வேறு வைமுதறிவா தெஞ்ஞு
நீ தொடச் சைலஜூனை யேர் தெண்ணு கானர்;
யானை வருகேவை னைல் லேனை - (ஏ-று)

அம்பகம் - அழுதிப் பாக்கு பாவபு;
ஆதலினென்பது - மேற் மேழிப் பைசசம்;
நமப்பக் - பிறன்கட் டோனர்ந்திய பிணியை
ருய இனியால்; பயன் - கிடைத்தமுடிக்கல்;

110. 72. தூஙவற் தலைமரீஇ துணைய லேவைத்
தெல்லாரு முறிய கொய் நெய்தனைவே
தெவழுத் திண்ட மென் தோள் மாமலைப்
பசிஇய சித்திரிய வெணிற்
குறீஇ யொப்புமின் பெடைமகக் கன்னே.

ஏ-து, தியுகன் ஏன் வேறுபாடு கண்டு
வினவிய பாங்கற் குரைத்தது. - மொண்டு.

உ-ரை:- தேன் போறுமிய செவியும்
திரண்ட மெல்லிய தோளுமுடையாளாகிய
மையிட்டுத் தோலே பதிந்து கிளைவால் விளைக்கும்
பட்டுதியின் கதிர் கிளைக் கொய்யாதபடி
அழுபாத்து விழும் ஓசைகிய பொருட்டு
ன்றுவ ளுடைய பெரிய மலைப் பேரூர்ய்
குளிர்ச்சியுடைய கண்கள் கொண்டாற்
கின்னைமை செய்தலால் கீழ்மலை யொத்த

அம்மலர் காற்றொடு அசைவது போலச் சுழன்று
வருந் தகுதி படைத்தனை; அவ்வழிக் காதலித்
தோழுக்கு காமமாகிய நஞ்சு தெய்வத்தை அம்மை
யைத் தன்மீது பாய்ந்த பாலறிவுப்படி
தின்புறுத்தத் தொடங்கினை; இனியான் உய்வ
தெவ்வண்ணமோ?

வெண்கோழியுடைய ஒப்புமானத்தைக் கூட்டுக.

111 73. மகிழ்நன் மார்பே வெய்யை யாநீ
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போகிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே.

என்பது, பகற்குறி மறுத்து இரவுக்குறி
நேர்ந்து அச்சம் மறுத்தலை மேற் தலைமகட்
குத் தோழி சொல்லியது. பரணர்.

உரை:- தோழி வாழ்வாயாக! நீ தான்
மகிழ்நனது மார்பினைக் காண்டற்கு விருப்ப முடை
யையாதலால் அதனை வரையுடம்படுத்த
வேண்டின் இவனைக் கிழியும் பிழைப்பித்துப்
போக்கினமை காரணமாக அவனைப் பிரிந்த
தனை என்று வருந்தாதே கொள்; புதிதாக
நன்னனது நறிய கூவன் மரத்தைக் கொ
ன்ற கேட்டுயதற்கு இயைந்தமை கடந்த போரின்
கட் சென்ற குடிமையுடைப் பாடியுள்ள கோ
சரைப் போல வன்கண்மையுடைய சூழ்ச்
சியும் சிறிது வேண்டும்; அன்றியின்றிப்

புலம்புதல் குறிப்பாடுடையதென்று தான்;

112. 74. விட்ட குதிரை விசைப்பி னன்ன
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்
யாந்தற் படர்ந்தமை யறியான் றானும்
வேனில் ஆனேறு போலச்
சாயின னென்பநம் மாணலம் நயந்தே.

எ-து, தோழி, தலைமகன் குறை மறுத்தவாற்றாற் கூறியது. - விட்ட குதிரையார் -

உரை:- செலுத்தவிட்ட குதிரையின் விசைப்பைப் போன்ற விசும்பினைத் தீண்டுகின்ற பசிய மூங்கிலையுடைய மலைநாடன் தன்னை நாம் விரும்பியிருப்பதைச் சிறிதும் அறிந்திலன்; அங்ஙனம் அறியானாயினும் அவனும் நமது மாட்சிமைப்பட்ட நலத்தை விரும்பி வேனிற்காலத்து ஆனேறு போல வருந்தியிருப்பனெனக் கூறுகின்றனர்; (எ-று).

இது வேனிற் காலத்து ஆனேறு தண்ணீரின்றிச் சென்று நீர்வேட்கையால் வருந்துதல் போல வருந்துமென்க.

சாயினன் - இளைத்தனன் எனவுமாம்.

113. 75. நீகண் டனையோ கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையின மொழிமோ
வெண்கோட் டியானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே.

எ-து, தலைமகன் வரவுணர்த்திய

பாணற்குத் தலைமகள் கூறியது.

— படுமரத்து மோசிகீரன் —

உரை:- பாண! எம் காதலர் வருவதனை நீ நேரிற் கண் கூடாகக் கண்டனையோ? அன்றி யாரேனும் யாம் கண்டேமென்பாரைக் கேட்டறிந்தனையோ? யாரிடத்திற் கேட்கப்பெற்றனை? வேறுவகையாற் தெளிவுபட இவற்றை யுரைப்பாய்; ஆதலின் யாங்கள் மகிழும்படி சொல்லுவாயாக; வெள்ளிய கொம்புடைய யானை சோணையாற்றிற் படிந்திருக்கின்ற தலைநகரென்றதில் நீ பொன் வருவாய் மிகப் பெற்ற பாடலியினைப் பெற்று வாழ்வாயாக; (எ-று)

114\. 76. காந்தள் வேலி யோங்குமலை நன்னாட்டுச்
செல்ப வென்பவால் கல்வரை மார்பர்
சிலம்பிற் சேம்பின் அலங்கல் வள்ளிலை
பெருங்களிற்றுச் செவியின் மானத் தைஇத்
தண்வரல் வாடை தூங்கிய
கடும்பனி யற்சிர நடுங்கஞ் சேறே.

ஏது, பிரிவுணர்த்தச் சென்ற தோழிக்கு அவர் பிரிவு முன்னுணர்ந்த தலைமகள் சொல்லியது.

— கிள்ளி மங்கலங் கிழார் —

உரை:— தோழி! மலையின் சாரலில் சேம்பின் அசைகின்ற பெரிய இலை பெரிய களிற்று யானைச் செவியைப் போல அடங்கப் பனித்துளியைத் தாங்கி வருகின்ற வாடைக் காற்று அசைத்து அசை

யாகிய மெல்லிய தென் பனிக்காலத்தில்
நாம் தனித்திருந்து அவ்வாறுடையால் நீ
ங்கிருந்து பெருந்துன்பத்தை யுடையேமாயினும் படு
யானைத் தீண் போன்ற நீண்ட வளைந்த துதிக்
கள் பொருந்திய மார்பையுடைய நம் தலைவர்
செல்லக் காரணத்தைக் கூறி வேறியலாத் தன்மையை
உணர்ந்து அவ்வ நல்லார் கள் [illegible]
பெருகின்ற தொன்று அறிந்திலர் [illegible]
றிலர்.

118. 77. அம்ம வாழி தோழி யாவதுந்
தவறெனிற் றவறோ விலவே வெஞ்சுரத்
துலந்த வம்பலர் உவலிடு பதுக்கை
நெடுநல் யானைக் கிடுநீ ழலி
யரிய கானஞ் சென்றோர்க்
கெளிய வாகிய தடமென் றோளே.

து., பிரிவின்கண் ஆற்றாளா
கிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

— மதுரை மருதனிள நாகனார் —

உரை: தோழீ! வாழ்வாயாக;
யானொரு கூறுகின்ற அதனைக் கேள்; நம்
காதலர் வாடுதலைத் தேடிக் காணலர்
கின்றனர்; கொடிய சுரத்தின் கண்ணே
இறந்து போனவர்களாகிய படட அயலார்
டன்னாரைப் புதைத்துக் கற்களிட்டு மூடிய
குவியல் - நெடிய நல்ல யானைக்கு நீழ
லிடுமிடமாகக் கிடக்கும் செல்லுதற்கரிய

காணத்தின்கட் சென்று காதலனைக் கெடுத்து
என் பெரிய தோள்கள் எளியவாய் வாட்
டின்றன; இஃது எல்லா வாவது தவறுதா
னென்றோ போலோ தவறோ யாதோ;

வயவர்- அரசர் படைத்தலைவர். உவல்- சருகு;
தழைய மாம்- பசுந்தழை. இலியல்- கற்றிலியறு
மாம். நீர்- கிழிநீர்.

116. 78. பெருவரை மிசையது நெடுவெள் ளருவி
முதுவாய்க் கோடியர் முழவிற் றதும்பிச்
சிலம்பி னிழிதரு மிலங்குமலை வெற்ப
நோதக் கன்றே காமம் யாவது
நன்றென வுணரார் மாட்டுஞ்
சென்றே நிற்கும் பெரும் பேதைத்தே.

எ-து, பாங்கன் தலைமகற்குச் சொல்லி
யது. — நக்கீரர் —

உரை:- பெரிய மலையின் மேலதாகிய நெடிய
வெள்ளிய அருவி, அறிவு வாய்த்த நியமுடைய
கூத்தர் முழக்கும் முழவு போல ஒலித்துச்
சிலம்பினின்று வீழாநின்றும் இலங்கிய மலை
யையுடைய வெற்பனே!

காமமானது எவ்வாறேனும் நல்லதென்
றறியாத பயனில் மாக்களிடத்துஞ் சென்று நிற்
கும் பெரிய அறியாமையையுடையதாதலால்
அது வெறுத்துக் கொண்டு கொள்ளத்தக்கதாம்;(எ-று)

117. 79. கான யானை தோனயந் துண்ட
பொரிதா ளோமை வளிபொரு நெடுஞ்சினை

புலங்க ருலவை யேறி வெய்ய வெவ்வைப்
புலம்பு தரு குரல புறவுப் பெடை பயிரும்
அத்த மண்ணிய கல்லிடைச் சுரன்
சென்றனர் கொல்லோ மாண்டமையார் தமக்
செல்லே மென்ற தப்பற்
சொல்லா தகறல் வல்லு வோரே.

ஈ-து, பொருள்வயிற் பிரிந்த தலைமகனை நினைந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

— இடைவாயிற் கிழத்தனார்.

உரை:- நமக்கு யாம் பொருட்குச் செல்லேமென்ற தவறிலாகிய என்னைக் கொண்டுபோகாது சொல்லாது பிரிந்து போதலில் வல்லோராகிய காதலர், அருளில்லாமையால் மேல் தோலிப் பொளித்துத் தின்னப்பட்ட பொரிந்த அடியையுடைய நிலைமரத்தின் காற்றின் மோதப்பட்டு ஒலியைச் செய்வதாகிய அலைகின்ற கொம்பிலேயேறி வெம்மை வடிந்திய நிலையுடைய புறத் தன்பெடையைப் புணர்ச்சிக்கு அழையா நிற்கும் அருத்தின் நெருங்கிய அழைகிய
118. இடைச்சுரமாகிய நெறியில் சென்று தங்கா நின்றனர் கொல்லோ; (எ-று)

சொல்லாதகன்றோர் அருத்தச் சிறுபாதி சென்று இன்று தங்கியிருப்பாரோ? என்றதாம்.

இ-ள்- உலவை - மரக்கிளை. பெடை கோட்டு; கிளையாகிய உலவை எனத்.
சேர்த்தல் - தங்குதல்.

119 80. கூந்தலாம்பன் முழுநெறி யடைச்சிப்
பெரும்புனல் வந்த விருந்துறை விரும்பி
யாமஃ தயர்கஞ் சேறுந் தானஃ
தஞ்சுவ துடைய ளாயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வே லெழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடு காக்கதன் கொழுநன் மார்பே.

எ-து, இது மகட்குப் பாங்காயினார் கே
ட்பப் பரத்தை சொல்லியது. - ஔவையார்.

உரை:- முழுது நெறிப்பையுடைய
கூந்தலில் ஆம்பற் பூவைச் சூடிப் பெரிய
புதுவெள்ளம் வந்த பெரிய துறையை விரும்பிச்
சென்று காதலனுடன் யாம் ஆடுகின்ற நீ
ராட்டணிக் கழித்து நீச்செய்வோமாகிச்
செல்லாநிற்போம்; அச்செயலைக் கண்டு
அவள்தான் 'நம் காதலனை இவள் கைப்பற்றி
க் கொண்டனள் காண்' என்று பொறுத்து அஞ்சு
வளாயின் வெய்ய போரிற் பகைவரது வலி
யொழியக் கழிய வென்று கொன்றும் பலவாய
கொற்பகையை யுடைய பழியமானத்தி
120 யின்றலைமகன் எழினி யென்பான் வெட்சி
முனையிற் பெரிய ஆனிரையைக் காத்து நின்றது
போலத் தனது காதலனுடைய மார்பை யாம்
சேர்ந்து கொள்ளாதபடி ஆயத்தாரொடும் வந்து
அவனைக் காக்கக் கடவளாக (எ-று)

முழுநெறிக் கூந்தலென மாறிக் கூட்டுக.
அடைச்சி - சூடி - நீர்த்துறை. வலி;

121. சா. இவளோ நின்னொடு கொண்ட வென் சொற்றேறிப்
பசலை யூருதல் பசிகின யொழிகின்றுப்
புது நல னிழந்த புலம்பு மா ருடைய
ளுதுக்கண் டெய்ய சுலாவல் வேண்டு
நிலவு மிருளும் போலப் புலவுத் திரைக்
கடலுங் கானலுந் தோன்று
மடலே ழ் பெண்ணை யந்தி துறைவனே.

எ-து, தோழியிற் கூட்டங் கூடப்பெறா
யுந் தீயகற்றுத் தோழி சொல்லியது.

- வடமலவண்ணக்கன் -

உரை:- இவள்தான், உன் சொல்லை உறுதியாகக் கொண்ட என் சொல்லாலே தெளிந்து ஊறுதல் மாத்திரமல்ல அரிமையும் நிறைந்த பலவாகிய இலைகளை நெருங்கி இருண்ட (சோலை) நெருங்கித்து நின்ற புன்னைப்பூ டுக் கைவிட்டதனாலே தன் புதிய அழகினை யிழந்து வாடிய நெஞ்சத்தையுடையவளாயினாள்; இவள் நிலைமையை நீக்குதல் வேண்டும்; அன்றியும் நிலவைப் போலப் புலால் நாற்றத்தையுடைய அலையையுடைய கடலும் இருளைப் போலக் கழிக்கரை
122. க் சோலையுந் தோன்றி நின்ற மடல்கள் வெட்டப்படாது வளர்ந்த பனைமரங்களையுடைய அங்கணுடைய இனிய நல்லூரை உடைய துறைவனே; நீ இதனையும் நீக்க வேண்டும் (சா.ஞ)
உன்னால் வேண்டு மென்பதை மொண்டிருக்கும்

கூட்டுக. நின். அருவி. ஆயுமயு. வருத்தும.
ஆர். அனை. தெய்ய - முன்னிலையசை. நிலை
பெறும் - நிரனிறையணி. உறைத்தெட்டியது
பகற்குறி யிடையீடாக வாராது நின்றேல்
இரவுக் குறி வருமாறு தன்னாளைச் சுட்டிக்
காட்டியதாம். மாண்பு - மகிழ் பெண்மை
யாகத் தெரிந்த வாறு.

123. காடுறு வணர்கதுப் பூளிப் புறஞ்சேர்
பழாஅ மென்று நம் மழைக் கண்டுடைப்பார்
யாரா கியர்கொல் தோழி சாரல்
பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால்
கொழுங்கொடி யவரை பூக்கும்
அரும்பனி யச்சிரம் வாரா தோரே.

சா.து, பருவங் கண்டழிந்த தலைமகள்
காதலனென்று அன் புறுத்துத் தோழிக்குச்
சொல்லியது. — கடுவன் மள்ளனார்.

உரை:- தோழி! மலைச்சாரலின் கண்
ணதாகிய பெரிய தினைப் புனத்திலுள்ள சிறிய தினை
கொய்தபின்பு முன்பு தினையரிந்து விளைந்த
அத்தினைத்தாளில் படர்ந்திருந்த கொழுத்த அவ
ரைக் கொடி பூத்தலின்று நாங்கள் கூறிய முன்
பனிக்காலத்து நம் காதலர் வந்து திருமணம்
செய்வாராயினர்; இனி வாரிக் கட்டிய கடை
இழுன்ற கூந்தலைக் கொழிப் புறத்தே தொங்க
விட்டு நீ அழுகாதே கொள்ளென்று அழு
கின்ற நம் முடைய கண் சிவக்கத் துடைப்பவர்

யாரிருக்கின்றார்களோ? அவனையன்றி யாரு
வருமில்லையே; (எ-று)

124 வணர் - கடை முறிந்து வளைதல். உருகுதல்.
கோதுதல். அற்சிரம் - முன்பனிப் பருவம்.

125: 83. அரும்பெறல் அமிழ்த மார்பத மாகப்
பெரும்பெய ருலகம் பெறீஇயரோ வன்னை
தம்மிற் றமதுண் டன்ன சினைதொறுந்
தீம்பழந் தூங்கும் பலவின்
ஓங்குமலை நாடனை வருமென் றோளே.

எ-து, தலைமகன் வரைவு நெய்துதறா
ர்த்திச் செவிலியைத் தொழுது வாழ்த்தியது.

— வெண்பூதன் —

உரை:- எம்மன்னை இன்பம் பயப்பதன்
கண்ணே தமக்குரிய இல்லிலிருந்து உலகோர்
தம் முயற்சியாலே வந்த பொருளைத் தாமேயுண்
பவித்தாலொத்த கிளைகள்தோறும் இனிய பழங்
கள் தூங்கும் பலாமரங்களையுடைய உயர்ந்த
மலை நாடன் வரைவொடு புகுந்தானென்பதை
உடன்பட்டு எதிர் கொண்டு வருவானாக வென்
றறிவித்து வரைவு நேர்ந்தனளாதலால்
அவள் இவ்வுலகில் வேண்டிய போகமெல்லாந்
துய்த்து அரிதாகப் பெறக்கூடிய அமிழ்
தமே நாளும் உணவாகப் பெற்று ஏனைய
பெருமை தங்குதற்குப் பேருலகத்தைப் பெற்று
விளங்குக; (எ-று)

முயற்சியிற் பெற்ற பொருளையே இம்மை

126. நுகர்ச்சியைத்தும் பெற்று அப்பொழுதின்க
ண் அடக்கிய அறத்தினெல் வீட்டின் பயனாமைய்
தினை வைத்த இன்பத்தைத் துய்மேல் எனக் கொள்க.
"தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு" என்றார் பிறரும். (குறள் 1107)

127. 84. பெயர்த்தனென் முயங்க யான் வியர்த்தனென் என்றனள்
இனியறிந்தேன் அது துனியாகுதலே
கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்
வேங்கையும் காந்தளும் நாறி
ஆம்பல் மலரினும் தான் தண்ணியளே.

எ-து, வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தலைமகன் (?) சொல்லியது. — மோசிகீரனார்.

உரை:- உழுது வென்ற வீரவளையுடைய
ஆஅய் அண்டிரனது மேகந்தவழும் பொதியில்
மலையின் கண்ணுள்ள வேங்கை மலரும் காந்தள்
மலரும் போல மணம் கமழ்ந்து ஆம்பல் மல
ரினும் காட்டில் தட்பமிக்கவளாகிய என் தோழி
மகள் நேற்று மாலைப் பொழுதில் யானே தோள்
அணைத்து மகிழ்ந்தும் அவளை மேலிட்டும்
பின்னர் நெருங்கியும் அணைத்துக் கொள்ள, அப்
பொழுது அவள் என் மேல் அன்பு நீங்கின
வளையாள் போலும் என்னை நோக்கி "மீட்டும்
அணைத்துக் கொள்ளுதலால் யானே வியர்
வையுற்றேன்; என்னைத் தொடாதே கொள்"
என்றனள். அப்பொழுது அதுவே இன்னா
வாறென்று ஆய்ந்திலனே இனும் அவள்

128. கூறியதோழியை வெறுத்துக் கூறிய தோழி இப்பொழுது
தெரிந்தேன்; அவள் போயபின் அறிந்து கூறு
வாளாவேன்;(எ-று)

தொடி - வளையல். துனி - வெறுப்பு.

129. குறு. யாரினு மினியன் பேரன் பினனே
யுள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனி லிழைஇயர்
தேம்பொதி கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணரூரன் பாணன் வாயே.

எ-து, வாயில் வேண்டிச் சென்றபா
ணற்குத் தோழி சொல்லி வாயின் மறுத்தது.

— வடம வண்ணக்கன் தாமோதரன்.

உரை:- எல்லாரினுங் காட்டில் இனியனா
கிய காதலன் பரத்தையர் சேரிக்கட் சென்று
மீண்டு ஊரகத்துள்ள உள்ளூர்க் குருவியில் சூல்
முதிர்ந்த பேடைக்கு ஈனுமில்லச் செய்ய
வேண்டி துள்ளு நடையையுடைத்தாகிய
சேவல், சாறு நிறைந்துள்ள இனிய அழத்
தண்டினையுடைய கரும்பின் மணமில்லா
வெள்ளிய பூவைக் கோதியெடுக்கின்ற புதுவளம்
பயக்கும் ஊரையுடைய நங் காதலனது
பாணனென்பவன் தான் இப்பொழுது இங்கு
பொய்ம்மை எமக்குற்று வந்துள்ளான்;(எ-று)

இழைஇயர் - செய்யியர் என்னும்

130. வாய்பாட்டு வினையெச்சம். கொழுதுதல்: கோதுதல்

சி.ஈரி. இடைவையுநெறிதல் இதல் செல்லுமலாதல்.
செயல். ஆன் மேதிப் பேடைக்கு சினிலாற்த்
தப்பதை காத்தல் போல கொடுத்து வருதல்
காதன் பார்த்தைக்கே சால் பார்த் செய்த பார்த்து
காக்கின்று ஐயன்பதவி.

இனி பேடை நீ மூத்தான் இல் கொண்டு
இடம் அமைத்தல் போல தீதினான் நீல
பால் வடிதற்கு இப் பானை பொருள் கூடு
வைத்து நிமலை வடிக்கு செய்கின்று
கொள்வதுமோம். இப்படியின் உள்ளது,
துறை கோளாவையார் 369.
ஆன் மேதி ஆன் நடைப் பேடைக்கின்
றுமிளை செயல் செய் யான், மேன் மேதிச்
செழுந்திரன் மன் புக்கிருந் வெய்தழை
நன்றின் டோன், யான் மேதிக் கோக்கு
சால்லாக் மயிழ்த் தீமையா ஊடுகிறோம்,
போன் மேதிக் பெருமைதியிற் மாயிற் தேத்து
வாயிற் த புதுப் புனலே. என்றாயத்
திருத்தவலுக்கு.

131. ஆடி. இறும்பை புடையாத சேயரி மழைக்கண்
பெரியாறு உடு கோவைக்கு புலப்பிக் கலங்கிப்
பிறரிர் கேட்கிற ஐயக்கிர நுணை கிழுத்
தாதைத்தாய்க் கூற கூறிற் பாலத்
தியானம் பலம் புலம்பு தெறி நீளலும்
சாரிசில் தொகுதிமனி நீல் காட்டுகின்றோ.

எ. தா, அங்கு நிலைமைக் கவலையேதிழுத்தலைக்

இழுத்துச் சொல்லியது. — வெண்கொற்றன் —

உரை:- உள்ளே அணைகட்டியிருந்த நீர்
உடைந்து வடிகின்ற செவ்வரி பரந்த குளி
ர்ச்சியை யுடையனவாகிய என் கண்கள் பொறுத்தற்கரிய
நோயுடனே புலம்புதலாலே கலக்கமடைந்து-
மழைக்கண்கள் மிக ஊதைக் காற்றாற் கொ
ணர்ந்து தூற்றுகின்ற கூதிர் காலத்து நடு
நடுயாமத்திலே யான் புலம்பும் போதெல்
லாம் உடல் சேர்ந்து அலைக்கப்படுகின்ற ஆ
னேற்றின் கழுத்திற் கட்டிய நாவினையசை-
யிடும் கொடிய மணியின் மெல்லிய வோசையை
என் போல் வருந்துகின்ற பிறர் யாரேனுஞ்
செவியேற்று உயிர் வாழ்ந்திடப் படுவரோ
டோ! யான் ஒன்றனைத் தேதலின் தி
ட்டுறுகிறோ மாநின்றேன்; (எ-று)

132. 87. மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉ மென்ப யாவதுங்
கொடியோ ரல்லரெங் குன்றுகெழு நாடர்
பசைஇப் பசந்தன்று நுதலே
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் றோளே.

எ-து, தலைமகள் தெய்வத்திற்குப்
பராயது. — — கபிலர் —

உரை:- மன்றமராத்தின் கண்ணே உறைகின்ற
அச்சத்தைச் செய்கின்ற முதிர்ந்த கடவுள்
பொய் கூறிச் சூளுறைத்துத் தவறுங் கொடி
யோரை வருத்துமென யாரும் கூறுவர்;

என் நின்று விளங்கிய நாடர் எவ்வளவே
னும் கொடியோரல்லர்; என்றதில் பசந்ததும்
வளை நெகிழ்ந்ததும் அவர் தம் செய்தியை
யானல்ல. பின்னை எக்காரணத்தாலோ வெனின்
உடம்பெனும் பசலை எய்துதலாலே
நெற்றியிலும் பசலை தோன்றிற்று. உடம்பு
தான் வற்றலையால் நெகிழ்ந்த மெல்லிய தோ
ளும் நெகிழ்ந்தது; அதனால் வளை நெகிழ்ந்தன.
ஏதலின்கண் எங்காதலனை வருந்தா
தொழிக; (எ-று)

பே. அச்சம் பாவத்தும் - எவ்வளவும்.

133-88. நெடு வெள்ளருவி யோங்குமலை நாடன்
குறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொலைச்சின் கொல்லுந் துன்னருஞ் சோலை
நடுநாள் வருதலும் வரூஉம்
வடு நாணலமே தோழி நாமே.

எ-து, இரவுக்குறி நேர்ந்த வாய்பாட்டால்
தோழி தலைமகட்குச் சொல்லியது.

- துறைக் கருத் தன்னன்.

உரை:- தோழி! நெடிதாகின்ற வெள்ளிய
அருவியையுடைய உயர்ந்த மலைநாட்டையுடையவன்,
குறிய கண்ணையுடைய பெரிய களிற்றை வலிய
புலி சென்று பாய்ந்து பழுதாகக் கொண்ட
வலியைத் தொலைக்கின்றவும் நெருங்குதற்கரிய
சோலை வழியில் இரவு நடு யாமத்தில் நம்
பால் வருதலையுஞ் செய்யும்; அங்ஙனமே

வருதலினுண்டாகிய அவர்க்கு நாம் வேட்கை மிகுதியினேனோ? உறுவேமன்றோ? அதனை அவன றிந்து வாரா வொழு புகுந்து இறைக்கிறேய வேண்டுவனென்; (-)

நயமென்கலிர் புலியைத் தாக்கி யென்னுமாம:
வழுத்தும் வழிம் முழுதும் சாரிவர்கள்;
"தாக்கிய செய்வது யென்றாம்" (தொல். சொல். 113)

134 சூத்திரத்து உரையாற் கொள்க, உறுவேமன்றோ மெதற் குறிப் பெச்சம். உள்ளுறை, இறைச்சி.

135. 89. பாவடி யுரல பகுவாய் வள்ளை
யேதின் மாக்க ணுவறலு நுவல்ப
வழுவ தெவன் கொலிப் பேதை யூர்க்கே
பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை யன்னவிம்
மெல்லியற் குறுமகள் பாடினள் குறினே.

என்பது, தலைமகள் சிறைப்புறத் தானாகத் தோழிக்குத் தன்றாய்க்கே சொல்லுவாளாய்ச் சொல்லியது.

தலைமகன் சிறைப் பாலதாயினன் கேட்பச் சொல்லி வாயில் மறுத்ததாமாம். - பரணர்.

உரை:- பெரிய பூணணிந்த வுடைய சேரலன் பொறையனுக்கு அச்சமிக்க கொல்லிமலையின் மேல்பால் கரிய கண்ணை யுடைய தெய்வத்தால் செய்து வைக்கப்பட்ட நல்ல இலக்கண மமைந்த பாவை போன்ற இத்தகைய தன்மை சாயலுடைய இளமகள் பரிய அடியமைந்த யுரலினை யுடைய அகன்ற

வாயின் கண்ணே நெல்லைப் போகட்டு உ
136 லக்கைப் பாட்டுப் பாடி நெல் இடிக்கின்றதற்
கேற்ப அயல் மாதர்கள் (ஏதின் மகளிர்) தலைவனுடைய
பெருமைத் தொழிற்பாட்டுக்கு இசைந்து இவனூரன் ஆதலின்
அவனும் புகழ்ச்சியுடைய வள்ளைப் பாடலைப்
பாடியும் செய்ய மாட்டார்கள்; அதனினும் இவ்
வளமிக்க ஊரையுடைய அவனுக்குத் தகவுமில்லை
நொந்து அழிவது என்னோ? (எ-று)

137. 90. எற்றோ வாழி தோழி முற்றுபு
கறிவள ரடுக்கத் திரவின் முழங்கிய
மங்குன் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதொட விழுக்கிய பூநாறு பலவுக்கனி
வரையிழி யருவி யுண்டுறைத் தரூஉம்
குன்ற நாடன் கேண்மை
மென்றோள் சாய்த்துஞ் சால்பீன் றன்றே.

எ-து, வரைவு நீட்டித்த வழி ஆற்றா ளாகிய தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறமாகத் தோழி கூறியது. - மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார்.

உரை:- தோழி! வாழ்வாயாக; முற்றி மிளகுக் கொடி வளர்கின்ற மலைப்பக்கத்தில் இரவில் முழக்கஞ் செய்த மேகம் மிக்க மழையைப் பெய்யத் தொடங்கிய தன்மேல் தாங்க மாட்டாது தாவி யோடிய கிளைத்த மயிரையுடைய கலைமான் தன் கொம்பினால் தாக்கியதனால் விழுந்த பூமணங் கமழும் பலாப்பழத்தை மலையிலிருந்து விழுகின்ற அருவியானது

சேர்த்து வாழ்ந்து மக்கட்கு உணர்த்துதையிட்டு
அவர்க்குப் பயன்படக் கொடாநின்றும் மல
138. நாடனது கொள்கையானதைத் தெரிவிக்கி
ன்றது தடியிருப்பம் அமைதியைத் தருகின்றமை
யுடையதாயிருக்கின்றது; அதனால் யானுன்
றவும் நீ ஆற்றியாதிருக்கின்றது தக்கதன்றன்றி (எ-று)
என்றது - தக்கதன்றாதலின், இறப்ப மொழிக.
மொழிதல் - சொல்லுதல். கறி மிளகு கொடி அமைதி.
உள்ளுறை - கீழ்நின்ட மழைக்கில் வீழ்ந்த பழத்
தை அருவி ஈர்த்தும் பயன்படுத்து நாடன்
என்றது. அவனால் நாம் அன்றைத் தேர் பிரிந்திரு
மாயினும் அவன் நமது மனநாள் கொ
ண்டு இல்லறத்தைச் செய்வித்துப் பயன்படுத்தி
வாழ் வேண்டுதலால். இதனைத் தீவவி கூற்றாக்
கொள்ளுவர் நச்சினார்க்கினியர் (தொல். பொ. 203)
139. 91. அகிப்பவர்ப் பிறப்பின் வாரிப்புகு மீனைக்
கொண்ட நீர் நிலத்து இக் கொண்டை குரீஇ உக்
தண்ணொறு புறவு வெண்புகை யாவிற்
பலவா இக கிளை னைத்தினிற் படுரே
யோவா திய மரவினைக்
குடிம் பகட்டு யானை நெடுமாத் தேர்ச்
கொண்முதை யிழுகுர் போலக்
கிவ்வாருகை நீ திருஅ நாரோ.
என்பது, மாத்தையர் மாட்டுப் பிரிந்து திரியவேண்
டாயில் வேண்டும் புக்க வழித் தண் வழித் தேன்
அவன் வனைத்தடைத் தண் ணெஞ்சு அமைந்தும்

துணித் தலைமகள் அதனை நெருங்கிச் சொல்லியது.
(பொ) பரத்தை பால் பிரிந்து வந்தவழி வேறுபட
இருந்த தலைவிக்குத் தோழி கூறியதாம். - ஔவையார் -

உரை:- ஏ நெஞ்சமே! நீ இறுகாற்றிசையு
டைய பிரப்பங் கொடியிற் காய்த்து முற்றிய புறத்
துக் கோடுகளையுடைய பிரப்பம்பழம் அதன்கீழ்
ஆழமாகிய நீரையுடைய பொய்கையிற் விழுந்ததும்
அங்ஙனம் விழுந்த பழத்தை நீர்நாய் கொள்ளை
140. மீன்கள் பற்றியுண்ணுகிற்கும். தண்ணிய துறை
யையுடைய ஊரனது மெல்லியலின் நின்
உள்ளத்திற் கதுதல் பலவாகப் பெருகக்கடவன
வாக; ஐயமறக் கொடுக்கின்ற மாரி போன்ற
வண்மைமிக்க கைகளையுடைய கடிய களிற்றி
யானையையும் நெடிய தேரையுமுடைய அஞ்சி
யென்பான் பகைமேற் சென்றவழி அப்பகை
முனையிலுள்ள அச்சத்தையுடையார் இரவின்கண்
துயிலாதவாறு போல நீ துயிலுறுங்காலமும் சில
வேளையாய் ஒழியக்கடவதாக; (எ-று)

அரில் - இறுக்கம்; பவர் - கொடி. இனக்கு - ஆழம்
இலஞ்சி - பொய்கை. படர் - எண்ணம்; கலிப்பு
மகிழ். கொன் - அச்சப் பொருளது. பகடு - ஆண்யானை.

141. 92. ஞாயிறு பட்ட வதல்வாய் வானத்
தளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
யிறையுற வோங்கிய நெறியயன் மராத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
இரை கொண் டமையின் விரையுமாற் செலவே.

எ-து, காமமிக்க கழிபடர் கிளவியாகுமென முதுகண் சொல்லியது. — தாமோதரனார்.

உரை:- தாழ்ந்த சிறகினையுடைய பறவைகளெல்லாம் தாம் தங்கியிருக்கும்படியாக உயர்ந்த நெறியின் பக்கத்திலுள்ள மராஅ மரத்திலிருப்பனவாகிய தத்தம் பிள்ளைகளின் வாயினுள்ளே பெய்யும்பொருட்டு எடுத்த இரைகளைக் கொண்டமையால் ஆதித்தமண்டலம் மேலைத்திசையில் மறைந்த மாலைப் பொழுதிலே அகன்ற இடத்தையுடைய ஆகாயத்தின்கண் மிகவிரைந்து செல்லாநிற்கும்; அதனால் அவை தம் பிள்ளைகளைப் பாதுகாக்கின்றன; அப்பறவைகள் போலப் பாதுகாக்குமாறு நம் காதலர் வந்தாரில்லையே; (எ-று)

இறையுறல் - தங்குதல். பிள்ளை - இளம்பறவை.
“பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை”
(தொல். மர. 4 60)

142. 93. நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினும் உரையலவர் நமக்
கன்னையு மத்தனு மல்லரோ
புலவிய தெவனோ அன்பிலங் கடையே.

என்பது, வாயில் வேண்டித் தோழிக்கு வாயில் மறுத்தது

எ-து, தோழீ! நம்முடைய நலமெல்லாந் தொலைந்து அழகும் மிகக்கெட்டு இனிய உயிர் நீங்குங் காலத்தும் அவர் நமக்கு இன்றி

மனைமையாந் தலைவர் தன்மையும் யோன்று மன
நல்லரோ? யாமாது அன்பிலாத வழியின்
புலவி அவளை என் செய்யும்? ஆதலின்
அவளை அன்பில் கொடுமையை யென்று எனதா
யாக்கொள்,-(எ-று)

சா அய் - உள்ளத்தாறு ஆறாக்கம்.

143. 94. பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்
தரும்பே முன்னு மிகச் சிவந்தனவே
யானே மருள்வென் றோழி பானாள்
இன்னுந் தமியர் மேயினர் பெயர்த்து
நமனென் றெவன்கொல் பிரிந்திசினோரே.
யருவி மாமலைத் தத்தக்
கருவி மாமழைச் சிலைதரும் இரவே.

கா.து, பருவங் கண்டு ஆற்றாளாகிய தலைவி தோழிக்கு ஆற்றுவல் என்பது படத் தலைமகள் சொல்லியது. — கந்தரத்தனார்.
(இப்பாடலுக்கு உரை எழுதப்படவில்லை)

144. 95. மால்வரை இழிதரும் தூவெள் ளருவி
கன்முகைத் ததும்பும் பன்மலர்ச் சாரல்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்ன என்னுரன் அவித்தன்றே.

கா.து. தலைமகன் பாங்கற்கு உரைத்தது.
— கபிலர்.

உரை:- தோழனே! பெரிய மலையினின்று இழியும் தூய வெள் அருவி துறுகல் பிளவில் முழக்கொலியா நிற்கும் பலவாய மலர் மிக்க

மெய்க்காலி யூரல்ல இருந்த கறுவாள இறை
ளது பெரிய தோழியுடைய கிளைகளின் கீரி
யேருதன்மையை யுயர்த்தி தண்ணீர்தேகிய காவல்,
நீயே ருதன்மையை யுயர்த்தி யான் கவலை
யுடையமல் ஏற்றோர் அறிந்து. இல்லையாகின்று
அதுவலிப்படி யாயினேன் தான்; (எ-று)

145. 96. அரலி வேங்கைப் பெருமலை நாடன்
இயா னெவன் செய்கோ வென்றி யானது
நகை யென வுணரே னாயின்
என்னா குவைகொ னன்னுத னீயே.

எ-து, தலைமகன் இயற்பழித்துத் தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

- அள்ளூர் நன்முல்லையார்.

உரை:- நல்ல நெற்றியை யுடையாய்!
அரலியையும் வேங்கை மரங்களையுமுடைய
பெரிய மலை நாடனிடத்து தலைக் கெல பல கூறுகிறாக
கின்றீட்டியிட்டு இகழ்ந்து கூறிவிட்டுப் பின்னர்
"யானென்ன செய்வேன்" என்று கூறி நின்
றனை. நீ சொல்லிய வார்த்தைகள் அனைத்தையும்
அறியேனாய் எனது யான் கொள்ளாது நீயக்
கொண்டே னெயின் நீ இது பெறுவது என்ன
தன்மையை யுடையாய்; (எ-று)

146. 97. யானே யீண்டை யேனே யென்னலனே
ஆனா நோயொடு கானலஃதே
துறைவன் றம்மூ ரானே
மறையல ராகி மன்றத் தஃதே.

எ-து, வரைவு நீட்டித்துழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. — வெண்பூதி.

உரை:- யானே இவ்விடத்திலே யுறைகின்றேன்; என் நலனே அமையாத காமநோயுடனே (மெய்) புணர்ந்த கடற்கரைச் சோலையிற் தங்கியிரா நின்றது; நம் காதலனாகிய நெய்தற் றுறைவனோ (ஏ)மைக் கூடாது தம்மூரிற் றங்கி யிராநின்றான்: யாமிருவருங் களவிற் கூடிய துறெழிய பழிச்சொல் பலரறியும் அலர் தூற்றப் பட்டு ஊர்ப் பொதுவிடங்களிலெல்லாம் யாவர் வாயினும் புகலப் பரந்து பட்டதாயிரா நின்றது (௯௭)

147\. 98. இன்னளாயினள் நன்னுத லென்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர் சிலக் கொண்டே.

எ-து. பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக்குரைத்தது. — கோக்குளமுற்றன்.

உரை:- தோழி! வாழ்வாயாக; நமது தோட்டத்தில் நீர் வடிந்தோடுகின்ற பசிய புதர் மேற் படர்ந்து தழைத்து மாரிக்காலத்து மலர்கின்ற பீர்க்கினது அழகிய மலர்களிற் சிலவற்றைப் பறித்துக் கொண்டு சென்று நமது காதலரிடத்துக் கிட்டினதை நெருங்கி அவரை நோக்கி நல்ல நுதலையுடைய நின் காதலி இம்மலர் போன்ற நிறத்தையுடைய

வளாயினள் காண்; என்று சொல்லத்தக்க
வேதனைப் பெற்றேன். அது மிக நன்று; அவ்
வண்ண மொழிவதைப் பெறுமல் வீணே கழிகின்
றது; (எ-று)

148. 99. உள்ளினென் அல்லெனோ யானே உள்ளி
நினைத்தனென் அல்லெனோ பெரிதே நினைத்து
மருண்டனென் அல்லெனோ உலகத்துப் பண்பே
நீடிய மராஅத்த கோடுதோய் மலிர்நிறை
யிறைத்துணச் சென்றற் றாஅங்
கனைப் பெருங் காமம் ஈண்டு கடைக் கொளவே.

எ-து, பொருள் முற்றிப் புகுந்த தலைமகன்
நினைத்து மறந்தீரோ என்ற தோழிக்
குச் சொல்லியது. — ஔவையார்.

149. 100. அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பருவிலைக் குளவியொடு பசுமரல் கட்கும்
காந்தள் வேலிச் சிறுகுடிப் பரப்பின்
கடுங்கண் வேழத்துக் கோடுநொடுத் துண்ணும்
வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்தற் கரிய பணைப் பெருந் தோளே.

எ-து, பாங்கற் குரைத்தது; அல்லகுறிப்
பட்டுமீள்கின்றான் நெஞ்சிற்குச்
சொல்லியதூஉமாம். — கபிலர்.

150. (கு) [illegible] பாட்டுக்கெல்லாம் உரையெழுதப்படவில்லை)
101. விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிது பெறு சிறப்பிற் புத்தேள் நாடும்.

மிரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போ லுண்கட் பொன்போன் மேனி
மாண்வரி யல்குற் குறுமகள்
தோண்மாறு படூஉம் வைகலோ டெமக்கே.

இ-து, தலைமகன் பாங்காயினோர் கேட்பச் சொல்லியது.

உ. வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியதூஉமாம். - பரூஉமோவாய்ப்பதுமன்.

உரை:- குவளைமலர் போன்று மையுண்ட கண்ணையும் பொன் போன்ற மேனியையும் மாட்சிமைப்பட்ட வரிகளையுடைய அல்குலையுமுடைய இளமகளின் தோள்களின்றும் பிரியாது தழுவியிருக்கப் பெறுகின்ற வைகலோடு, விரிந்த அலைகளையுடைய பெரிய கடல் சூழ்ந்த உலகமும் அரிதிற் பெறுகின்ற சிறப்பினையுடைய தேவலோகமுமாகிய இரண்டினையும் ஒத்திட்டுப் பார்த்தாலும் சீர்சால ஒப்புமைக்குப் போதா; (எ-று)

தவத்தாலன்றிப் பெறக் கிடந்த தன்மையின் அரிது பெறு சிறப்பின் என்று விசேடித்தார்;

151. 102. உள்ளி னுள்ளம் வேமே யுள்ளா
திருப்பி னெம் மளவைத் தன்றே வருத்தி
வான்றோய் வற்றே காமஞ்
சான்றோ ரல்லர் யாம் மரீஇ யோரே.

இ-து, ஆற்றாமைக் கவன்ற தோழிக்
குக் கிழத்தி யான் யாங்ஙனமாற்றுவே

மனைக்குறிப்பது. — நக்கண்ணையார்.

உரை:- தோழீ! நாம் வருந்த நெடுநாள் நம்மைக் கைவிட்ட காதலர் செய்தியினைத் தினைத்து உள்ளமும் என் தொழியாகிறது இல்லை; அவ்வாறாய நினையாமல் விடுப் போமென்றால் அவர் நீர் பலி செய்தத நாட்டமடைய இன்ப மகிழ்ச்சியுமிக்க எம்மாலிடமிருக்கவல்ல, அவர் காரணமாக எழுந்த காமமானது எம்மை வருத்தியெழுந்து ஆகாயத்தளவு சென்று நாட்ட அத்தன்மையதாயிருக்கின்றது நம்மைக் கலந்து மகிழ்ந்த காதலர் இப்படிப்பட்ட துற வாயில் நம்மைக் கைவிட்டொழிந்தமையால் அவர் நல்ல சால்புடையரல்லர் காண்; (எ-று)

நயப்பாடு:- காதல் கைம்மிகல்.

(கு)

152. 103. கடும்புனல் தொடுத்த நடுங்கஞர் அள்ளற்
கலித்த முன்னை ஆரிற் செல்லா
வினைதேர் நாரைக் கெல்வ மாகத்
தாஉந் துவலித் துயர்கூர் வாடையும்
வாரார் போல்வர்நங் காதலர்
வாழேன் போல்வல் தோழி யானே;

எ-து, பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது. —வாயிலான் தேவன்-

உரை:- விரைந்த செலவினையுடைய யாற்றுநீர் சென்று வயலிற் பாய்ந்த தொடா இய தளர்ச்சியடையுமாறு வருத்தி யுழுது அமைத்த சேற்றிலே இரைதேடுகின்ற

முருக்கினிதழ் போன்று சிறுத்து விளையும் இவர்ந்த வாளையு முடைய நாரைக்குத் துன்ப மூண்டாமெப்படியாகத் தாவுகின்ற மனைத்து விகுருடனே துன்பமிகுதி செய்யும் வாடை வீசாநின்ற கூதிர்ப்பருவத்திலும் நமது காதலர் நம் பால் வாரார் போலக் காணப்படுகின்றார்; அதனால் யானும் உயிர்வாழ்கிலேன் போலக் கருதாநின்றேன் (எ-று)

153. 104. அம்ம வாழி தோழி காதலர்
நூலறு முத்திற் றண்சிதர்ப் புறைப்பத்
தாளித் தண்பவர் நாளா மேயும்
பனிபடு நாளே பிரிந்தனர்
பிரியு நாளும் பலவா குவவே.

எ-து, (1) பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைவி தோழிக்குக் கூறியது.

(2) சிறிய வுள்ளிப் பெரிய மாக்க வேண்டாகோ வென்று தோழிக்குத் தலைவி கூறியதூஉமாம். - காவன் முல்லைப் பூதனார்.

உரை:- தோழீ! வாழ்வாயாக; யான் கூறுகின்ற இதனைக் கேட்பாயாக; நமது காதலர் பசியாகக் கோத்த நூலற்றுவிழுந்த அம் மாலையிலுள்ள முத்துக்களைப் போலக் குளிர்ச்சியுற்ற பனித்துளிகள் மேலே மிகவிழ வியந்தாலியவிழ்த்து விட்ட கன்றுகளின்ற பசுக்களின் றண்ணிய கொடியவை மேயாநிற்கும் முன்பனிப் பருவத்தே பிரிந்து போயினர்;

அப்பழப் பிரிந்து போன நாட்களும் பலவாகச்
செல்லாநின்றன; இன்றும் அவர் வந்திலர்; (எ-று)
அவ்வே - ஏ யென்றும் பொருளில்லதோரிடைச்சொல்.
இதர் - துவலை. மவர் - தொடை.

154. 105. புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்
அறியா துண்ட மஞ்ஞை யாடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்குஞ்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்பா கும்மே.

என்பது, வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள்
தோழிக்குச் சொல்லியது. — நக்கீரர்.

உரை:- புனத்துக் கிடையாளது கொல்லை
யிடத்துள்ள பொன் போல இருக்கிற சிறிய தினையின்
புதுவதாக விளைவிக்க வேண்டுங் கடவுள் முன்னி
லையில் கொண்டுவைத்த கதிர்களிலே தெய்
வத்துக் கிட்ட பலியென்றறியாமலுண்ட மயில்,
அழகைக் கெடுத்துப் பெண்டு தெய்வமேறின வெறியாள்
ஆடுகின்ற அழகைப் போல வெப்பமுற்று
நடுங்காநிற்கும் அச்சத்தைச் செய்யும் மலை
நாடனது நட்பானது, நீர் நிறைப்பு வழியப்பெற்ற
கண்ணுடனே மாறாது நினைப்புடைத்தாயிரா
நின்றது; (எ-று)

துடவை - தோட்டம். கடி - புதுமைப் பொருட்டு.
குரல் - தினைக்கதிர். சூர் - அச்சம்.

155. 106. புல்வீழ் இற்றிக் கல்லிவர் வெள்வேர்

வரையிழி யருவியிற் றோன்றும் நாடன்
றீதி னெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று வாழி தோழி நாமே
நெய் பெய் தீயி னெதிர் கொண்டு
தான்மணந் தனைய மென விடுகந் தூதே.

எ-து, தலைமகன் றூது கண்டு கிழத்தி தோழிக்குக் கூறியது — கபிலர்.

உரை:- தோழீ! வாழ்வாயாக; மலை மேல் மிசைத் துயர்ந்த புல்லிய விழுதினையுடைய இத்தி மரத்தின் வெளிய வேர் அக்கல்லினின்று இழியும் அருவி போலத் தோன்றும் நிலத்தை யுடைய நாடனது தீதில்லா நெஞ்சத்திலே யுண்டாகிய வார்த்தை நம்பால் வாரா நின்றது கண்டாய்; ஆதலின் நாமும் நெய்யால் ஆகுதி பண்ணின தீயினை யெதிர் கொண்டு தாமணம் புணர்ந்த காலத்தைப் போல விரும்பினோமென அத் தூதுக்கு எதிர் மொழி கொடுத்து விடுவோமாக. (எ-று)

இற்றி- இத்தி யெனவும், இச்சி யெனவும் படும்; கைகோள்- கற்பு. தீயினெதிர் தாமணந்தனைய மென்றலின். - மருதம்.

156. இது பொருள் முடித்து வந்த தலைமகனுடைய கிழத்தி காமமிக்க கழிபடர் கிளவியாற் கூறியது.

என்றது, பொருள் முடித்து வந்தானுடன் அணைமிசை துயின்ற தலைவி விடியலிற் றோழி கூறுதலும் விழித்து அவனைப் பிரியப்படாதுழ காமமிக்குப் புலவாய் பிரிந்தமெய்ப

யாமத்து இரு ளென்று மிக்க நீருடன் தெளிந்தோய்!
எம்மைத் தாங் காவா தெழுப்பியதனால் கோட்
டுப் பூனைக் கிரையாகி வருந்தத் தக்கனை யென
த் கூறு கிறது. மதுரைக் கண்ணனார் பாடியது.

107. குவியிணர்த் தோன்றி யொண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்
நள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்
பிள்ளை வெருகிற் கல்கிரை யாகிக்
கடுநவைப் படீஇயரோ நீயே நெடுநீர்
யாணர் ஊரன் றன்னொடு
வதிந்த வேம வின்றுயி லெடுப்பி யோயே.

உரை:- திரண்ட பூங்கொத்தினையுடைய செங்காந்தளின் ஒளியையுடைய பூவைப் போன்ற சேர்ந்த சிவந்த கொண்டையையுடைய கூட்டமாகக் கொண்டுள்ள கோழிச் சேவலே! நெடிய நீர் வளமிக்க புது வருவாயையுடைய ஊரனோடே கூடியிருந்த மயக்கு இனிய துயிலைத் தகர்த்து எழும்படி செய்தோய்; நீ நள்ளிருள் மிக்க நடு யாமத்தில் வீட்டு எலியைப் பிடித்துத் தின்பதற்கு இரையாக அவற்றைப் பிடிப்பதற்கு நோக்கியிருக்கும் வெருகின் பிள்ளைக்குப் பொருந்திய இரையாகி அதனாற் பிடிக்கப்பட்டுக் கொடிய துன்பப்பட்டு வருந்துவாயாக; (எ-று)

கோழியின் எல்லாச் சேவலும் கூடுமாதலால் கணங்கொள் சேவ லென்றான்; வெருகு வெருகு காவிற் பிடித்துடன் றின்று திரிவதால்

நினைக்கு மிக்க வருத்தந் தோன்றாது பின்னை வெருவுதாயின் இன்னாமைப்பற்றிப் பலபழமைகளும் கூறித்துப் புண்படுத்துமே யன்றிக் கொல்லாது; எம்மைத் துயிலெடுத்த பாவத்தால் நீ புண்பட்டு ப்பல நாளும் வருந்திப் புழுவத் தடவென்று கூறினாளாயிற்று.

மெய்ப்பாடு. வெகுளி. பயன் -

157. முல்லை.

இது பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குக் கூறியது.

எ-து,- தலைவன் குறித்த கார்ப்பருவம் வரக் கண்டும் அவன் வாராமையால் வருந்திய தலைமகள் தோழியை நோக்கி குறித்த பருவம் வந்து முல்லையும் மலர்ந்துவிட்டது. காதலர் வந்திலராதலால் யான் பிழைக்கமாட்டேன் போலக் காணப்படுகிறது என்று கூறியது.

- கயிலான் இளவன் பாடியது -

108 மழை விளையாடுங் குன்றுசேர் சிறுகுடிக்
கறவை கன்றுவயிற் படரப் புறவிற்
பாசிலை முல்லை யாசில் வான்பூச்
செவ்வானஞ் செவ்வி கொண்டன்
றுய்யேன் போல்வல் தோழி யானே.

உரை:- ~~[illegible]~~ தோழீ! மேகம் தவழுகின்ற குன்றின்கண் சேர்ந்துள்ள சிறுகுடி யிடத்து மேயச் சென்றிருந்த கறவைப்பசு க்கள் மீண்டுந் தத்தம் கன்றுகளிடத்துப் போங்காலிற்

சென்று சேரக் காணத்திருநாளை பசிய கிளி
யை யுடைய முல்லையின் இன்றுமில்லாதவென்றி
யவர், செவ்வானமிட்ட மாலைப் பொழுதில்
மிக்க அழகமைந்ததாயினா நின்றது அவர் இதி
த்தமிழ்ச்சேயனோ இங்வினைப்பத்தை அவரிட
னிருந்து தாய்க்கட் பெற்றிலேனாலால் இவ்வி
யான் உய்கலேன் போலக் காணப்படாநின்றேன்; (எ-று)
இறவை இன்றாயின் செல்லுதல் போல அ
வர் வந்து சேர்ந்தாலின்றியே யென்றிரங்கிய வாறு.
மெய்ப்பாடு: அழுகை. பயன்: அயர்வுயிர்த்தல்.

158. நெய்தல்.

கூ. சிறைப்புறம்.

அது, - தலைவன் வேலிப்புறத்தில் மறைவாக வந்
திருப்பதை யறிந்து கூறுவது. என்னை?
தம் வேறு கண்ட புறத்தோர் அலர் கூறுமின்
றனம் தேர்ந்து தோழி தலைமகட்குக் கூறுவா
ளாய் (தலைவன் தொடர்பு நீங்கிய பின்றும் தலைவி
யின் கற்புக் காத்தல் தோன்றியறென்க)
கூறுகின்றது. — — நம்பிசெட்டியார் பாடியது —
109. முட்காலிறவின் முடங்கு புறச் செங்கிளைப்
புணரி பொருந்த தரைஉரு துறைவன்
புணரி யளித்த நான்று
மிளையாமன்வே நின்றுதல் [illegible]

உரை: முட்போன்ற காலையுடைய வளைந்த
முதுகினையுமுடைய இறாமீனின் [illegible] கூட்
டம் திரைக் கடலில் பொருந்தி விழுகின்ற அலைகள்

கொணர்ந்து கரையோரத்தி லொதுக்கி அன்றி வேய் மக்களுக்குப் பயன்படக் கொடா கிருக்குந் துறையை யுடைய தலைவன் முன்பு புணர்ந்து அப்புணர்ச்சிப் பிரிவாற் பெற்ற பெரு கழிந்த காலிலும் இந்த நல்ல நெற்றியை யுடையாளது தலைவன் றுய்த்தலாகிய அழகு நீங்கா திருந்து மிக்க இன்னலை யைத் தரா நின்றது; (எ-று)

உள்ளுறை:- நீநா,- இறவின் பெருங் கிளையை கரையில் வாழ்வார் துய்க்குமாறு கரையேற்றிக் கொணர்ந்து கொடுக்குமென்றது தலை(வன்)வற் றுகிலியல் எம்பாதவர் துய்க்குமாறு எம் மேல் கொணர்ந்து கொடுத்து இன்மையைப்பா ஞை என்றவாம்.

மெய்ப்பாடு- பெருமிதம்- பயன்- வரைவுகடாதல்.

159. பாலை.

அது (1) பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக் கிரைத்தது என்றது கூதிர்ப் பருவத்து வருகு றோமென்று சொல்லிச் சென்ற காதலர் இக் கூதிர் காலத்து வாடைக் காற்றினை வெத்தன் மையராயினரோ வென்று கருதிலர்; இனி அவர் வாராவிடினும் வருந்தாம் அவ்வேளாண்டிலனை வைத்து இழுதினை நோக்கித் தலைமகள் கூறுகின்றது.

(2) தலைமகள் கொள்கை கூறத் தலைமகள் வற்புறுத்தியதாடமாம். என்றது வெளிப்படை.

— கிள்ளிமங்கலங் கிழார் பாடியது.

110. வாரா ராயினும் வரினு மவர் நமக்
கியாரா கியரோ தோழி நீர
நீலப் பைம்போ துளரிப் புதல
பீலி யொண்பொறிக் கருவிளை யாட்டி
நுண்முள் ளீங்கைச் செவ்வரும் பூழ்த்த
வண்ணத் துய்ம்மல ருதிரத் தண்ணென்
றின்னா தெறிதரும் வாடையொ
டென்னா யினள்கொ லென்னா தோரே.

உரை:- தோழி! வாடைக்காலமாக; 'நீர்ப்பள்ளங்களிலுண்டாகிய பசிய ஆம்பல் இலை தெளிய வற்றை நெகிழ்த்துச் சாய்த்துப் புதர்களில் மேவித்து நிறைந்த நுண்ணிய புள்ளிகளமைந்த கருங்காக்கணமலர்களை யலைத்து நுண்ணிய முட்களையுடைய இண்டங் கொடிகளின் சிவந்த அரும்பு மலர்ந்த நல்ல நிறத்தையுடைய பஞ்சு போன்ற மெல்லிய உதிரும்படியாக இனிக் குளிர்ந்து தாக்குந் தோறு இன்னா வாடைக் காற்றினாலே என்ன துன்பத்தையுடையளாயினளோ' என்று கருதவுஞ் செய்யாராகிய நமது காதலர் இப்பருவத்து யாம் இறந்துபட்டபின் இனி வாரார் தோழி வாராராயினும் அன்றி வந்து சேர்ந்தாலும் நமக்கு இனியோர் தன்மையுடையார்; (எ-று)

160 இருத்தி.

இது வரைவிடைவைத்த வழித் தலைமகள்

வேறுபாடு கண்டு வெறியெடுக்கக் கருதிய தாயது நிலைமை தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் இறைப்புறமாகத் தோழி கூறியது.

வரைவு நீட்டித்தல். கலியாணஞ் செய்து கொள்ளாக் கால தாமதப் படுத்தல். அங்ஙனம் கூறுகின்றவள் வெறிக்களத்தில் வேலனும் அன்னையும் மெலிவுற்ற நோய் முருகக்கடவுளால் வந்த தென்று கொள்ளுவாராயின் அவனென்னை தேடும்படியாக அவ்விடத்து நம் காதலர் விரைவில் வருக வெனக் கூறுகின்றது. (சேயை வெளிப்படை).- தீன்மதிநாகனார் பாடியது.-

III. மென்றோளை நெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவேள் என்னும் அன்னை
யதுவென வுணரி னாயிடைக்
கூழை யிரும்பிடிக் கைகரந் தன்ன
கேழிருந் துறுகற் கெழுமலை நாடன்
வல்லே வருக தோழிநம்
மில்லோர் பெருநகை காணிய சிறிதே.

உரை:- தோழீ! நம்முடைய மெல்லிய தோள்களை வாட்டிய துன்பம் வெற்றியை யுடைய நெடிய முருகவேளா லுண்டாகிய தென்று படிமத்தான் கூறுகின்றான்; நமது அன்னையும் அவ்வேளாலாகிய துன்பமே யென்று கருதுவாளாயின்,- இருண்ட கரிய பிடி யானையின் துதிக்கையை மறைத்து நின்றாற் போன்ற விளங்கிய பெரிய துறுகல்லையுடைய

செழுமையுடைய மலை நாடன், நமது வீட்டார் கண்டு அஞ்சும் நகை யாருக்குங் காணும் பொருட்டுச் சிறிது பொழுது அவ் வெறிக் களத்தின் கண் வரவிலே வருவோனாக; (எ-று)

வெறிக் களத்தில் தலைவியை நிறுத்தி முருகவேளுக்குப் பரவுக்கடன் கொடுத்து மறிப்பலி வைத்து வேலன் வெறியாடும் ஆண்டு வெளிப்படுமெருகு வேலன் நாமுற்ற நோய் நீரானமை கண்டு மாறுபடுமெனக் கிலிகின்ற அப்பொழுது காதலன் அங்கு வந்ததனால் நோய் தீர்ந்தமை நோக்கி வேலனை வேறாயும் அன்னையையும் இல்லோர் நகை செய்வாரன்றோ அது காரணமாக ஆயினை நாடன் வருகவென்றாள்.

161. பாட்டு.

இது வரைவு நீட்டித்த வழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

என்றது கலியாணஞ் செய்து கொள்ளுதலைத் தலைவன் நீட்டித்துக் காலந் தாழ்ப்ப அது காறும் பொறுத்திராத தலைவி தோழியை நோக்கி நாணங் கெட்டுக் கற்புக் குலைந்து நலமழியும் பொழுது உள்ளதாகிய நாணால் யாது பயனெனக் கூறுகிறது. —ஆலத்தூர் கிழார் பாடியது—

112. கௌவை யஞ்சின் காம மெய்க்கு(ம்)
மெள்ளற விடினே யுள்ளது நாணே
பெருங்களிறு வாங்க முறிந்து நிலம்படா
நாருடை யொசிய லற்றே.

கண்டிசின் தோழியவருண்ட வென்னலனே.

உரை:- தோழி! நம்முடைய காதலராகிய அவரால் நுகரப்பட்ட எனது நலனானது, பெரிய களிறு பிடித்து இழுத்தலாலே ஒடிந்து நிலத்தைத் தீண்டாமல் தொங்குகின்ற நாரையுடைய மரக்கிளையின் முறியை ஒத்ததாயிரா நின்றது காண்; நான் அவர்க்குச் சொல்லுவேனோ என்று நினைப்பின்; ஊரார் எழுப்பும் பழிச் சொல்லுக்கு அஞ்சினால் காமம் குறையும்; காமங் குன்றுபடக் கைவிடுவோமாகில் நாண் ஒன்றே உள்ளதாகி நிற்கும்; எல்லாமறிந்த பின் கிடந்த நாணைப் பற்று பயன்; (எ-று) நெகிழ்வல் - முறிந்து. அலைப்பாடு அழுங்கை; பயன் - அவர் வயிற்றுத்தல.

162. கிழ பகற்குறி கோர்ந்த தலைமகற்குக் குறிப்பிற் றோழியிடம் பெயர்த்துச் சொல்லியது (எ-று) - (வெளிப்படை). — மாதீரத்தன் பாடியது -

113. ஊர்க்கு மணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்து மன்றே சிறுகான் யாறே
இரைதேர் வெண்குருகு அல்லது யாவதுந்
துன்னல் போகின்றாற் பொழிலே யாமெங்
கூழைக் கெருமணங் கொணர்கஞ் சேறி
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே.

உரை:- எம் ஊர்க்கு அருகிலுள்ளது பொய்கை, அக்குளத்துக்குத் தூரத்திலுள்ளது சிறிய காட்டாறு. - அதன் கரையில், - இரையைத்

தேடுகின்ற வெளிய நாரையேயல்லது வேறொரு
வரும் நெருங்குதற்கு இயலாததொரு சோலி
யுளது; அச்சோலையிலே எங்கள் கூந்தலுக்
கினிய அழகிய மணமுடைய பூக்களைக் கொ
ணர்ந்திடுதற்கு செல்லாநிற்பேம்; எங்கள் பெரிய
பேதைமையுடையராகிய தோழி அவ்விட
த்துக்கும் எங்களுடன் வாராநிற்கும் ஆதலால்
நின் விழைவானையும் பெறுதற்கில்லாது
நீ சென்றிருந்த வேண்டும்; (எ-று)

163. எனவே பெய்கை யருகிலுள்ள கான
யாற்றங்கரைச் சோலையில் நீ செய்ய
முறை போகும் எங்களுடன் நின் காதலி
அங்கு வருவாளாதலின்யும் அவ்விடத்து வருக
வெனக் குறிப்பினாற் கூறியதாயிற்று.
கூழை - கூந்தல்.

163. ·நெய்தல்· பாங்கிற் கூட்டம்.

இது, இடத்துய்த்துநீங்கும் தோழி தலைமகற்குக் கூறியது.)
எ-து, இதுவிடத்துத் தலைவியைக் கொண்டு
போய் விட்டு நீங்குவான் அயலிற் போகவேண்
டித் தலைவனை நோக்கி நெய்தற் பரப்பிலிட்டு
வந்த எனது பெருந்தகாய்ப் பாவையை
நானே விழிப்பினும் நீக்கிடாதலின் யான்
செல்வேனென விடை பெறுகிறது.

— பெண்ணைக் கொள் பாடியது —

114. நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பி
நின் குறி வந்தனென் இயறேர்க் கொண்க

செல்கஞ் செலவியங் கொண்மோ வல்லே
மார லதிர்தரும் வயிற்ற
நாரை மிதிக்கு மென்மக ணுதலே

உரை:- அழகிய தேரையுடைய வெற்றி யிலைத்தெறிந்தவனே! நெய்தற் பரப்பிலே யுள்ள யைங்கொற்பறையை இட்டுவைத்து நிலைத் இனிய செறிவிடைத்து வந்தேன்;- ஆங்கே யாம மில்லாமையால் நாள்தோறும் ஆரல்மீன் திரண்டிருக்கும் வயிற்றினையுடைய நாரை, எண்மகளுடைய பாவையின் நெற்றி மிதித்து உழக்காநிற்கும்; ஆதலால் யாங்கள் செல்லா நிற்போம்; இனிச் செல்லும்படி நீயே போத விடையாக; (எ-று)

வந்தனை என்றும் எண்மகள் என்றும் உரிமையோடு கூறியவள் செல்கம் என்று உடம்பாட்டுத் தன்மைப் பன்மையாற் கூறியது தில் புல்பட வந்ததைத் தீர்க்கிறது வேண்டு மென்க. செலவியங் கொண் என்றது நீ புண ர்ந்து விட்டபின் யான் இருந்து அழைத்துச் செல்ல வேண்டுவதில்லை நீயே அவளைப் போ தவிடுவா யென்றவாறு.

மெய்ப்பாடு- பெருமிதம்; பயன்- தோழியைக் குறித்தல்.

164. பாலை.

இதுவும் உடன் போக்கின்கண் நிலைப்படுத்து மீளுந் தோழி தலைமகற்குச் சொல்லியது.

எ-து, இரவிலே உடன் கொண்டு செல்லு

மாறு திருவினையத் திருவன்பால் கொண்டு.
பேய்விட்ட தொழில் திருவின் நோக்கினானே
இவர் சொல்லா த[ஸ்ளா]தலால் புலவியுண்
டாகாத காரணம் அறிப்பாயெனக் கூறினாளது.
(கிழவோன் பெயர் சொல்லப்படாள்)
115. நாடுதோன் றிருந்த பேரறிவுடையோ
யொடு நின் றுடைய காயினும் புரிந்து
புலவி தீர வலிவதி யிருந்தவர்
மடமை யொழுகிய தண்டுறைக் காரண
மெனவரை டமையாது ஆந்த
நன்மை நாட கின்னைல திலரோ.

உரை:— தொடையார் இதுகள்
உதிரப்பட்டு அசைகின்ற மேற்கிளைகளையுடைய
தண்ணிய நறிய காவின் கண்ணே மெல்லிய
நடையையுடைய மயிலைப் போலாகிய
நல்லவரிடத்தே இவன் தான் சொல்லுகின்ற
ப்பிரிவுக்கு உடையவனல்லன்;—
ஆதலின் பெரிய நன்றியுடைய வெனக்கு செய்
யின் அதனை மறக்கமாட்டாதேவ
னாகிய அவனை இவன் பெரிய நன்றிக்கு
செய்யும் ஆற்றலன்; மெய்ப் பிரிவாக்குரிய
செவ்வித்த ஓர் நன்றியைச் செய்
தானை யாயினும் பெரு நன்றி செய்தல்
போன எனக்கு அன்பு மாட்டினைப்பட்டு
இவனுக்கு கொண்டாடும் புலவியுமின்றி யானே
தீர்வன செய்வாயாக; (எ-று)
புரி- அன்பு; ஒழி- ஒன்றியவனை.

அசை - மெல்லில். ஊ - எதிர்மறை.

உள்ளுறை - கானலிற் கவர்கிலின்றி மனை யாதுஞ்சு நாடன் என்றது அடைந்தார் கவர்கிலின்றி இனிதிருக்கச் செய்வதென்றவாறு.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - தெளிவித்தல்.

115. கூற்று - பண்பு மாறாட்டல்.

இது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்பு தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

எ-து, அலைநத் தெளித்தவன் நால் காதலி கூந்தல் கானிற்றுறையில் குடுமணல் பழந்தாற் போன்ற நெறிப் பொருள் இளிச்சி யுடையதெனத் தலைவன் பண்பு மாறாட்டக் கூறியது. — இளங்கீரன் பாடியது.

116. யானையர் துறைபோ டொம்பல் கூந்தல்
வளர் கெழு கொழு இறாக்கைப் பெருந்துறை
துணிமர வாழ் யானர் தன்னை
நன்னெறி யவ்வே நறுந்தண்ணியவே.

உரை:— யானை விடுபட்டுக் கூடுத் திரியலாயுறைகின்ற காதலியுடையதேன் மைப்பயில் கூந்தல் வளமிக்க கொழுந்து உறையுங் கில் வருகின்ற காவிரி யாற்றின் சாலிய துறையினிடத்தே துண்ணிய குடுமணல் பழுந்தா லொத்த நல்ல நெறிப்பினை யுடையனவாய் நறிய இனிக்கிளையு முடையனவா யிருக்கின்றன; அத்தகைய பண்புடைவிடாய் பிரிவைத் தகைய கொடிய தாமே (எ-று)
அசை - குடுமணல்.

166. நெய்தல்

இது வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

எ-து, தலைவன் வரைந்து கொள்ளாது சில காலந் தாழ்ப்ப அதனால் தலைவி உடம்பு நனி த்திருமை கண்ட தோழி தலைவன் வாராதொழியினும் மெலிந்து, பெரிய வளைகள் கழன்றொழி வளை கிடப்ப இறு விரைந்து அவர்வரை வாராதி யானி வேறுவளைக் கொண்டு கொடுப்பது.

- இன்றியமையார் படுவது.

117. மாரியாம்பலன்ன கொக்கின்
பார்வலஞ்சிய பருவரலீர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீஇய அண்டர்
கயிறரி யெருத்திற் கதழுந் துறைவன்
வாராதமையினு மமைக.
சிறியவு முளவோ நின்வளை விலைவே

உரை:- மாரிக்காலத்து அல்லி மலர் விரிந்தாற் போன்ற கொக்கினது பார்வையைக் கண்டு அஞ்சிய துன்பத்தையுடைய குளிர்ந்த ஞெண்டு கண்டல் மரத்தின் வேரின் கீழுள்ள அளையிற் செல்லும் பொருட்டு ஆயர் கயிறு .... போல அழுந்திப் புகாநின்ற துறையையுடைய தலைவன் தான் நினைத்த காலத்து வந்து மணந்தானில்லை; அதனால் நின்னுடைய மேனித்துக் கைவளைகள் கழன்றொழிவன வாயின; இனி அவன்

வாராது அங்கேயே இருப்பினும் இருப்பா
ளை; இங்கில்லை யில்லேன் கையில் [illegible]
களுமோ; அவற்றை [illegible] அறிகிறேன்;
கொக்கின் பார்வைக் கஞ்சிய ஞெண்டு
கண்டல்வேரளை வீழ் விரைக்குப் புகா நிற்கு
மென்றது அன்னையின் சிறைக்குக் கஞ்சிய
தலைவி இற் செறிக்கப் பட்டனளோ அடங்கி
யிருக்கு மென்றதாம்.
கண்டல் - தழைமரம்; முள்ளியுமாம் - அண்டர் - ஆயர்.

167. - பாலை.

இது வரைவு நீட்டித்த வழித் தலைமகள்
பொழுது கண்டு தோழிக்குச் சொல்லியது.
என்றது (வெளிப்படை)
அங்ஙனம் கூறுகின்றவள் பின்று
மாலையில் நமது கோட்டை வாயில் கதவுசா
த்துங் காவலர் உள்ளே புகுத யாருமிருந்தீ
ருண்டோ வென்று விளித்துங் சேர்ந்திலர்
[illegible] நாயகன்றி நங்காதலர் வந்திலரென
அழுங்கிக் கூறுகின்றது.
- நன்னாகையார் பாடியது.

118. புள்ளும் மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நாரில் மாலை
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீ ருளீரோ வெனவும்
வாரார் தோழிநங் காதலோரே.

உரை:- தோழி! பிரிந்திருக் கின்ற

பறவைகளும் விலங்குகளும் வருத்தத்துட
னே தங்கியிருப்ப நின்னொன்று மேனைசயு
டனே வந்த அன்பற்றுமாலைப் பொழுதிலே
பலரும்புகும் கோட்டை வாயில் மூடும்படி
யாகக் கதவைச் சாத்த வேண்டி விரைவோர்
இன்னும் யாரேனும் வருகின்றீர் உண்டோ
வென்று கூறவும் அப்பொழுது பஞ்சவர் கோ
ட்டைக்குள் வந்தார்கள். அவரேனும்
வருவரோ வென நோக்கினேற்கு காதலர்
அவ்விடத்தும் வந்தாரில்லை; (எ-று)

புலம்பு - தனிமை. நாளொடு. நாளொன்
றும் தனைசயுடனே - நாள். அன்பு.
மெய்ப்பாடு - அழுகை; பயன் - அயர்வுயிர்த்தல்.

168. குறிஞ்சி. பாங்கற் கூட்டம்.

இந்த இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த
பின்பு தலைமகன் பாங்கற் கூட்டத்தது

எ-து, இயற்கைப் புணர்ச்சியின் பின்பு,
பாங்கற் கூட்டத்துத் தலைமகன் பாங்கனை நினை
த்தவளவிலே வந்த பாங்கன் கண் இளிவரவும்
வாட்ட முற்றதனைத் தலைவன் வேறுபா
டித்து என்ன இவ்வாறு வருந்தினையெனக்
கடாகின்றது. — சத்திநாதன் பாடியது —

119. இருவெள் ளாலி னெய்வரிக் குடுமி
காமனை யாசில யானைப்பி யாஅங்
கிரியன் முகலாய வெயிற்றாள்
கலியுடைக் கதியவெம் மனைப்பி னேனோ.

உரை:- அழகிய வரிகளையுடைய சிறிய வெள்ளிய பல்லின் இட்டு காட்டுவளிடத்துள்ள பெரிய யானையைத் தீண்டி வாட்டப்படுகின்ற போல, இளமையுடையவளும் மிகத் தகிய எயிற்றினையுடையவளும் விரைய மணந்த கை யையுடையவளுமாகிய நடு தொடிக்கி என்னை இங்ஙனம் துன்புறுத்தினாள்; (என்று)

இ-ரை- இட்டுப் பல்லு;

மெய்ப்பாடு- அழுகை; பயன்- பாங்கற்கு உணர்த்தல்; 'அரியமா நாவின் இருவரும் மனங்கலந்து வழிந்து' இறையனார் களவியல் உரை சூத்திர மேற்கோளாயும் காட்டுக.

169. (1) இஃது அல்ல குறிப்பட்டு மீண்ட தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

எ-து, இரவுக்குறி வந்த தலைமகன் குறி யல்லாதத்தைக் குறியென்று மீண்டு பலகால் அலைந்து கூடப் பெறாஅ நெஞ்சை நோக்கி, நீ அரியதனை விரும்பினை யெனக் கழறிக் கூறுகின்றது.

(2) இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிந்த வழிக் கலங்கிய தாமம்.

எ-து. (வெளிப்படை) உரை இனம் புரிந்து கொள்க. — பரணர் பாடியது-

120. இல்லோன் இன்பங் காமுற் றாஅங்
கரிது வேட் டனையா னெஞ்சே காதலி
நல்ல ளாகுதல் அறிந்தாங்

அரியள் ஆகுதல் அறியா தோயே.

உரை:- நெஞ்சே! நம் காதலி மிக்க
அழகுடையளாகுதல் மட்டும் அறிந்து
அவள் நமக்கு எய்தற்கு அரியளாதல் அறியாதோய்!
வறியவ னொருவன் அறஞ் செய்து அதனாற்
பெறுதற்குப் பொருளைக் காமுறுதலோ
டின்றிப்ப அந்நெறிக்கட் செல்லுதலிலனாகி
வறிதே காமுறுதல் விரும்பினாற்போலவும்
அரியளாகிய அவ் வொருகாரிகையை விரும்பினை;
(எ-று)

170. இஃது இரவுக் குறி வந்த தலைமகன் செ
ய்யுங் குறி பிறிதொன்றனாலிகழ்ந்து மற்று, அ
வன் குறியை எதிர்த்த வழி அப் பொய்ப்புணர்வை
மெய்ப் பொருளாக வுணர்ந்து சென்றாள்;
ஆண்டு அவனைக் காணாது தலைமகள் மயங்
கியவழிப் பின்னர் அவன் வரவுணர்த்திய
தோழிக்குத் தலைமகள் கூறியது.

எ-து, (வெளிப்படை) அல்லகுறிப்பட்ட
தலைமகள் அவன் வாராததற்கு இரங்கி என்
தோள்கள் பசந்தன கண்டாய், இப்பொழு
தாயினும் அவர் வந்தது உண்மைதானோ
என்னைக் கூறு என்பது.--கபிலர் பாடியது.

121. மெய்யோ வாழி தோழி சாரல்
மைபட் டன்ன மாமுக முசுக்கலை
யாற்றப் பாயத் தப்ப லேற்ற
கோட்டொடு போகி யாங்கு நாடன்
றான் குறி வாயாத் தப்பற்குத்

தான் பசந் தனவென் னுடைமைத் தோளே.

உரை:- தோழீ! நீ வாழ்வாயாக;
சாரலின்கண் தேனை யமைத்திருந்தாற் போன்ற
கரிய கொத்தினையுடைய மந்தியின் தலைவன்,
மரத்தின் இலைகள் பொருந்திய படிவாது
திவறு திசை நிலை இலையுடைய படிப்பாய்ந்து
தன்னைத் தாங்கிய இலையை முறித்துக் கொ
ண்டு போனாற் போல, நமது நிறையுறும்
காலத்து வாராது புட்கள் தாமே வெறுத்து
இயல்பு மாறும் கிட்டுத்துப் பின்பு நம்மை
வருத்திச் சென்றும் மேனாடன் செய்தது
வாய்ப்புடைத்தாகாத தெவ்வாறினும் கொண்டு
உடைய அகன்ற மெல்லிய தோள்கள் பசப்புற்
றனவே; இப்பொழுது அவன் வருவது
உண்மை தானோ? (எ-று)

171. நெய்தல்.

இது தலைமகள் பொழுது கண்டு கூறியது.
எது, தலைவன் பிரிந்து இருந்த பருவத்து
காமநோயால் மாலைப் பொழுதைக் கண்ட
தலைவி அவர் வாராமையால் மாலைத்துணையாக
வாராதிருத்தலை, அஃதொன்றுதானே அருந்
துக் கண்டும் வந்துறைந்து இன்னாக்
காமநோய் வேளை வருத்திக் கூறுகின்றது.

தீம் பேரியனார் பாடியது.

122. வைப்பல் காற் தொகுதியின் புன் புறத்திற்றை
குன்றின் நாம் பாடும் கூட்டின சின்னிலை
வாந்தன்று வாழியோ மாலை

யொடு தானன்றே கலிதருமுனைத்தே.

உரை:- பசிய காலையுடைய கொக்கி
னது புல்லிய முதுகு போன்ற அரும்பான
நீர்நிலைமுளைந்த அல்லியின் மலரினைத் தாங்க
ம்பிவிட்டன; இனி மாலைப் பொழுது என்ற
வருத்துமாறு வந்து சாயாநின்றது;
தனித்திருக்கும் பெண்பாலாரை வருத்துவந்த
இம்மாலைப் பொழுது நீடு வாழ்வதாக; வந்தது
இல்கொண்டு தானோ? அன்று. இதனைய
டுத்து இராக் காலமும் வருதலையுடையதா
யிரா நின்றது. இவ்விரண்டும் செய்யுந்
துன்பத்தால் யான் எடுத்திய இருந்து வருதி
யுடையேனாகினேன்; என்னைப் போக்கி இவ்
விரண்டும் நீடு வாழ்க வாழ்க—)

வாழி. இகழ்ச்சிக் குறிப்பு. என்னை நீறு
க்கும் கொடுமையாலே இவ்விரண்டும் வி
ரைந்து கொடுமையைக் கொண்டு இகழ்ந்து
கூறியதாம். அம்பல் கூடம்பியது இக்கொடிய
மாலையை நோக்கி மருந்தியனைத்து

172. நெய்தல்

இது, பகற்குறியிடத்து வந்த தலைமகனைக்
கண்ட தோழி அவன் இரைப்புறத்தானை
அறிந்து தலைமகட்குச் சொல்லியது.

எ-து, (வெளிப்படை) கூறுகின்றவள்
அவர் வந்ததனில்லை நமக்கு அவன் மார்பின்வி
த்தும் படும் மாத்திரைக் கொல்லாநின்ற தெனக்

கூறுகின்றது. - ஐயூர் முடவனார் பாடியது.

123. இருடிணிந்தன்ன வீர்ந்தண் கொழுநிழ
னிலவுக் குவித்தன்ன வெண்மண லொருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழிற் புலம்ப
வின்னும் வாரார் வரூஉம்
பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே.-

உரை:- நிலவை ஒருசேரக் குவித்தாற் போன்ற வெள்ளிய மணற் பரப்பின் ஒருபக்கத்தில் இருளைத் திணித்ததையும் ஒருசேரத் திணித்து வைத்தாற் போன்ற! ஈரிய தண்ணியதாகிய கொழுவிய நிழலையுடைய கரிய கிளைகளையுடைய புன்னை மரங்கள் சூழ்ந்த பூஞ்சோலை வறிதாயிருக்கும்படி இன்னும் நங்காதலர் வந்திலர்; இனி அவர் வந்தாலும் நம்மைச் சேர்தற்கியலாவாறு பலவாய் மீன்களைப் பிடிக்கச் சென்றிருந்த எனது ஐயன்மாருடைய கட்டுமரங்கள் (மீன்பிடிப் படகுகள்) இப்பொழுது உட்செல்லாநிற்பன காண்; யாம் யாது செய்கிற்போம்; (எ-று)

நிழல் இருடிணித்தன்ன வென்றது பிறரறிதற் கியலாவிடமாதலிற் பகற்குறிக்குதக்கிடமென அவனுக் குணர்த்தியது; திமில் வருமென்றது - வந்தாற் கூடுதற் கியலாதாதலின் வரைவின் கண் மணங் கருதுக வென்றதாம்; இன்னும் வாராரென்றது தலைவன் பால் வைத்த காதல் புலப்படுத்தியது.

173. பாலை.

இது, புணர்ந்துடன் போக்கின்கண் தலைமகளை ஒழியப் போகலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

எ-து, உடன் போக்கில் தாம் கருதிய வாதலால் யாங்களும் அழைத்துச் செல்ல வென்றதைத் தோழி நோக்கிப் பெரும நும்மொடு செல்லாள் காண்குவல் காட்டுள் தனியே இருக்கும் அன்னையின் மனையோ வென உடன்படுத்தாகின்றது

—பாலைபாடிய பெருங்கடுங்கோப் பாடியது—

124. உமணர், சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
யூர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்கா
டின்னா வென்றி ராயின்
இனியவோ பெரும தமியேற்கு மனையே.

உரை:- பெரும! உப்பு வாணிகர் பலர் கூடிவந்து தங்கியிருந்து ஆக்கியருந்திச் சென்ற பக்கங்களையுடைய அகன்ற இடமெல்லாம் ஊர்கள் குடியிருந்து பாழ்த்துப் போனாற் போன்ற ஓமை மரங்கள் மிக்க பெரிய காடு; நீ நடந்து வருதற்கு இயலாத இன்னாமையையுடையன வென்று கூறுகின்றாயின் நும்மைப் பிரிந்து தமியேமாக் இங்குத் தங்கியிருத்தற்கு இடமாகிய பக்கத்தை இனியவாயிருக்கின் றனவோ? அல்லவே;

174. நெய்தல்.

இது, வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்கு இறைப்புறமாகச் சொல்லியது.

எ-து, மணஞ் செய்து கொள்ளாமல் கால
நீட்டிப்பக் கண்ட தலைமகள் தோழியை நோக்கி
யான் இன்னும் மிடைக்கிறேன். என் நலனே
தொலைவடைந்து சென்றொழிந்த தெனக் காதலன்
ஒருபுறத்தில் வந்து மறைந்திருப்ப அவன்
கேட்டுத்தெளிவில் வரைவுபடக் கூறியது
அம்மூவனார் பாடியது.

125. இலங்கிலை நெகிழச் சாஅய் யானே
புலம்பனென் வாழி தோழி சாரல்
தழையணி யல்குல் மகளி ரெல்லாம்
விழவயர் பட்ட வென்னலனே பழவிறல்
மறவலர் தப்பிய பைதறு நறை
நிரைதேய் வாலிக நீர்மலி தெங்கின்
தண்ணந் துறைவனொடு கண்மாறின்றே-

உரை:- தோழீ! என் வாட்டமுற்று
படாது நீயெனும் நீடு வாழ்வாயாக! யான்
விளங்கிய என் கைவளைகள் கழன்று விழு
மாறு உடம்பு இளைத்துப் பொற்றும் இன்னும்
அவர் வருவரோ வென்றும் ஆசையினால்
உயிர்போகாநின்றேனே; நான் உயிர்போக
இத்திங்களும் என்னுடைமையாகு;- சாரலின்
கண்ணேயே தழையணிந்த அல்குலை யுடைய
மகளிர் பலரும் திருவிழாவின்கா
ட்டில் மேம்பாடுடைய எனது நலன் பழமை
யான வலிமையை யுடைய கிறாதின வலிமை
குறைந்த வருத்தமிக்க நாரை அம்பேய்

தொகுப்பட்ட விலங்கு புன்னைக் கிளைமீதிருக்கும்
தன்னிய துணைவனுடன் கூடி நின்று
இடம் மாறிவிட்டது; ஆதலின் இனியாறுய்வேன் (எ-று)
மெய்ப்பாடு- அழுகை; பயன்- வரைவுடம்படுத்தல்.

125. முல்லை.

இது பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

எ-து, பிரிந்த தலைவன் குறித்த பருவத்து வாராமையால் அது கண்டு வருந்திய தலைமகள் தோழியை நோக்கித் தோழி நம் காதலர் இங்கே வாராது அங்கேயே போயினரென்று அவர் குறித்த மேகமே என்னைப் பார்த்து நகை செய்கின்றது தானெனக் கூறுகின்றது.

- ஒக்கூர் மாசாத்தியார் பாடியது -

126. இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரா ரெவனரோ வெனப்
பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே.

உரை:- தோழி! இவ்விளமைப் பருவம் கழிந்தால் மீட்டும் எய்தற்கரியதாமென ஆராயாமல் பொருள் தேடுதல் விருப்புச் சென்ற நங் காதலர் இக்காலத்தும் வந்தாரிலர் ஆதலின் அவர் எவ்விடத்திருக்கின்றனரோ கிடைக்கிறியாவ தென்னென்ன மழை பெய்து பாதுகாத்த அழகிய முல்லைக்கொடியின்

மிக்க அரும்புகளை நகைக்குத் தோற்றிய விளங்கிய பற்களாகக் கொண்டு நகுகின்றதுபோல இம் மேகம் என்னை நகை செய்து இகழா நின்றது; இப்பொழுது அறிவில்லாத காடு மிகு முல்லை இருந்தவாறென்றவாறு; (எ-று)

பாரார் - நச்சியிருந்து: புறந்தரல் - பாதுகாத்தல் தான் மழை பெய்து காத்தமையால் முல்லையைத் தன்னுடைய தங்கைக் கொண்டு நகை செய்த தென்க. பெயல் - பெய்தலான் மென்புதர்ந்த முல்லை தளிர்த்துப் பூத்தமை கூறுதலாலே பருவங் கழிந்தும் தோழியும் வாராமை இருந்ததாம.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றுவித்தல்.

176. மருதம்.

இது, பாணன் வாயிலாகப் புக்க வழித் தலைமகற்குத் தோழி சொல்லியது.

எ-து, பரத்தை வீடு பிரிந்து மீண்டு மனைக்கண் வந்த தலைவன் காதலி உடம்படுதலை வேண்டியாகிய பாணனைத் தூதாக விட அவன் வந்ததைக் கண்ட தோழி தலைவியை நோக்கி உரைத்தனள், இவ்வொரு பாணன் கூறும் பொய்ம் மொழியாலே ஊரில்லா மற்றைப் பாணர் எல்லாம் இறந்தமை குறிப்பட்ட மாதர்கள் முன்னிலையில் தன் வளைப் போலவாகத் தானைக் கூறி உடன்படாநின்றது

- ஓரம்போகியார் பாடியது.

127. குருகு கொளக் குளித்த கெண்டை அயல

துருகெழு தாமரை வான்முகை வெரூஉம்

கழனியம் படப்பைக் காஞ்சி யூர
தொடு நின் பாணன் பொய்ய னாகி
உள்ள பாணர் எல்லாம்
கள்வர் போல்வர் நீயகன் றிசினோர்க் கே

உரை:- கொக்குச் சென்று பற்றும் அதன் வாய்க் கொத்துக் கொத்தப்பிப் பொய்கை நீர்ப்புகுந்த கெண்டைமீன் அப் பொய்கையில் மலர்ந்து அவிழாநின்ற அக்கக்கு செய்யும் வெண்டாமரைப் பூவினைக் கண்டு அதுவுமோர் கொக்கென நடுங்கா நிற்கும். வயல்சூழ்ந்த தோட்டங்களில் காஞ்சி மரங்கள் நிறைந்து பெற்ற ஊரனே! நின் ஏவலாற்றும் இந்த மொழி பாணன் எம்மொடு கூறிய மாறுபாட்டுரைச் பொய்யனாகியதனால் இனி மற்று முள்ளன வாய பாணரும் நின் தலைமை விடப்பட்ட மாதர்களுக்கு ஊனாகி ஆனாது களவு கொண்ட பொருளேனும் கையகப்பட்ட கள்வனைப் போல வஞ் செய்வதறியாது முகம் வேறுபட்டுக் கவிழ்ந்து காலால் நிலங் கிளைத்து நிற்பர்கள் (எ-று)

நீயகன்றிசினோர் - செயப்பாட்டு வினையில் வந்த செய்வினை.

உள்ளுறை:- கொக்கினைக் கொத்துக் கொத்தப்பிய கெண்டை தாமரைமுகையையும் அஞ்சாநிற்கும் என்றது இந்நின் பாணன் கூறிய பொய்ம் மொழியால் இனியும் எச்சவாயில் களுங் கூறுவனயாவும் பொய்ம் மொழியே

யானெனக் கதோன்றும் அதனின் எமக்கென
யாரோ இதை கொள் என்றதாம்.

மெய்ப்பாடு. பெருமிதத்தைச் சார்ந்த உவகையும்
பயன் அவாவின் முடித்தாள் போன்று உணர்ப்பட்டது.

177. நெய்தல்.

இரவு அல்ல குறிப்பட்டு மீண்ட தலைமகன்
தன் நெஞ்சொடு இனை நொந்து சொல்லியது.

எ-து, இரவுக்குறி சென்ற தலைமகன் செய்யுங்
குறி முன்பு நிகழ்தலால் தலைவியும் தோழியும் வந்து
கூறுபல்கா நோக்கி வெளியில் மனையிற் சென்ற
பின்பு தான் சென்று அக்குறியைச் செய்து
கிடைக்கப் பெறாமையால் மீண்ட தலைமகன் தன்
நெஞ்சை நோக்கி நெஞ்சே கிடைக்கப் பெறா
தாயக் கருதி வருந்து கின்றமையாதலின் இனை
யாகவே தான் புறமை தனைக் கூறுகின்றது.

(2) உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண், தலைமகன்
கூறியதூஉமாம்.

எ-து, பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன்
பால் தலைமகள் ஊடியவிடத்து அவன் பல
வாறிரந்து வேண்டியும் அவள் தணியாமை
கண்டு வெறுத்துக் கூறுகின்றது. உரை கொண்டு
எழுக்கும்.   பரணர் பாடியது.

128. குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
அயிரை யாரிரைக் கணவந் தாங்குச்
சேயள் அரியோள் படர்தி

நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே.

உரை:- நெஞ்சே! நாம் நோயின் பாற்பட்டு வருந்தி நின்றேனம்! கீழைக் கடலின் மேலுள்ள அலை யிடத்துத் தங்கிய சிறை யொடிந்த நாரை திண்ணிய தேரையுடைய சேரலனது தொண்டியை யடுத்த கடற்றுறைக் கணுள்ள அயிரைமீனாகிய அரிய இரையைக் கருதி மிகுந்து காலங்காத்தல்போலத் தூரியளாய் மிக்க அரியளாயினோளைக் கருதி னாய்; அங்ஙனங் கருதியதனால் நோயை மிக்கு டைமையை மன்; (எ-று) . — குறிஞ்சி —

178. இது தலைமகன் பாங்கற் குரைத்தது.

எ-து, பாங்கற் கூட்டத்துக்கண், நின் வேறுபாடு என்னுற்ற தென்று வினவிய பாங்கற்கு நெடு மாதொரு மங்கையைக் கண்டமையின் இவ்வேறுபா டுண்டாயிற்றென்று தலைமகன் பாங்கனுக்குக் கூறியது.

— கோப்பெருஞ் சோழன் பாடியது.

129. எலுவ சிறாஅர் ஏமுறு நண்ப
புலவர் தோழ கேளா யத்தை
மாக்கடல் நடுவண் எண்ணாட் பக்கத்துப்
பசு வெண்டிங்க டோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற் றெம்மே.

உரை:- நண்பனே! இளமை நலம்பெறுகின்ற நண்ப! புலமையுடையவர்க்கு அரு தோழ! யான் கூறு மொன்றைக் கேட்பாய்! அகலிய கடலின் நடுவே எட்டுக் கலைகளோடு பகுத்து வைத்தாற் போன்ற

வெளிய திங்கள் தோன்றினாற் போலக் கரிய கூந்தலின் பக்கத்திலே விளங்காநின்ற இந்த வெறிய நெற்றியினையுடையாளை யொத்தி;- புதுவதாகப் பயம்பில் வீழ்த்திப் பிடித்த யானையைத் தொடரினாற் பிணித்தாற் போல எம் மையற் பிணித்தனள் மன்; அதனால் இவ் வேறுபாடெனக் கண்டாயிற்றுக் காண்; (எ-று).

பிணித்தனள் என்பது சொல்லெச்சம். செவ்வ இறப் பெச்சம். கடல் கூர்ந்ததற்கும் திங்கள் நெற்றிக்கும் உவமை கொள்க. யானையில் என்றது படுத்தி யானையைப் போல என்று கொள்க; பொருள் பொருந்தாமை யுய்த்துணர்க.

நெய்தல்

179. இது பிரிவிடை யழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

எ-து, 'நீ அவர் பிரிந்தாரென்று ஆற்றியாமின்றதென்னை? யான் அவரின் வழியறிந்து தூதுவிட்டுக் கொணர்வேன்; நின் ஆற்றாமை நீங்கு' என்றுத் தோழி தலைமகளை ஆற்றுவித்தது (கூ) தோழி தூதுவிடுவாளாகத் தலைமகள் தானது ஆற்றாமையாற் கூறியதாமாம். (வெளிப்படை) உரைக்கு றன் முற்றிமைக்கும். - வெள்ளிவீதியார் பாடியது.

130. கிளர்ந்தொடைப் புதாஅர் கானமேறின்
விலங்கிடு முக்கின் காலிற் செல்லார்
நாட்டிடை நாட்டி நாளி நாளின்
இடைமறை இடைமறை தேறின்
நெருநெ மனோர் நல கதலோரே.

உரை:- நீழல் காதலர் கிளத்தைப் பிரிந்து கொண்டு உள்ளே புகுந்து மறைவாரிமல்லர்;

ஆதலையத் திசைகளைத் தெரிந்து கொள்ளாரு மல்லர்.
ஏதிலர் நாட்டுக்குச் செல்லாதவாறு குறுக்கிட்டுக் கிடக்
கும் கரிய கடலின் கரையிலே நடந்து செல்வாரு
மல்லர்; நாடு தோறு நாடு தோறும், அவ்வந் நாடுகளி
லுள்ள ஊரின் தோறும் அவ்வவ் வூரிலுள்ள குடிக
ளின் தோறுங் குடிகளிடந் தோறும் முறை முறையாக
ஆராய்ந்து பார்த்தால் மறைந்திருக்குங் கள்வர் தப்பிப்போ
மியல்புடையவராவரோ? அங்ஙனமாகார் காண்; (நா:ரூ)
- முல்லை.

180. இது வினைமுற்றிய தலைமகன் பருவவரவின்கட் சொல்லியது.

ஏது, தலைவியிடத்து யான் இன்னே பருவத்து வரு
வேனென்றான் அதுவே காரணமாக ஆற்றியிருப்பவளாக
வென்று கூறி வினைமேற் சென்ற தலைவன் அவ்வினை
முற்றுந் தருவாயிற் குறித்த பருவம் வரவும் ஆற்றினைத்
தன் நெஞ்சை நோக்கி நெஞ்சே. நமது காதலியிருந்த
ஊரானது நெடுந் தூரத்திலுள்ளதாயினும் நாம்
இப்பருவத்தே விரைந்து அங்குச் செல்லாமைக்கு யான்
வருந்துகின்றேனெனக் கூறியது = நக்கீரர் பாடியது.

131. ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோள்
பேரமர்க் கண்ணி யிருந்த வூரே
நெடுஞ்சேண் ஆரிடை யதுவே நெஞ்சே
யீரம் பட்ட செவ்விப் பைம்புனத்
தோரே ருழவன் போலப்
பெருவிதுப் புற்றன் றாற்றா னோயே.

உரை:- என் நெஞ்சே! அசைகின்ற மூங்கிலை
யொத்த அழகினையுடைய பருத்த தோளினையும் பெரிய
அமர்த்த கண்ணினையுமுடைய நம் காதலியிருக்கின்ற
ஊர் தான் நெடுந் தூரத்தாகத் தப்பாலதும் சென்றுதற்
கரிய நெறியிற் செல்ல வேண்டியதாயிருக்கின்றது;

அவள் பால் இறுத்த பருவமோ வந்திறுத்தே கண்டாய்;
ஆதலின் மணஞ் செய்தலான் பயம் பொருந்திச் சிறந்த
பதுக்கப்பதம் பெற்று கனிய கொல்லையை ஒரே பொ
ழுதில் விளைப்பதற்கியலாத ஒரேருடைய உழவனைப்
போல எண்ணுதல் ஆற்றானது பெரியதாக்கமுற்று
விட்டது; இதற்கியானே நோவா நின்றேன்; (எ-று)
அமர்க்கண் - விருப்புத்தரும் கண்ணையுடையாள்.
விருப்பு - நடுக்கம். பருவம் - இலக்கினையாம் தொழில்.
மெய்ப்பாடு - அழுகை; பயன் - அயர் வுயிர்த்தல்;

181. பாங்கற் கூட்டம். இது கழுநெறிக்குறை.
எ-து, பாங்கன் தலைவியைப் புற்றது கிளைவத்தில
வன் உற்றதனைத் தூது கற்ற பாங்கன், ஒருத்தி
நோக்கிற்கியான் இவ்வாறியினேனென்றால்
நின் இறைப்பிற்கு பொருந்தாதாமென்றுரைக்க நின்
பனை அம்மாயோர் மிக்கவிருப்புடையாள் அவள்
யான் எவ்வண்ணம் மறந்திருப்பேனென்று கூறியது.

182. கல்லுத் தடுங்கிளையவள் தாமர் வலைப்பினல்
இவ அமைன் புலவர் தொடைக் கூந்தலளே
யாப்பு மனைக் குறை நோயாளே ஒருங்கள்
தடுஞ்சு அறை நல்லா எடுங்கை திலக்குழலி
தாய்தான் விருப்பி னென்னை
சாய் நோக்கினளே மாஅ யோளே.

உரை:- நண்ப! என்னைக் காதலித்தப்பட்ட
அந்தமானமகிழ் முனையாள்; எண்ணிக் கிளி தும்
விடாது தழுவின் அனைத்துக் கொள்ளுமியல்புடையாள்;
கண்டார்க்கு விருப்பம் வரும் அழகினையுடையாள்;
இவ.. (இதற்கு மேல் உரை எழுதப்படக்காணவில்லை)

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
முற்றும்

Copied by M.R. Sivaprakasam Pillai
Compared by 1. M.R. Sivaprakasam Pillai 17-2-58
2. R. Ganesan 24-2-58